கொள்வது என்பது நல்லது என்று அறிவுரை வழங்கிய பெரியார் ஈ.வெ. இராமசாமி, அந்தக் கால இடைவெளியானது மணமக்களுக்கு இடையேயான புரிதல் ஏற்படுவதற்கு அவசியம் ஆவதுடன் (குடி அரசு. 01.03.1931), பெண் என்பவர் பூப்பெய்தியவுடன் கர்ப்பமாகி விட்டால், தம்பதிகள் இயற்கை இன்பம், கலவி இன்பம் போன்றவற்றை அடைவதற்குச் சிறிதளவு அவகாசம் என்பது கூட இல்லாமல் போய் விடுகின்றது என்று உலக நடைமுறை வழக்கினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். (குடி அரசு. 01.03.1931). அதுமட்டுமல்லாமல், திருமணமான உடன் அதிகக் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டால், அவர்களைப் படிக்க வைப்பதில் சிரமம் ஏற்படுவதுடன், உரிய மருத்துவ வசதிகளையும் செய்து கொடுக்க முடியாததுடன், வாழ்க்கையினையும் உரிய முறையில் நடத்துவதில் சிரமம் ஏற்பட்டு, ஒழுக்கக் கேட்டுக்கும் அதுவே காரணமாகவும் அமைகின்றது. (பெரியார் ஈ.வெ. ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 370); அதே போல், போதிய வருமானம் இல்லாத நிலையில் பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள நேரிடும் பொழுது, ஏழ்மையும், துன்பமும் அதிகமாகி வாழ்க்கை என்பது திருப்தியற்றதாகி விடுகிறது என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 01.03.1931).

பெண்கள் என்றால் வெறும் குழந்தை பெறும் இயந்திரம் என்று தான் இந்தச் சமூகமானது கருதி வருகின்றது. அதே போல், தேவையில்லாமல் அதிகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வது என்பதும் பெண்களின் உடல் நலத்திற்கு மிகப் பெரிய கேடாகவே அமைகின்றது. (குடி அரசு. 01.03.1931). அவ்வாறு குழந்தைகளைப் பெறுவதாலேயே பெண்கள் தங்களின் சுதந்திரம், மானம், அறிவு என எல்லாவற்றையும் இழந்துவிட நேரிடுகின்றது. மேலும், பெண்கள் குறைந்த பட்ச தன்னதிகாரம் பெற்றவர்களாய் விளங்குவதை விட, குழந்தைகளைப் பெறும் அடிமை இயந்திரமாகவே இருக்க வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். (குடி அரசு. 01.03.1931). எனவே, பெண்களின் சுதந்திர வாழ்விற்குக் கர்ப்பம் அடைதல் என்பது பெரிய இடையூறாக இருக்கின்றது. பெண்கள் விடுதலை அடையவும், தன்னதிகாரம் பெறவும் கர்ப்பத்தடை என்பது அவசியமாகின்றது என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 06.04.1930.)

பொதுவாகவே, நாட்டின் பொருளாதார நலன், குடும்பச் சொத்து குறையாமல் இருக்க வேண்டும் என்பவைகளைக் கருதியே கர்ப்பத்தடை என்பதனைச் சமூகத்தில் பலர் ஆதரித்து வந்தபொழுது (குடி அரசு. 06.04.1930), சுயமரியாதைக்காரர்களோ இவைகள் எதையும் முக்கியமாகக் கருதாமல், பெண்களின் நலத்தினையும், விடுதலையினையும், தன்னதிகாரத்தினையும் கருதியே கர்ப்பத்தடை என்ற முறையினை ஆதரித்தனர். (குடி அரசு. 06.04.1930).

### கற்பெனப்படுவது யாதெனில்:

பெரியார் ஈ.வெ. இராமசாமி, 'கற்பு' என்ற வார்த்தையின் மீதான அரசியலை கட்டுடைத்ததுடன் (depoliticized), அதற்கான பகுத்தறிவு விளக்கங்களையும் மக்களிடம் தெளிவுபடுத்தினார். (குடி அரசு. 08.01.1928).

பொதுவாக ஆணாதிக்கச் சமூகமானது 'கற்பு' என்பதனைப் பெண்ணினத்திற்கான முதன்மைக் கடமை என்று கட்டமைக்கின்றது. அத்தகைய 'கற்பு' என்ற கருத்தியலைக் கட்டுடைப்பதன்

மூலமே பாலின பேதமற்ற சமதர்மச் சமூகத்தினைப் படைக்க முடியும் என்று தீர்க்கமாக நம்பினார் பெரியார் ஈ.வெ. இராமசாமி.

பெண்ணானவள் ஆண்களுடைய சொத்து என்பதே ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்களின் நிலைமையாகும். மேலும், பெண்களைக் 'காப்பாற்றுகின்ற' ஆணுக்கு அவர்களை அடக்கி ஆளுகின்ற உரிமைகளை ஆணாதிக்கச் சமூகச் சட்டங்கள் தாராளமாக வழங்குகின்றன. (குடி அரசு. 01.03.1936). இதுவே 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டுமே உரித்தானது, அதனை ஆண்களுக்கு வலியுறுத்தக் கூடாது என்று தனியுடைமைச் சமூகம் கட்டமைப்பதன் அடிப்படைத் தத்துவமாகும் என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 01.03.1936).

'கற்பு' என்ற சொல்லோ அதற்கு இணையான வேறு ஒரு சொல்லோ, ஆணுடல் மீதான கற்பின் அவசியத்தைக் குறிக்க இதுவரை பயன்படுத்தப்படுவதே இல்லை. (குடி அரசு. 12.02.1928). அதுபோலவே, ஆண்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க எந்தவொரு மொழியிலும் தனி வார்த்தைகள் என்பது இல்லை. அத்தகைய சொல்லாடல்கள் பயன்பாட்டில் இல்லாமைக்கு, மொழியில் நிலவி வருகின்ற ஆணாதிக்க மனோபாவமே தவிர வேறேதும் காரணம் இல்லை என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி (குடி அரசு. 08.01.1928; குடி அரசு. 26.10.1930), அதைத் தவிர அக்கருத்துக்கள் எல்லாம் அறிவுக்கு ஏற்ற முறையில் சமூகத்தில் கட்டமைக்கப்படவில்லை என்பதனைக் குறிப்பிடுகின்றார். (விடுதலை. 04.05.1973). மேலும், பெண்களை மிகவும் கீழானவர்களாகவும், அவர்களைக் 'கட்டுப்பாட்டிற்குள்' வைத்திருக்கச் செய்யவும் ஏற்படுத்தப்பட்ட கற்பிதங்களே இந்தக் 'கற்பு' என்ற கருத்தியலாகும். இவ்வாறு பெண்களை அடிமைகொள்ளச் செய்யக்கூடிய கருத்துக்களை எந்தவொரு காலமும், அறிவுடைய மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடவே கூடாது என்று பெரியார் ஈ.வெ. இராமசாமி குறிப்பிடுகிறார். (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 366).

கற்புள்ள பெண்களை குறிக்கக் கூடியவை களாகச் சொல்லப்படும் சொற்களான 'பத்தினி', 'பதிவிரதை' போன்றவைகள், பொதுவாகவே முட்டாள்தனத்திலிருந்தும், மூர்க்கத்தனத்தி லிருந்தும் தோன்றியவைகளாகவே இருந்து வந்துள்ளதனைச் சுயமரியாதைக்காரர்கள் சுட்டிக்காட்டினர். (குடி அரசு. 01.03.1936). இந்தப் 'பத்தினி', 'பதிவிரதை' போன்ற வடசொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்களாக இல்லாததுடன், தமிழகக் கலாச்சாரத்தினையும் பிரதிபலிக்கக் கூடியவைகளாகவும் இல்லாமல் இருப்பதைக் குறிப்பிட்ட பெரியார் ஈ.வெ. இராமசாமி, பார்ப்பனீய ஆணாதிக்கக் கருத்தியலின் மூலமே தமிழ்ச் சமூகத்தில் 'கற்பு' என்ற கருத்தியலானது 'பதிவிரதை' என்ற பொருள்படும்படி வலுவாக நிலைநிறுத்தப்பட்டுப் பெண்களை அடிமைப்படுத்துகின்றது என்றார். (விடுதலை. 04.05.1973).

அதே வேளையினில், பெண்களைப் பற்றி தர்ம சாத்திரங்களும், இதர நூல்களும், பெண்களால் எழுதப்பட்டு இருக்குமானாலும், அல்லது 'கற்பு' என்கின்ற வார்தைக்குப் பெண்களால் விளக்கங்கள் எழுதப்பட்டு இருக்குமானாலும், 'கற்பு' என்பதற்குப் 'பதிவிரதம்' என்கின்ற பொருள்படும்படியான கருத்தினை எழுதி இருப்பார்களா? என்ற கேள்வியினையும் பெரியார் ஈ.வெ. இராமசாமி எழுப்பினார். (குடி அரசு. 08.01.1928). சனாதன / 'இந்துக்' கடவுள்கள் என்பவற்றிலும் கூட ஆண்கடவுள்களுக்கு மட்டும்

'கற்பு' என்பது வலியுறுத்தப்படுவதில்லை. (குடி அரசு. 01.03.1936). சனாதன / 'இந்து' மதப்படி, 'பதிவிரதை' என்பதற்கும், ஒழுக்கம், நற்குணம், நற்பண்புகள் என்பதற்கும், தொடர்புகள் என்பது பெரியதாக இருந்ததாகவும் அறிய முடியவில்லை. கணவன் சொல்லுகிறபடி நடப்பது தான் பதிவிரதத் தன்மையாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதை வலியுறுத்தவே புராணங்களில் பதிவிரதைகளின் கதைகள் புனையப்பட்டு வந்துள்ளன. (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 365).

மேலும், இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு பெண்ணானவர் பதிவிரதையாக இருக்கவேண்டும் என்றால், அவர் எவ்வளவுக்கு அடிமை உணர்வோடு இருக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அப்பெண்ணானவள் உயர்ந்த பதிவிரதையாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். (விடுதலை. 28.06.1973.) அவ்வாறு ஆகச்சிறந்த பதிவிரதைகளாக இதிகாச புராணங்கள் கூறும் பெண்களும் கூட இன்பமானதொரு வாழ்வினை வாழ்ந்ததாக அறிய முடியாததுடன், அவர்களில் சிலரும் 'விதவைகள்' என்ற நிலையினையும் அடையவே செய்கின்றனர் என்பதை பெரியார் ஈ.வெ. இராமசாமி குறிப்பிடுகின்றனர். (விடுதலை. 04.05.1973).

'கற்பு' என்பதற்குப் 'பதிவிரதம்' என்று குறிப்பிடப்படுவதன் மூலமும், பெண்களை விட ஆண்களானவர்கள் செல்வம், வருவாய், மற்றும் உடல் வலிமைகளைக் கொண்டவர்கள் என்ற பிம்பங்களைக் கட்டமைக்கப்படுவதன் மூலமும், பெண்கள் அடிமையாவதற்கும், ஆண்களை மூர்க்கர்களாக்கி, ஆண்களுக்கு மட்டும் 'கற்பு' என்பது இல்லை என்று எண்ணுவதற்கும் வழிவகை செய்கின்றன என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 08.01.1928).

இதனுடன் பெண்கள் என்பவர்கள் சுதந்திரம் அற்ற பொருட்களைப் போன்றவர்கள், அப்பொருட்களை' ஆண்கள் தங்களின் விருப்பப்படி எவ்வாறு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கற்பிதங்களும், ஆண்கள் சொர்க்கம் போன்ற இன்பப் பேறுகளைப் பெற, பெண்களை எந்த வகைகளிலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்ற பார்ப்பனீயக் கருத்துருவாக்கங்களையும் சுயமரியாதைக்காரர்கள் வெளிச்சமிட்டனர். (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 365).

கற்பு என்ற கருத்தியலுக்காக, மனதில் தோன்றும் உண்மை அன்பையும், காதலையும் மறைத்துக் கொண்டு, காதலும் அன்பும் இல்லாதவர்களுடன் இருக்க வேண்டும் என்ற சமூக நிர்ப்பந்தம் அழிந்தாலே, உண்மைக் கற்பு, இயற்கைக் கற்பு மற்றும் சுதந்திரக் கற்பு என்பதனை ஒருவர் காணமுடியுமே தவிர, நிர்ப்பந்தங்களினாலும், ஒரு பிறப்புக்கு ஒரு நீதி என்பதாலும், வலிமை கொண்டவன் வலிமையற்றவனுக்கு எழுதிவைத்த தர்மங்களினாலும், ஒருபோதும் உண்மைக் கற்பினைக் காணமுடியாது என்பதுடன், அது ஒருவகையில் அடிமைக் கற்பையும் நிர்ப்பந்தக் கற்பையுமே ஊக்குவிக்கும் என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (குடி அரசு. 08.01.1928).

அதேபோல், பாவத்திற்கும், காவலுக்கும், மானத்திற்கும் பயந்து பதிவிரதையாய் இருப்பவர்கள் எல்லாம், எவ்வாறு கட்டமைக்கப்படும் தகுதியினை உடையர்கள் ஆவார்கள்? (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 366). இத்தகைய 'பதிவிரதம்' என்ற கருத்துருவாக்கம் உண்மையெனில், தமிழர்களின் வரலாற்றில், அவர்களின் எண்ணிக்கையில், தமிழர் வரலாறு தொடங்கிய காலம்தொட்டு

இன்றுவரை, ஒரே ஒரு பெண்ணைத் தான் பத்தினியாகவும், பதிவிரதையாகவும் போற்றப்பட வேண்டியவர்களாகக் கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது என்றால், இது தமிழ்ப் பெண் சமூகத்திற்கு இழிவும் பழியுமே ஆகும் என்றார் பெரியார் ஈ.வெ. இராமசாமி. (விடுதலை. 04.05.1973).

'கற்பு' என்ற பெயரில் உண்மையான அன்பானது அலட்சியப்படுத்தப்பட்டே வருகிறது. கற்பு என்ற கருத்தியல் அப்படியே அவசியமானால் அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும் என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி. 'கற்பு' என்பதனைச் சுகாதாரம், உடல்நலம் மற்றும் பொது ஒழுக்கம் சார்ந்து மட்டுமே ஆதரிக்கச் செய்தார். (குடி அரசு. 01.03.1936). வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும், காதல் அன்பிற்காகவும் இருவரையும் 'கற்பு' என்னும் சங்கிலி கொண்டு எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் கட்டட்டும். அதைப் பற்றிக் கவலை இல்லை என்று கூறிய பெரியார் ஈ.வெ. இராமசாமி, ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கிற கற்பு அடிமைப்படுத்துவது மூர்க்கத்தனமே அல்லாமல், அதில் கடுகளவு உண்மையும் நாணயமும் பொறுப்பும் இல்லவே இல்லை என்றார். (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1. பகுதி. 2. 2009: 366). மேலும், பெண்களுக்கு விடுதலை என்பது வேண்டுமானால், 'ஒரு பிறப்புக்கு ஒரு நீதி' வழங்கும் நிர்ப்பந்தக் கற்பு எனும் முறையானது ஒழிந்து, 'இரு பிறப்பிற்கும் சமமான, சுயேச்சைக் கற்பு முறை ஏற்பட வேண்டும் என்றும் பெரியார் ஈ.வெ. இராமசாமி குறிப்பிடுகிறார். (குடி அரசு. 08.01.1928; குடி அரசு. 01.03.1936).

**விபச்சாரம்:**

நாட்டில் ஒழுக்கம் சீர்பட வேண்டுமெனில், விபச்சாரம் என்ற அமைப்பின் மீதுள்ள கெடுபிடிகள் தளர்த்தப்பட்டு, விவாகரத்தும், விதவை மறுமணமும் நடைபெற வேண்டும். அத்துடன் ஆண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதில் ஏற்படும் தயக்கமின்மையும் ஒழிக்கப்பட வேண்டும் என்றனர் சுயமரியாதைக்காரர்கள். (குடி அரசு. 28.09.1930). ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் வாழலாம், எவ்வளவு பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம் என்கின்ற வழக்கமே விபச்சாரத்தினை வளர்க்கின்றது என்பது பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் கருத்தாகும். (குடி அரசு. 16.06.1935). அதே போல், ஆண்கள் விபச்சாரம் என்பதில் ஈடுபடாமலே இருந்துவிட்டால், பெண்கள் மட்டும் எப்படிக் கெட்டுப் போய் விடுவார்கள்? என்ற அடிப்படைக் கேள்வியினைப் பெரியார் ஈ.வெ. இராமசாமி எழுப்பினர். (விடுதலை. 11.10.1948).

விபச்சாரம் என்பதன் அடிப்படைத் தத்துவமே பெண்ணானவர்கள் ஆண்களின் அடிமைகள், ஆண்களுடைய போகப் பொருட்கள், பெண்களை விலைக்கு விற்கவும், வாடகைக்கு விடவும் செய்யக்கூடிய பொருட்களானவர்கள் என்பதே என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி, இது ஆண்களால் உண்டாக்கப்பட்ட சுயநலச் சூழ்ச்சியே என்றார். (குடி அரசு. 26.10.1930); கற்பு, விபச்சாரம் எனும் வார்த்தைகள் எல்லாம் வெறும் புரட்டாகவே உள்ளதனை அறிந்த சுயமரியாதைக்காரர்கள், விபச்சாரம் என்னும் சொல்லானது, வழக்கத்தில் பெண்களை மட்டுமே குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வருதுடன் (குடி அரசு. 26.10.1930), அது பெண்கள் அடிமைகள்

என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தையாகவே சமூகத்தில் நிலைகொண்டுள்ளது என்பதனைக் குறிப்பிட்டனர். (குடி அரசு. 12.10.1930).

பொதுவாகவே, விபச்சாரம் செய்வதால் உண்டாகும் ஒழுக்கக் குறைவானது வழக்கத்தில் பெண்களுக்கு மட்டும் தான் உண்டே ஒழிய ஆண்களுக்குக் கிடையாது என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி (குடி அரசு. 12.10.1930), விபச்சாரம் தொடர்பான குற்றச்சாட்டுதல்களும், பழிச்சொல்லும், பழியும் ஆண்மக்களுக்கு என்றுமே கிடையாது என்றும், அன்றியும் ஆண்களை 'விபச்சாரன்' என்று அழைக்கின்ற வழக்கமும் சமூகத்தில் இல்லாமலேயே இருந்து வந்துள்ளது என்றும் குறிப்பிடுகின்றார். (குடி அரசு. 12.10.1930).

அதுமட்டுமல்லாமல், பல இடங்களில் விபச்சாரம் என்பது ஆண்களுக்கு ஒரு தற்பெருமையாகவும், புகழாகவும் இருக்கின்றது. சில ஆண்கள் விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களிடம் உள்ள தொடர்பினைப் பற்றி பெருமையாகக் கருதிக்கொள்கின்றனர். (குடி அரசு. 26.10.1930). அதேபோல், மதக் கோட்பாடுகள் எதிலும் விபச்சாரத்தில் ஈடுபடும் ஆண்களுக்கான தீட்டினைப் பற்றிய குறிப்புகள் ஏதுமில்லை என்று சுயமரியதை பெண்கள் மாநாட்டில் குறிப்பிட்ட இலட்சுமி அம்மையார் அவர்கள், தந்தை பெரியாரின் கருத்திற்கு வலுவினைச் சேர்த்தார். (குடி அரசு. 04.05.1930).

எனவே, இத்தகைய விபச்சார முறைகள் சமுதாயத்திலிருந்து அழிந்தொழிந்து, பெண்கள் சுயமரியாதையுடன் வாழ வழிவகை செய்யவேண்டும் என்று கூறிச் சுயமரியாதை இயக்கத்தினர், விபச்சாரம் என்பதில் உள்ள பாலினச் சிக்கல்களைக் களைய பாடுபட்டனர்.

## முடிவுரை:

இந்தியத் திருமண முறையில் கணவன்-மனைவி உறவின் முறையானது அன்புமுறை உறவாகவோ அல்லது நட்புமுறை உறவாகவோ இல்லாமல் ஆண்டான்-அடிமை உறவாகவே உள்ளது என்று சுயமரியாதை இயக்கத்தினர் கருதினர். வாழ்க்கைக்கும் மனத்துக்கும் ஒத்த மணமக்களே கூடி, இருவரும் நண்பர்களாக நடந்து கொள்ளவேண்டும் என்பதே பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் விருப்பமாக இருந்தது.

சமூகத்தில் புனிதமாகக் கருதப்பட்டு வரும் 'தாய்மை' என்ற நிலைமையின் மீதும் சுயமரியாதைக்காரர்கள் பகுத்தறிவுப் பார்வையினையே கொண்டு இருந்தனர். பெண்கள் என்றால் வெறும் குழந்தை பெறும் இயந்திரம் என்று தான் இந்தச் சமூகமானது கருதி வருகின்றது என்ற சுயமரியாதைக்காரர்கள், பெண்ணடிமைத்தனம் என்பது 'தாய்மை' என்ற கருத்துருவில் நிலைநிறுவப்படுகிறது என்றனர். பெண்கள், தங்களின் உடலின் மீது முழு உரிமையையும் கொண்டு, தாங்கள் தாய்மை அடைவது குறித்துத் தேர்வு செய்யும் உரிமையினைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் போராடினர்.

பெரியார் ஈ.வெ. இராமசாமி, 'கற்பு' என்ற வார்த்தையின் மீதான அரசியலை கட்டுடைத்ததுடன் (depoliticized), அதற்கான பகுத்தறிவு விளக்கங்களையும் மக்களிடம் தெளிவுபடுத்தினார். 'கற்பு' என்ற பெயரில் உண்மையான அன்பானது அலட்சியப்படுத்தப்பட்டே வருகின்றது என்றனர் சுயமரியாதை இயக்கத்தினர். அப்படியே 'கற்பு' என்ற கருத்தியல் அவசியமானால்

அது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதாகவே இருக்க வேண்டும் என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி, 'கற்பு' என்பதனைச் சுகாதாரம், உடல்நலம் மற்றும் பொது ஒழுக்கம் சார்ந்து மட்டுமே ஆதரிக்கச் செய்தார்.

மேலும், விபச்சாரத்தினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது விபச்சாரம் என்பதன் அடிப்படைத் தத்துவமே பெண்ணானவர்கள் ஆண்களின் அடிமைகள், ஆண்களுடைய போகப் பொருட்கள், பெண்களை விலைக்கு விற்கவும், வாடகைக்கு விடவும் செய்யக்கூடிய பொருட்களானவர்கள் என்பதே என்ற பெரியார் ஈ.வெ. இராமசாமி, இது ஆண்களால் உண்டாக்கப்பட்ட சுயநலச் சூழ்ச்சியே என்றார். 'கற்பு', 'விபச்சாரம்' எனும் வார்த்தைகள் எல்லாம் வெறும் புரட்டாகவே உள்ளதனை அறிந்த சுயமரியாதைக்காரர்கள், விபச்சாரம் என்னும் சொல்லானது, வழக்கத்தில் பெண்களை மட்டுமே குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வருதுடன், அது பெண்கள் அடிமைகள் என்பதைக் காட்டும் ஒரு குறிப்பு வார்த்தையாகவே சமூகத்தில் நிலைகொண்டுள்ளது என்பதனைக் குறிப்பிட்டனர். இத்தகைய விபச்சார முறை சமுதாயத்திலிருந்து அழிந்தொழிந்து பெண்கள் சுயமரியாதையுடன் வாழ வழிவகை செய்யவேண்டும் என்று கூறிச் சுயமரியாதை இயக்கத்தினர் விபச்சாரம் என்பதில் உள்ள பாலினச் சிக்கல்களைக் களையப் பெரிதும் பாடுபட்டனர். சமூகநீதியில், பெண்களுக்கான நீதியையும் உள்ளடக்கினர்.

### குறிப்புதவி நூல்கள்:


1. ஆனைமுத்து, வே. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள். தொகுதி. 1-6. சென்னை: பெரியார் ஈ.வெ. இராமசாமி- நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை, 2009.
2. உண்மை
3. குடி அரசு
4. திராவிடன்
5. பகுத்தறிவு
6. புரட்சி
7. பெரியார், தந்தை. பெண் ஏன் அடிமையானாள்?. சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004.
8. ......, அழியட்டும் 'ஆண்மை'. சென்னை: பெரியார் திராவிடர் கழகம், 2010.
9. ராஜதுரை, எஸ்.வி. மற்றும் வ. கீதா. பெரியார்: சுயமரியாதை சமதர்மம். கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம், 1999.
10. விடுதலை
11. வீரமணி, கி. தொகுப்பு. பெரியார் களஞ்சியம். சென்னை: பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, 2010.
12. Geetha, V and S.V. Rajadurai. Towards a Non-Brahmin Millennim: From Iyothee Thass to Periyar. Calcutta: Samya, 1998.
13. ......, Revolt: A Radical Weekly from Colonial Madras. Chennai: Periyar Dravidar Kazhagam, (n.d.).
14. Jeevanandam, S and Rekha Pande. Devadasis in South India: A Journey from Sacred to Profane Spaces. Delhi: Kalpaz Publications, 2017.
15. Revolt

## ஆசிரியர் குறிப்பு:

முனைவர் ஜீவானந்தம், சிக்கிம் ஒன்றியப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருவதுடன், அஸ்ஸாம் ஒன்றிய பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவராவார். உள்நாடு மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் பங்கு கொண்டுள்ளதுடன், அக்கருத்தரங்குகளில் அளித்த ஆய்வுக்கட்டுரைகளுக்குச் சிறப்பு விருதுகளைப் பெற்றவராவார். அத்துடன், கல்வியில் சிறந்து விளங்கியதற்காக நீதியரசர் இராசகோபாலன் நினைவுப் பதக்கமும், பல்கலைக்கழக வேந்தர் அவர்களின் நூற்றாண்டுப் பரிசும், அனந்தராம சர்மா நினைவுப் பரிசும் பெற்றவராவார். மேலும், தமிழகம், பெண்ணியம், பெரியாரியம், சமயம், தேவதாசி முறை குறித்து வரலாற்று முறையிலான ஆய்வினை மேற்கொண்டு வருவதுடன், அவற்றினைத் உள்நாடு மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்கள் மற்றும் பதிப்பகங்களின் மூலம் கட்டுரைகளாகவும், புத்தகங்களாகவும் தொடந்து எழுதியும், பதிப்பித்தும் வருகின்றவராவார்.

"… Whereas, the Dravidian people of South India, especially the Tamil people of Sangam Age, also had their ancient roots in the Indus Valley Civilization,

And we have an intensive research basis for those foundations. Yet, the geographical gap between the lands, and the time gap between the cultures, provide a challenge to that research. Those who could not accept the Dravidian theory, only place this gap, as their argument. The great scholar Dr. IravathamMahadevan, who was fully supportive of the Dravidian theory, had also referred to this gap at one point of time.

The Natives of the North and Central Dravidian languages were inherently closer to the Indus Valley, on a geographically comparative basis, yet they differ on a culturally comparative mode.

At the same time, the South Indian civilization which flourished in the Sanga Tamil classical age, exhibits close resemblance to the Indus Valley civilization. We need to reconcile these differences via newer empirical data, and that is the challenge before the Indian Research and Academia".

---

*Prof. Malcolm Adiseshiah memorial lecture series – Feb 042011,*
*International Institute of Tamil Studies,*
*Chennai, Tamil Nadu, Union of India)*

**R. BALAKRISHNAN, IAS (Retd.)**

*Research Scholar - Indus Valley Civilization,*
*Author of the Book: Journey of a Civilization:*
*Indus to Vaigai*

# தமிழே திராவிடம்!



**முனைவர். சொ. சாந்தலிங்கம்,**

*மதுரை*

**கட்டுரைச் சுருக்கம்:**

**அண்மைக் காலத்தில் தான் தமிழ் வேறு, திராவிடம் வேறு என்று பிழையான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கல்விப் புலத்தில், 'தமிழ்' என்ற சொல்லும், 'திராவிடம்' என்ற சொல்லும் ஒருபொருள் பன்மொழிகளே. தமிழ் என்ற சொல், இயற்சொல் (Endonym). திராவிடம் என்ற சொல், திசைச்சொல் (Exonym). இவ்விரண்டும், தமிழ் வரலாற்றில் மட்டுமல்லாமல், உலக வரலாற்றிலும் நீண்டு நெடுக இடம் பெற்றுள்ளன. தமிழ் மொழி மட்டுமல்லாது, பல உலக மொழிகளிலும் இத் தன்மை குடிகொண்டுள்ளது. தமிழ்/ திராவிடம் – இரண்டு சொற்களும் ஒரே பொருளை – தமிழ் மொழியைக் குறிப்பனவே என்ற இன வரைவியல்–மொழியியல் உண்மையைப் பல தரவுகள் கொண்டு இக் கட்டுரை நிறுவுகிறது.**

முன்னுரை:

‘திராவிடம்’ என்ற சொல் இன்று தமிழகத்தில் மட்டுமல்லாது இந்திய அளவில் ஏன் உலக அளவிலும் பேசுபொருளாக ஆகியுள்ளது. இச்சொல்லால் எரிச்சலடையும் சிலர் இதனை வடசொல் (சமஸ்கிருதம்) என்று கருதிக்கொண்டு 'தமிழ்நாட்டவர்கள் திராவிடம் எனும் வடசொல்லை ஏற்கலாமா?' எனக் குமுறுகின்றனர். ஆனால் தேசபக்தர்கள் தாங்களே எனத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் சிலரே கூடத் தங்களை அறியாமலேயே நாட்டுப்பண் ‘ஜன கண மன’ பாடும் போது ‘திராவிட உத்கல வங்கா’ எனப் பாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இப்படி பலரது விமர்சனங்களுக்கும், ஏற்புக்கும் உள்ளான ‘திராவிடம்’ என்னும் சொல்லின் உண்மை வடிவம் என்ன?, உண்மைப் பொருள் என்ன?, என்பதை வரலாற்றுத் தரவுகளோடு ஆராய்கிறது இக்கட்டுரை.

இன்றைய விமர்சகர்கள் பலரும் திராவிடம் என்ற சொல் மேலை நாட்டவர்களால், குறிப்பாக எல்லீஸ், கால்டுவெல் போன்றவர்களால்

அறிமுகப்படுத்தப்பட்டது என்ற தவறான எண்ணத்தில் உள்ளனர். அவர்கள் தமிழ்மொழியைக் கற்றுத் தோய்ந்து ஆய்வு செய்யும்போது தமிழ்மொழி மற்ற தென்னக மொழிகளோடு பெரிதும் ஒத்திருப்பதைக் கண்டு இவற்றை ஒரு மொழிக்குடும்பம் எனக் கூறி 'திராவிட மொழிக்குடும்பம்' என்ற கருத்தாக்கத்திற்கு வந்தனர். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற ஒரு நூலையே கால்டுவெல் எழுதினார். ஆனால் திராவிடம் எனும் சொல் அவரால் உருவாக்கப்பட்டது அல்ல. அவருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாகவே தமிழைக் குறிக்க திராவிடம் என்ற சொல் பயன்பட்டுள்ளது என்ற செய்தி பலரும் அறியத் தக்கதாகும். வரலாற்றுக் காலம் நெடுகிலும், பல்வேறு அறிஞர்களாலும், ஆன்றோர்களாலும், ஆன்மீகத் தலைவர்களாலும், கல்வெட்டு, செப்பேடு எனப்படும் பதிவுகளைச் செய்தவர்களாலும் திராவிடம் என்னும் சொல் தமிழ் என்பதன் மாற்றுச் சொல்லாகப் பயன்பட்டு வந்தது என்பதற்கான சான்றுகளை நாம் காணவிருக்கிறோம்.

திராவிடம் என்று ஓர் இனம், ஆரியர் என்று ஓர் இனம் என்ற பாகுபாடு செயற்கையாக ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்டது என்ற ஒரு கூற்றும் உண்டு. நாம் இனப்பிரச்சனை பற்றி இங்கு விவாதிக்கப் போவதில்லை. மொழி என்ற அளவில் மட்டுமே இவ்வாய்வு பேசும்.

சமவயங்க சுத்த (Samavayanga Sutta), பன்னவன சுத்த (Pannavana Sutra) என்னும் இரண்டு சமண நூல்கள், கி.மு. முதல் நூற்றாண்டில் இந்தியாவில் வழக்கத்திலிருந்த 18 வகையான எழுத்துக்களைப் பட்டியலிடுகின்றன. அவற்றுள் பாம்பி (Bambhi) என்பதும், கரோஷ்டி (Kharosthi) என்பதும், தமிழி (Thamizhi) என்பதும் இன்றும் பலராலும் அறியப்பட்ட பெயர்கள். பாம்பி என்பதே பிற்காலத்தில் பிராமணர்களால் பிரம்மன் உருவாக்கினான் என்ற கதையின் அடிப்படையில், 'பிராமி' எனப் பெயர் மாற்றம் பெற்றதாகச் சொல்வர். ஆனால், சமண முதல் தீர்த்தங்கரரான ரிஷபநாதரின் மகளே பாம்பி (பிராமி) ஆவார். கரோஷ்டி (காந்தாரி) என்பது இந்தியாவின் வட மேற்கில் ஆப்கானிஸ்தான், பலுசிஸ்தான் பகுதியில் வழங்கிய எழுத்துவகை. தமிழி என்பதே தென்னகத்தில் வழங்கிய எழுத்து ஆகும். வடநாட்டில் முதலில் கல்வெட்டுகள் எழுதப்பட்ட மொழி பிராகிருதம். எழுத்து பாம்பி (பிராமி).

கி.பி. முதல்-இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய 'லலிதவிஸ்தரம்' எனும் பௌத்த நூல் அப்போதைக்கு இந்தியாவில் வழங்கிய 64 வகை எழுத்துக்களின் பட்டியலைத் தருகிறது. இதிலேயே பிராமி முதல் இடத்திலும், கரோஷ்டி இரண்டாம் இடத்திலும், 'திராவிட லிபி' என்பது 12ம் இடத்திலும் வைக்கப்பட்டுள்ளது.(1) இவற்றுள் (64ல்) தமிழி என்ற எழுத்துவகை குறிப்பிடப்படவில்லை. தமிழி என்பதன் மாற்று வடிவமாகவே 'திராவிடி' என்ற சொல் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே இடம் பெற்றுள்ளது. எனவே அன்றே தமிழியும், திராவிடியும் ஒன்று எனும் எண்ணம் இந்தியாவில் நிலவியுள்ளது எனக் கருதலாம்.

5 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்/திராவிடம் எனும் இரு சொற்களையும் ஆய்வு செய்த ஓர் ஆய்வாளர் - பேரா. முனைவர் கண்ணபிரான் இரவிசங்கர் (2), சில அருமையான ஏற்கத்தக்க கருத்துக்களை முன்வைக்கிறார். அவரது நூலைப் (அறியப்படாத தமிழ்மொழி) படித்த பின் சில கூடுதல் செய்திகளைத் தரவே இக்கட்டுரையை நான் எழுத முனைந்தேன்.

‘சேர, பாண்டிய கடல் வணிகம் கொடிகட்டிப் பறந்த காலத்தே தமிழ் என்று நம் சிறப்பு ‘ழ’ கரத்தை ஒலிக்கவியலாத நம் நட்பு இனங்களால், தமிழுக்கு இன்னொரு பெயரும் கிடைத்தது. அதுவே திராவிடம் என்பது அவரது முத்தாய்ப்பான கருத்து. (3)

அவர் தரும் சான்றுகளையே நான் முதலில் தருகிறேன். உலகெங்கும் இருக்கும் பல சொற்களை நமது தமிழர்கள் வழக்கப்படி எளிமையாக உச்சரிக்கத் தமிழாக்கிக் கொண்டோம். எடுத்துக்காட்டாக.

- Zhongguo (china) - சீனம்.
- Ionian (Greek) - யவனம்.
- Kedah (Malaysia) - கடாரம்.
- Java (Indonesia) - சாவகம்.
- Parsa (Persian) - பார்சி.

என்று உலகின் பல சொற்களை நாம் தமிழ்ப்படுத்திக் கொண்டது போலவே, பிறரும் தமிழம் / தமிழகம் என்பதை திரமிடம் / திராவிடம் எனத் தங்கள் எளிமையான உச்சரிப்புக்காக மாற்றிக்கொண்டனர். (4) இவ்வாறு மொழிக்கேற்ப ஒலிப்பு மாற்றி வழங்குவதைத் தான் தொல்காப்பியர் திசைச்சொல் (Exonym) என்கிறார் என்பது அவரது கருத்து. கிரேக்க மொழியில் உள்ள Periplus of the Erythraean Sea எனும் தொன்மையான ஆவணக் குறிப்பில் (கி.பி. முதல் நூற்றாண்டு) தமிழகம் என்பதை Damirica / Dravida என்றே உள்ளது. தொண்டி, முசிறி, தமிழகம் என்ற சொற்கள் இவ்வாவணத்தில் இடம் பெறுகின்றன. (பக்.155-156).

தாலமி (Ptolemy) எனும் கிரேக்க அறிஞர், தமிழகத்தைத் தன் ‘Geographike Hyphegesis’ எனும் நூலில் (கி.பி.150) Damirike என்று தான் குறிப்பிடுகிறார். அவருக்கும் முன்பாக Herodotus (கி.பி.425ல்) எனும் வரலாற்று ஆசிரியர் திராவிடம் என்றே குறிக்கின்றார். எனவே திராவிடம் எனும் தமிழுக்கான மாற்றுச் சொல்லின் (திசைச்சொல்) காலம் கி.பி. 500 என்று ஆகிறது.

உலகம் தமிழுக்கு வழங்கிய திசைச்சொல்லான திராவிடம் என்பதைச் சமஸ்கிருத மொழியிலும் எடுத்துக்கொண்டு, அதனை இழிவாகப் பயன்படுத்தியுள்ளார்கள்.

‘மேகலா, திரமிடா... தாஸ்தா க்ஷத்ரிய ஜாதய

வருடிலத்வம் அனுபிராப்தா பிராமணானாம் அதர்சண

ந பிராமண விரோதேந, சக்யா சாஸ்தும் வசுந்தரா. (5)

இதன் பொருளாவது: திரமிட (திராவிட) நாட்டு அரசர்கள், சத்ரிய அந்தஸ்து குறைந்து போய், சூத்திரர்கள் ஆகிவிட்டார்கள். பிராமணர்களைப் பகைத்துக் கொண்டதால்; உயர்ந்த அப்பிராமணர்களைப் பகைத்துக் கொண்டு எவனாலும் நாடாள முடியாது. (அனுசாசன பர்வம் - மகாபாரதம்).

### இந்திய அளவிலான வரலாற்றுச் சான்றுகள்:

‘லலித விஸ்தரம்’ எனும் பௌத்த நூலில் கி.பி. முதல் நூற்றாண்டிலேயே தமிழி என்பதன் மாற்று வடிவமான திராவிடி என்ற எழுத்து வகை இடம் பெற்றிருப்பதைக் கண்டோம். இதற்கு முன்பாகவே கலிங்க மன்னன் காரவேலனின் அத்திகும்பா கல்வெட்டில், தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்களின் ஒற்றுமைக் கூட்டணியைக் குறிக்கும் விதமாக ‘தமிர தேச சங்காதம்’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சதபத பிராமணம் என்ற நூலில், சங்ககால நிலந்தரு திருவிற் பாண்டிய மன்னன், 'திராவிட பதி' என்றே பட்டப்பெயர் சூட்டப்பட்டுள்ளான். இம் மன்னனின் படகு வெள்ள காலத்தில் பொதிகை மலையில் நின்றது. (கணினி தகவல்) இம்மன்னன் காலத்தில் அவனது அவையில் தான் தொல்காப்பியம் அறங்கேற்றப்பட்டதாகப் பாயிரம் கூறுகிறது.

மதுரையில் கி.பி.470ல் வஜ்ர நந்தி எனும் சமணத்துறவி 'திரமிள சங்கம்' எனும் தென்னகச் சமணச் சங்கத்தை நிறுவினார் என்பதை அறிகிறோம். கி.பி. 8-9ஆம் நூற்றாண்டில் கேரளத்துக் காலடியில் பிறந்த ஆதிசங்கரர் தனது சௌந்தரிய லஹரியின் 75ம் பாடலில், சீர்காழியில் கி.பி.7ம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்த திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று குறிப்பிட்டார்.

கீழைச்சாளுக்கிய மன்னர்களின் செப்பேடு ஒன்றில், சமணத் துறவி ஒருவருக்குத் திராவிட விசையத்திலிருந்த புரிசைநாட்டில் நிலம் கொடையளிக்கப்பட்ட செய்தி இடம் பெறுகிறது. இப்புரிசை நாடு என்பது காஞ்சிபுரம் அருகில் இருந்த ஊர் ஆகும். (6) தமிழ்நாடு என்பதன் நேரடியான வடமொழிச் சொல்லாகவே 'திராவிட விசையம்' எனும் சொல் ஆளப்பட்டுள்ளது. 'விசையம்' என்ற தெலுங்குச் சொல் நாடு என்பதன் பொருளில் வழங்குவதே. இதுவே பின்னாளில் பதினெண்விசையம், பதினெண்பூமி என்று பல கல்வெட்டுகளில், குறிப்பாக வணிகர் தொடர்பான கல்வெட்டுகளில் இடம் பெறுகிறது.

இது போன்று பல சான்றுகளைக் காணலாம். திராவிட தேசத்தின் தலைநகராகக் காஞ்சிபுரம் இருந்தது என்பதை, சிவஸ்கந்தவர்மன் எனும் பல்லவ மன்னன் (கி.பி.4-5ம் நூற்றாண்டு) கர்நாடகம், ஆந்திரதேசம் மற்றும் திராவிட தேசத்தைக் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான் (7) என்று கூறுவதால் அறியலாம்.

கி.பி.640ல் காஞ்சிபுரத்தில் சிலகாலம் வாழ்ந்த யுவான் சுவாங் (Hiuen Tsang) எனும் சீனப் பயணி காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள நாட்டை 'திராவிடம்' என்றே தனது பயணக்குறிப்பு நூலில் குறித்துள்ளார். கி.பி.400ஆம் ஆண்டு காலத்தைச் சேர்ந்தவரும், நியாயபாஷ்யம் எனும் நூலின் ஆசிரியருமான வாத்சயாயனர் ஒரு திராவிடர் என்றும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் என்றும் அறியப்படுகிறார். (8)

கி.பி.7-8ம் நூற்றாண்டைச் சேர்ந்த நாதமுனிகள், ஆழ்வார்களின் ஈரத் தமிழான நாலாயிர அருளிச்செயலைத் (நாலாயிர திவ்ய பிரபந்தம்) 'திராவிட வேத சாகரம்' என்கிறார். (9) திராவிட வேதத்தை இன்றும் பாடுவார்கள் தென்கலை வைணவர்கள் எனப்படுவர். இவர்களைப் பாடக்கூடாது என்று வடகலையார் தடுப்பது இன்றும் காஞ்சிபுரம் வரதராசர் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் அவலம். நாதமுனிகளும், இராமானுஜரும் வடகலையாரால் முழுமனதாக மதிக்கப்படுவதில்லை என்பதும், வடகலையார் சமஸ்கிருத வெறியே இதற்குக் காரணம் என்பதும் வெள்ளிடைமலை.

கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் தமிழகம் அறிந்த பெரும் வரலாற்று அறிஞர். அவர் எழுதிய 'சோழர் வரலாறு' மிகப் புகழ் பெற்ற நூல். அவர் ஒருமுறை மலேசிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அங்குள்ள பல்கலைக்கழகம் சென்றார். அங்கு ஆசியவியல் மொழித்துறை உருவாக்கப்படவிருந்தது. அத்துறையில் இந்திய மொழிகளில் ஒன்றைப் பாடமாகக் கற்பிக்க வேண்டும். அதற்கு அவரது அறிவுரை வேண்டி அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் தனது

அறிவுரையாக இந்திய மொழிகள் என்றால் 'சமஸ்கிருதத்தை'ப் பாட மொழியாக வைக்க வேண்டும் என்று கூறினார். ஆனால் அந்நாட்டு அரசு அவரது ஆலோசனையை ஏற்கவில்லை. எங்களுக்கு இந்தியர்கள் என்றாலே தமிழர்கள் தான். அவர்கள் இந்நாட்டின் உருவாக்கத்தில் இரத்தமும், வியர்வையும் சிந்தியவர்கள். எனவே தமிழே இந்திய மொழிப்பாடமாக வைக்கத் தகுதி பெற்றது என மறுத்து தமிழைப் பாடமாக வைத்தனர். அது இன்றும் தொடர்கிறது.

இதே நீலகண்ட சாஸ்திரியார் தனது சோழர்கள் எனும் ஆங்கில நூலில் 'திராவிடம்' என்ற சொல்லைப் பலமுறைப் பயன்படுத்தியுள்ளார். வரலாற்று ஆவணங்கள் அவரை கட்டாயப்படுத்தியுள்ளன. எடுத்துக்காட்டாக ஒருசில: 'முதலாம் இராஜேந்திர சோழன் (கி. பி.1012-1044) இரட்டபாடி ஏழரை இலக்கத்தை வென்றான் என்று மெய்க்கீர்த்தி கூறினாலும், அப்போதைய மேலைச் சாளுக்கிய மன்னன் ஜயசிம்மன் இரட்டபாடியைத் தக்க வைத்துக் கொண்டான். கி.பி.1204ம் ஆண்டைச் சேர்ந்த மிராஜ் ஆவணம், ஜயசிம்மன் எடதோர் (இடைதுறை) பகுதியை வசப்படுத்திக் கொண்டு பஞ்ச 'திராவிடர்களின் அரசனான சோழனை' விரட்டினான் என்கிறார் சாஸ்திரி. (10)

இதுபோலவே முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி.1070-1120) மேலைச்சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்கிரமாதித்தன் திராவிடர் படையை (தமிழ் சோழர் படை) விரட்டியடித்தான். (பக்.306) என்று குறிப்பிடுகிறார். எனவே மேற்கண்ட பல குறிப்புகளாலும் திராவிடம் என்ற சொல் தமிழ் / தமிழ்நாடு என்பதையே குறித்தது என்பது உறுதி.

பல்லவர் செப்பேடுகளில் இரண்டாம் நந்திவர்ம பல்லவமல்லனின் (715-780) உதயேந்திரம் செப்பேடு முக்கியமானது. இதில் நந்திவர்மன் தமிழ் (திரமிள) அரசர்களால் நந்திபுரத்தில் முற்றுகைக்கு ஆளாக்கப்பட்டான். (11) அந்நாளில் திராவிட அல்லது திரமிள எனும் சொல் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட தொண்டை மண்டலத்தைக் குறித்தது எனலாம்.

வாதாபிக்குக் கிழக்கே மகாகூடம் எனும் இடத்தில் உள்ள மகுடேசுவர நாதர் ஆலயத்தில் கற்றூண்களில் காணும் மங்களேசன் கல்வெட்டில், அவன் வென்ற நாடுகளாக 'வங்க, அங்க, கலிங்க, வட்டூர, மகத, மத்ரக, கேரள, கங்க, மூஷக, பாண்டிய, திரமிள, சோழிய, ஆளுக, வைஜயந்தி ஆகியவற்றைக் குறிப்பிடப்படுகிறது. இதில் சேர, சோழ, பாண்டியர் எனத் தனித்தனியே கூறிவிட்டுத் திரமிளர் என்று தனியே சொல்வது பல்லவர்களையே எனலாம். (12)

இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களைப் பாண்டியர் என்றோ, சோழர் என்றோ தெளிவாகக் குறிப்பிடாமல் தமிழர் என்றே கூறுகிறது. இவர்கள் பல்லவர்களாகவே இருக்கலாம். (13)

தமிழம் என்னும் பெயரே திராவிடம் எனத் திரிந்தது. பண்டைக் காலத்தில் நாட்டுப் பெயர்களும், மொழிப் பெயர்களும் பெரும்பாலும் 'அம்' ஈறு பெற்றே வழங்கின. (எடு) சிங்களம், கடாரம், ஆரியம்; தமிழும் 'தமிழம்' என வழங்கி, நாட்டையும், மொழியையும் குறித்தது. (14)

'வையக வரைப்பில் தமிழகம் கேட்ப' (புறம்168:18) தமிழகம் என்னும் பெயரையே பண்டைக் கிரேக்க உரோம வரலாற்றாசிரியர் 'டமிரிக்க' (Damirica) ட்மெரிக்கெ (Damarice) எனத் திரிந்து வழங்கினர். (15)

வடநாட்டு ஆரிய (சமஸ்கிருத) நூல்களில் திராவிடம் என்னும் சொல், முதலாவது த்ரமிளம்

என்றே வழங்கி வந்தது. ‘ழ’கரம் வடமொழியில் இல்லை. சில உயிர்மெய் முதல்களை ரகரஞ் சேர்ந்து -த்ர, -ப்ர எனப் புணரெழுத்துக்களாகத் திரிப்பது வடநூலார் வழக்கம். (எ.டு) படி-ப்ரதி பவளம்-ப்ரவளம். இதுபோல தமிழம் எனுஞ் சொல் த்ரமிளம் என திரிந்தது இயல்பே. பின்பு நாளடைவில் த்ரமிடம், த்ரவிடம் எனத் திரிந்தது. லி-ட, ம-வ போலி. த்ரவிடம் என்பதில் மெய்ம் முதலாதலின் தமிழில் திராவிடம் என்றாகிப் பின்பு திராவிடம் என நீண்டு வழங்குகிறது. (16)

கால்டுவெல் குமரிநாட்டு வரலாற்றையும் தொல்காப்பியத்தையும், மேற்கணக்கு நூல்களையும் அறியாதவராதலின், தமிழரை வடக்கிலிருந்து வந்தவராகவும், ஆரியரால் நாகரிகமடைந்தவராகவும் கொண்டு, த்ரமிளம் எனும் வடசொல்லினின்று தமிழ் எனுஞ் சொல் பிறந்ததென்று கூறினார். ஆனால் பண்டிதர் கிரையர்சன் இதை மறுத்துத் தமிழம் என்பதே திராவிடம் என்பதன் மூலம் எனத் தமது இந்திய மொழியாராய்ச்சி (Linguistic Survey of India) எனும் நூலில் நாட்டியுள்ளார். தமிழம் எனும் பெயரே திராவிடம் எனத் திரிந்தது என்று தெளியப்படும். (17)

இலங்கையின் தொடக்கக்காலக் கல்வெட்டு களில் பிராகிருத மொழியும், பிராமி எழுத்தும் பயன்பட்டன. இவற்றில் பல இனக்குழு சமூக மக்களைக் குறிக்கும்போது தமேட, பத, பரத, நாக, கபோஜ, பமன என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன. தமேட என்ற சொல் ஒரு இனக்குழுவின் பெயராக ஐந்து கல்வெட்டுகளில் வருகிறது. தமிழ் என்ற சொல்லைப் பிராகிருத மொழி பேசியவர்களால் சரியாக, அதன் இயல்பான முறையில், உச்சரிக்க முடியாமையால் அது அம்மொழியிலேயே சில மாற்று வடிவங்களைப் பெற்றது. தமேட, தமேழ, தமிட என்ற மூன்று விதமான வடிவங்களில் அது எழுதப்பட்டுள்ளது. பாளி மொழி நூல்களில் வேறுபாடின்றித் தமிள என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். அது குறிப்பிடத்தக்க அளவிற்குத் தமிழ் என்பதை ஒலியமைதியில் ஒத்திருக்கிறது. (18)

வவுனியா மாவட்டத்துத் தென் பகுதியிலுள்ள பெரிய புளியங்குளத்தில் தமிழ் வணிகனான கபதிவிசாகனைக் குறிப்பிடும் இரு கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் ஒன்றில் தமேட என்ற வடிவமும், மற்ற கல்வெட்டில் தமேழ என்ற வடிவமும் காணப்படுகின்றன. தமிழ்மொழிக்குச் சிறப்பாக உள்ள ‘ழ’ என்ற எழுத்தினை ‘ட’ என்று எழுதுவதே ஆதி பிராகிருத வழக்கு. அசோகனின் கல்வெட்டுகளில் ‘சோழ’ என்ற சொல்லினைச் ‘சோட’ என்றே எழுதியுள்ளனர். (19) செருவிலவில் உள்ள கல்வெட்டில் ‘தபேட’ என்று தமிழரைக் குறிக்கும் வடிவம், ‘தமிட’ என மாறிவிடுகிறது. (20) இச்சான்றுகள் முன்னைக் கூற்றுக்கு வலுச்சேர்க்கின்றன.

## திராவிடம் பற்றி இந்திய அறிஞர்கள்:

ஜாவோ துப்ரேய்ல் எனும் இந்தியவியல் அறிஞர் (1885-1945) ‘திராவிடக் கட்டடக் கலை’ என்றே ஒரு நூலை பிரெஞ்சு மொழியில் எழுதினார். இதனை எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் 1916ல் ஆங்கிலத்தில் பதிப்பித்தார். திரு.முரளி அருபன் என்பவர் 1999ல் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். இந்நூலில் துப்ரேய்ல் அவர்கள்,

'தென்னிந்தியாவில் சோழமண்டலக் கடற்கரையை ஒட்டிப் புலிகட் ஏரியில் இருந்து குமரிமுனை வரையிலான விரிந்த நிலப்பகுதியின் கட்டடக் கலையை நாம்

இங்கு ஆய்வுக்கு உட்படுத்துகிறோம். இந்நிலப் பகுதியின் கட்டடக்கலை அண்டை நாடுகளின் கட்டடக் கலையிலிருந்து அபாரத் தெளிவுடன் வேறுபட்டிருக்கிறது. இப்பகுதி முற்றமுழுக்கத் தமிழர்கள் வாழும் பகுதியாகும். இவர்கள் பேசும் மொழி தமிழ். எனவே இந்தக் கட்டடக் கலைக்குத் 'திராவிடக் கட்டடக் கலை' எனப் பெயரிடுவோம். காரணம் தமிழ், திராவிடம் ஆகிய இரண்டு சொற்களும் உண்மையில் ஒன்றே. இவை இரண்டும் முற்றமுழுக்க ஒரே வேர்ச் சொல்லையே கொண்டுள்ளன. (21)

திராவிடக் கட்டடக் கலையில் அயல் நாட்டுப் பாதிப்பு எப்போதும் இருந்தது இல்லை. இதில் ஏற்பட்ட மாறுதல்கள் இயற்கையான பரிணாம வளர்ச்சி பாதையில் அமைந்துள்ளது. (22) இன்றும் கோயில் கட்டடக் கலையில் விமானங்களின் அமைப்பில் எண்பட்டை கொண்ட சிகரத்தைத் 'திராவிட' சிகரம் என்றே கலை வல்லார் அழைக்கின்றனர்.

## ரோமிலா தாபர் அவர்களின் கூற்று:

இந்திய வாழும் வரலாற்று அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் ரோமிலா தாபர் அம்மையார். அண்மைக்கால மொழியியல் அறிஞர்களின் ஆய்வின்படி வேத சமஸ்கிருதத்தில் சில ஆரியமல்லாத சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவை பழந் திராவிட மொழிச் சொற்களாக இருக்கலாம். ஏ.எல்.பாசாம் மற்றும் எம்.பி.எமனோ அவர்களின் கருத்துப்படி பழந் திராவிட மொழியே இந்தியா முழுமைக்கும் வழக்கத்திலிருந்த மொழியாகும் எனவும் குறிப்பாகச் சிந்துவெளி மக்களின் மொழியாகவும் இருந்திருக்கலாம் என்கிறார். (23) சில பழந் திராவிட மொழிச் சொற்கள் வேதகால சமஸ்கிருதத்தில் கலந்துள்ளன. அவை வேளாண்மை தொடர்பான சொற்களாகும் என்பது அவரது கருத்தாகும்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் நாடறிந்த தமிழறிஞரும், மொழியியல் வல்லுநரும் ஆவார். திராவிட மொழிக் குடும்பத்தில் முக்கிய இடம் பெற்றது தமிழ் மொழியே. திராவிட மொழிக் குடும்பச் சொற்களைப் பிற இந்திய மொழிச் சொற்களோடு இணைத்துப் பார்க்க முனைந்த சில அறிஞர்கள் தோல்வியையே தழுவினர். இதன் மூலம் திராவிட மொழியே இந்தியாவின் மொழி என்பதும் வேறு எம்மொழியோடும் அதற்குத் தொடர்பு இல்லை என்பதும் உறுதி என்றார் அவர். (24)

கால்டுவெல், குண்டர்ட், கிட்டல் போன்ற 19ம் நூற்றாண்டு அறிஞர்கள் சில திராவிட மொழிச் சொற்களின் மூலத்தை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் தேட முயன்று தோற்றனர். அதற்கு மாறாக 20ம் நூற்றாண்டில் பர்ரோ, எமனோ, சர் ரால்ப் டர்னர் ஆகிய அறிஞர்கள் சில சமஸ்கிருதச் சொற்களின் மூலம் திராவிட மொழிகளில் (முண்டா) இருப்பதைக் கண்டறிந்தனர். இந்த ஆய்வுகள் மூலம் நாம் அறியத்தக்கது: ஆரியர்கள் வருகைக்கு முன்னரே திராவிடர்கள் இந்தியாவில் இருந்தனர் என்பதே. வேத காலத்திலேயே ஆரிய மொழியினரும், திராவிட மொழியினரும் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார் தெ.பொ.மீ.

## முடிவுரை:

இந்தியாவின் மொழியாக வேதகாலத்திற்கு முன்பே திராவிடமொழி இருந்தது. திராவிடமொழிக் குடும்பத்தில் பலமொழிகள் இருப்பினும் மூலம் தமிழே. மனோன்மணீயம் சுந்தரனாரின் கூற்றுப்படி 'உன் உதரத்தில் உதித்தெழுந்து ஒன்று பல

ஆயின்' திராவிடக் கிளை மொழிகள். இன்று அண்டை மாநிலங்களில் உள்ள கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவை பெரிதும் சமஸ்கிருத மயப்பட்டு விட்டன. ஆனால் தமிழ் மட்டும் பெரிய அளவில் தனித் தன்மையோடு விளங்குகிறது.

தமிழ் என்பதும் திராவிடம் என்பதும் ஒன்றே. திராவிடம் என்பது உலகம் நமக்குத் தந்த திசைச்சொல். திராவிடம் என்பது தமிழ்ச் சொல்லே. வடமொழிச் சொல் அன்று. ஏற்கனவே உலக வழக்கிலிருந்த திராவிடம் என்னும் சொல்லை எல்லிஸ், கால்டுவெல், அயோத்திதாசர், பெரியார் போன்றவர்கள் பயன்படுத்திக்கொண்டனர். எனவே இன்றைய தலைமுறை திராவிடம் என்னும் சொல்லை, சமஸ்கிருதச் சொல் என்றோ, வேறு மொழிச் சொல் என்றோ அரசியல் நோக்கங்கொண்டு கருதிவிடக்கூடாது.

வரலாற்று ரீதியாக வேதகாலத்திற்கு முன்பே, வழக்கிலிருந்த சொல், மகாபாரதத்தில் இடம்பெற்ற சொல், பெரிப்ளஸ், தாலமி போன்ற அறிஞர்களின் நூல்களில் இடம்பெற்ற சொல், ஹிரோடோடஸ் பயன்படுத்திய சொல் என்பதை மனங்கொள்ள வேண்டும். தமிழகக் கல்வெட்டுகளிலும், இந்திய அளவிலான செப்பேடுகளிலும் திராவிடம், திராவிட தேசம், திராவிட விஷயம் எனப் பல சொல்லாட்சிகள் இடம் பெற்றிருப்பதையும் அறியவேண்டும். இத்தகைய சான்றுகளைக் கொண்டு, தமிழ் எனினும் திராவிடம் எனினும் ஒன்றே; 'தமிழே திராவிடம்' எனத் துணிவோம்.

**அடிக்குறிப்புகள்:**


1. P.Rajendran & C.Santhalingam. An Introduction to Archaeology. PP 223-225. Pandyanadu Centre for Historical Research. Madurai 2017.
2. கண்ணபிரான் இரவிசங்கர். அறியப்படாத தமிழ்மொழி. தடாகம் பதிப்பகம். சென்னை 2018.
3. மேலது.ப.151.
4. மேலது.ப.152.
5. மகாபாரதம் புத்தகம்13, பகுதி35. பாடல் 17-21 தமிழாக்கம். கண்ணபிரான் இரவிசங்கர்.
6. 25 years of Indian Epigraphy. P.27.2016.
7. C.Minakshi. Administration and Social life under the Pallavas. P.10. Madras University.1938.
8. Ibid. P.247.
9. Ibid. P.263.
10. K.A.N.Sastri. Colas. P.205. Madras University 1975.
11. பல்லவர் செப்பேடுகள் முப்பது. ப.110. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை 1999.
12. மேலது. ப.111.
13. மேலது. ப.151.
14. ஞா.தேவநேயப் பாவாணர்- திராவிடத்தாய். தமிழ்மண் பதிப்பகம்- சென்னை-600014.
15. மேலது ப.7

16. மேலது ப.15

17. மேலது ப.17

18. சி.பத்மநாதன். இலங்கைத் தமிழர் வரலாறு. ப.18.

19. மேலது. ப.20.

20. மேலது. ப.20. இந்துசமய கலாச்சார அலுவலர்கள் திணைக்களம். கொழும்பு.2016.

21. ஜாவோ. துப்ரேய்ல். திராவிடக்கட்ட டக்கலை. (தமிழ்) ப.9.

22. மேலது. ப.13.

23. Romila Thapar. 'History and Beyond. PP10-11. Oxford. 2001.

24. T.P. Meenakshi Sundaram 'A Short Introduction to the History of Tamil Languages. Book. A History of Tamil literature. J.M.Somasundaram Pillai.1968.

ஆசிரியர் குறிப்பு:

முனைவர் சொ சாந்தலிங்கம், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டம் நீராவி என்னும் சிற்றூரில் பிறந்தவர். தமிழ்நாட்டரசின் தொல்லியல் துறையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றிப் பணிநிறைவு பெற்றவர். தற்போது மதுரை பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையத்தின் செயலாளராக இயங்கி வருகிறார். பல வரலாற்று நூல்களின் ஆசிரியர். 2014ஆம் ஆண்டில், சிறந்த தொல்லியல் அறிஞர்க்கான இராசராச சோழன் விருதினைப் பெற்றவர்.

**"There is substantial linguistic evidence favoring Dravidian authorship of the Indus Civilization.**

## *The evidence includes:*

- The presence of Dravidian loanwords and loan translations in the Rig Veda.
- The substratum influence of Dravidian on Indo-Aryan as seen in phonological changes like introduction of retroflex sounds, morphological changes like switch-over from inflexion to post-fixation, and near-identical syntactical structures moving Indo-Aryan closer to Dravidian than to Indo-European languages.
- Computer analysis has shown that the Indus language had only suffixes (as in Dravidian) and no prefixes (as in Indo-Aryan) or infixes (as in Munda).
- The Indus religion as revealed by pictorial depiction on seals and sealings included worship of a buffalo-horned male god, mother-goddesses, the pipal tree, the serpent and possibly the phallic symbol, all of which are known to have been derived from the aboriginal populations".

(*Interpreting the Indus Script: The Dravidian Solution Convocation Address. Dravidian University – Feb 26 2015, Kuppam. Andhra Pradesh, Union of India).*

*Prof.* **Dr.IRAVATHAM MAHADEVAN**
*National Fellow of the Indian Council of Historical Research.*

# ஆலயம் - ஆகமம் - ஆரியம்
# அறிந்ததும் அறியாததும்



எழுத்தாளர். மு.சங்கையா

## ஆய்வுச் சுருக்கம் :

**இந்த கட்டுரை ஆகமம் எப்படி உருவாக்கப்பட்டது என்பதைப் பற்றிய வரலாற்றை ஆராய்கிறது. தமிழர் வழிபாட்டு முறைக்கும் ஆரியர் வழிபாட்டு முறைக்கும் உள்ள முரண்களைப் பட்டியலிடுகிறது. கோயில்கள் எப்படித் தோன்றின என்பது பற்றியும் சிறு தெய்வ வழிபாடு பெருதெய்வ வழிபாடு பற்றி ஆராய்ந்து சிறு தெய்வ வழிபாடு எப்படி பெரு தெய்வ வழிபாடு முறைக்குள் சென்றது என்பதைச் சொல்கிறது. ஆகமம் வேறு என்பதையும் வேதம் வேறு என்பதையும் பல்வேறு எடுத்துக்காட்டுகளின் ஊடாக நிறுவுகிறது. ஆலயங்கள் எல்லாம் எப்படி ஆரியமயமாகியது என்ற வரலாற்றைப் பதிவு செய்கிறது. ஆகமம் எப்படி மூடு திரையாக இருக்கிறது என்பதை விவரித்து சொல்லும் இந்தக் கட்டுரை செய்ய வேண்டியது என்ன என்பது பற்றியும் எடுத்துக் கூறுகிறது**

காலம் மாறிவிட்டது. வாழ்க்கை முறைகள் மாறி விட்டன. உலகம் அறிவியல்மயமாகி கையளவில் சுருங்கி விட்டது.அந்த மாற்றங் களுக்கிடையில்,கோயில்களும் கடவுள்களும், பூசை முறைகளும் மாறி விட்டன. இந்த நிலையில் வர்ணமும், வைதீகமும், ஆகமமும், மட்டும் எக்காலத்திலும், மாறாத் தன்மையுடன் தொடர முடியுமா? முடியும் என்று வைதீகம் நம்புகிறது.அந்த மூடத்தனமான நம்பிக்கையின் கொடூரமான விளைவுகளை இந்திய சமூகத்தின் ஒவ்வொரு நகர்விலும் காண முடிகிறது.அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதிலும்,தில்லை கோயில் பிரச்னையிலும், தஞ்சை பெரிய கோயில் குடமுழுக்கு, சபரிமலை ஐயப்பன் கோயில் வழக்கு என கோயில் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் ஆகம சாஸ்திரங்களின் விதிகளின்படி நடக்க வேண்டுமென்றே நீதிமன்றங்கள் தீர்ப்பு

எழுதுகின்றன. அரசியல் சாசனத்தின் 17வது பிரிவு , பிறப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது மனித உரிமைக்கு எதிரானது என வரையறுத்து இருந்தாலும் அந்தப்பிரிவை கோயில் சம்பந்தப்பட்ட வழக்குகளில் கண்டு கொள்வதில்லை. ஆகமம் பெரிதா அரசியல் சட்டம் பெரிதா என்றால் ஆகமமே பெரிது என்பதே திரும்பத் திரும்ப நமக்கு வலியுறுத்தும் செய்திகளாகி விட்டன.

அப்படி என்னதான் ஆகமத்தில் இருக்கிறது? அவற்றுக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம்? ஆகமங்களுக்கும் வேதத்துக்கும் என்ன தொடர்பு. இருக்கிறது. அது ஆரியர்களின் படைப்பா? கோயில் வழிபாட்டு முறை பற்றி பண்டையத் தமிழர்கள் வகுத்துத் தந்த விதிகளின் தொகுப்பா அல்லது அதன் திருத்தப்பட்ட மறுபதிப்பா? அதன் வரலாறு, கொள்கை, நடைமுறை என்ன என்பது போன்ற கேள்விகள் ஆகமம் பற்றி பேசுகிற பொழுது எழாமல் இல்லை.

ஆகமம் எப்போது யாரால் எழுதப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. சைவர்கள் சிவனால் அருளப்பட்டது என்று நம்புகின்றனர். வைணவத்தின் **வைகானஸம்** ஆகமத்தை வைகானச(விகனசர்) என்ற முனிவரும், பாஞ்சராத்திரத்தை திருமால் ஐந்து ராத்திரிகள் வந்து சிலரிடம் அருளியதாகவும் வைணவர்கள் நம்புகின்றனர். '**தமிழில் ஆகமங்களை பற்றிக் கூறும் முதல் நூல் திருமந்திரம்** என்கிறார் பேராசிரியர் போ.வேலுசாமி'. [1]கடல் கொண்ட தென்குமரி நாட்டில் கோயில்கள் இருந்திருக்க கூடும். அங்கிருந்தே ஆகமங்கள் வழி வழி தமிழ் முனிவர்களால் கொண்டு வரப்பட்டு சரிவர பராமரிக்கத் தவறியதால் காலப் போக்கில் அழிந்துள்ளன என்கிறார் குன்றக்குடி ஸ்ரீ ஆதீனகர்த்தர்.[2] தஸ்துக்களால் உருவானது ஆகமம் என்பாரும் உண்டு.

ஆரியர்களோ வேதத்தை போலவே ஆகமம் காலத்துக்கும் அப்பாற்பட்டவை என்கின்றனர். ஆகமத்தின் காலங்கள் எதுவாக இருந்தாலும், இயற்கையின் மாறுதல்களும் சமூக வளர்ச்சியும் கடவுளை, சமயத்தைத் தோற்றுவிக்க, அதைத் தொடர்ந்து வழிபாட்டு முறைகள் மெல்ல மெல்ல மாறுதலுக்கு உள்ளாகி கோயில் வழிபாட்டு முறைக்கு கொண்டு வந்து சேர்த்த பின் அவைகளின் நடைமுறையை ஒழுங்குபடுத்த உருவாக்கப்பட்ட சட்டங்களே ஆகமம் ஆகும்.

## தமிழர்– ஆரியர், வழிபாட்டுமுறைகள் .

கிரேக்கம் எகிப்து,, மெசபடோமியா ,பெர்சியா மக்கள் தனித் தனி கடவுள்கள், விக்கிரகங்கள், சிலைகளை வழிபடுபவர்களாக இருந்ததைப் போன்றே.லிங்கத்தை வழிபட்ட சிந்து சமவெளிப் பகுதி மக்களின் தொடர்ச்சியாக வந்த தமிழர்களின் சமய வழிபாட்டு முறை என்பதும் தொன்று தொட்டு சிலை அல்லது எதாவது ஒரு அடையாளம்,குறி வழிபாடு முறையாகவே இருக்க ஆரியர்களின் வழிபாடு மரபு என்பது உருவமற்றதாக இருந்தது. உருவமற்ற அந்தக் கடவுளுக்கு சோமம் எனும் போதையூட்டும் பானத்தைப் படைத்துத் தீயை வழிபடுவதுமாக இருந்தது. அக்னீ அவர்களது முழு முதற் கடவுள். **(ஆற்றலின் புதல்வனாகிய அக்னீயே! செல்வங்களின் தலைவனே! வசிஷ்டர்களாகிய நாங்கள் உன்னை வணங்குகிறோம்.** ரிக் வேதம் -7.8.7) அதை மையமாகக் கொண்டே பல வேள்விகள், சடங்குகள் நடத்தப்பட்டு வந்தன.தமிழர்களின் ஆகமம் வேதத்திலிருந்து வேறுபட்டிருந்ததை

போன்றே வழிபாட்டு முறைகளிலும் வேறுபாடுகள் இருந்தன.. வேதச்(வைதீக) சடங்குகள் அக்னிச் சடங்குகள். ஒவ்வொரு காரியத்துக்கும் தீயுண்டாக்கி அக்னி வளர்த்து அதில் பொருள்களை அர்ப்பணிக்க வேண்டும் .மேலுலகில் உள்ள தெய்வங்களுக்கு அக்னி மூலம் மக்களுக்கு பயன்படும் அனைத்தையும் நெருப்பில் போட்டு அவற்றை கடவுளுக்கு அனுப்பும் ஒரு வழிபாட்டு முறையாக இருந்தது. அக்னி அவர்களுக்கு பொருள்களை கொண்டு சேர்க்கும் தபால்காரர் வேலை பார்த்தது. ஆனால் ஆகம வழிபாட்டில், அக்னிக்கு வேலை இல்லை.மந்திரங்கள் இல்லை. கடவுளுக்கு முன் படையலை வைத்து வழிபாடு செய்து முடித்தபின் அவற்றை உண்ணலாம். பிறருக்கும் கொடுக்கலாம். இடைத் தரகர் எவரும் இல்லை.

ஆரியர்களது உருவமற்ற வழிபாட்டு முறைகளில் கோயிலுக்கும், ஆகமத்துக்கும் இடமில்லை. இன்றைக்கு நடைமுறையில் இருக்கும், அபிஷேகம், அலங்காரம், உற்சவங்கள், தீபாராதனை,அர்ச்சனை கும்பாபிஷேகம், விழாக்கள், பஞ்சபூதக் கோட்பாடு என்பது பற்றி ரிக் வேதத்தில் சொல்லும்படியாக குறிப்புகள் எதுவும் இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள். 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **ஆதி சங்கரர்** 'கடவுள் மட்டும் தான் நிஜம். மற்ற அனைத்தும் பொய். ஆகமங்கள் பொய்களைத் திரட்டி வந்து உண்மையைப் பூஜிக்க செய்கின்றன. ஆகமங்கள் தவறு.அதை அடியேற்றுவதும் தவறு.என்று வாதிட்டார்.அவர்களது **வேதமும், உபநிஷத்துக்களும் கடவுளுக்கு உருவம் எதுவும் கிடையாது என்றும். உருவம் எதுவும் இல்லாதது தான் உண்மை யான உருவம் என்றது.**[3] வைதீகமத வழிபாடு முறை பற்றி' பனகுடி கோயில் வழக்கில் நீதிபதி சதாசிவ அய்யரும் அனைத்து சாதியினருக்கும் சாத்திரங்கள் உருவ வெளிபாட்டைப் பரிந்துரைத்திருந்தாலும் **உருவ வழிபாடு என்பது ஒரு மென்மை யான வழிபாடு இல்லை.பிராமணர்களை பொறுத்த வரை அக்கினி வழிபாடும், சூரிய வழிபாடும் மட்டுமே பொருத்தமுடைய வைகளாக இருக்கும்** என்றார்[4].

வைதீக வழிபாட்டு நெறி முறைகளை, அவர்களது கடவுள்களை தெரிந்து கொண்டால் ஆகமம் வேறு, வேதம் வேறு என்பதை அறியமுடியும்.. ஆரியர்கள் தாங்கள் வணங்கும் கடவுள்களை மூன்று வகையாகப் பிரித்தனர்.

ரிக் வேத பாடல் ஒன்று ."ஓ விண்ணில் வசிக்கும் பதினோரு தெய்வங்களே,மண்ணில் வசிக்கும் பதினோரு தெய்வங்களே மற்றும் காற்று மண்டலத்தில் வசிக்கும் பதினோரு தெய்வங்களே என்னுடைய வேள்வியை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுங்கள் என்கிறது[5].

அவர்களது இறை வழிபாட்டுப் பாடல்களும் அவ்வாறே இருந்தன அவர்களது புராணங் கள் இதிகாசங்களில்,வேதங்களில் சொல்லப்படுகிற யாகங்களில் பசுவையும், குதிரை யையும் நெருப்பில் இட்டு வழிபட்டனர்.அவர்கள் சிலை வழிபாட்டை விட வேள்வி நடத்துவதை எப்போதும் புனிதமானவையாகக் கருதினர். லிங்க வழிபாட்டை ஆரியர்கள் வெறுத்தனர். இன்றைய காலகட்டத்தில் வேள்வித் தீ வழிபாடு முறை மங்கி விட்டாலும்,தங்களது மரபு வழி வழிபாடு மறைந்து விடக் கூடாது என்பதற்காக தீ வழிபாட்டை புனிதமானதாகவும், வேள்வித் தீயின் இனிய புகை,காற்றைச் சுத்தப்படுத்தும் ஆற்றல் உண்டெனவும் அறிவியலுக்குப் பொருந்தாத கருத்துக்களைப் பரப்புரை

செய்து புதுமனை புகுவிழா, திருமணம், பெயர் சூட்டும் விழா,நற்பணிகள், கருமாதி போன்ற குடும்பத்தின் அன்றாட நிகழ்ச்சிகளில் வேள்வித் தீ வழிபாட்டை வீடு தோறும் கொண்டு போய் சேர்த்தனர்..அதற்கு உரிய மந்திரங்களை ஓதுவதற்கு இலவச பயிற்சி அளித்து வளர்த்தும் வருகின்றனர். வைதீக வழிபாட்டு முறைக்கு மக்களை நான்கு வர்ணமாக பிரிப்பது முக்கிய தேவையாக இருந்தது.சந்நியாசம், மோட்சம் பிராமணருக்கே உரியதாக இருந்தது. ஆனால் அதற்கு நேர் எதிராக ஆகம வழிபாட்டு முறை சமத்துவம் பேசியது.

தமிழ் கூறும் ஆகமத்திற்கு சாதி கிடையாது. அது சாதி பற்றி பேசவில்லை. கோயிலுக்குள் சமத்துவம் நிலவியது. ஆகமத்தை யார் வேண்டுமானாலும் படிக்கலாம்.எந்தத் தடையும் இல்லை. ஆகமத்துக்குத் தீட்சை மட்டுமே முக்கியம்.சாதி மற்றும் வர்ண பேதங்களுக்கு அப்பால் யாவரும் தீட்சை பெற்றுக் கொள்ளலாம். தீட்சை பெற்ற யாரும் கருவறைக்குள் நுழையவும், சாமி சிலையைத் தொட்டு பூசை செய்யவும் உரிமை உண்டு... **'தீண்டப்படாதவன் எனக் கருதப்பட்டவன் கூட விஷ்ணுவின் வடிவத்தையோ, அல்லது சிவனின் வடிவத்தையோ பெற்று அவர்களுக்கு பூசை செய்யும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.** மோட்சமடைய சந்நியாசம் கட்டாயத் தேவையென்றும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருப்பதாலேயே அவர் கோயிலில் பூசை செய்யக் கூடாது என்றும் எந்த விதி முறையும் இல்லை என நீதிபதி சேஷகிரி அய்யர் ஒரு வழக்கில் குறிப்பிடுவது இங்கே கவனிக்கத்தக்கது[6].'

பழந்தமிழர்களின் வழிபாட்டு வரலாறு என்பது நடுகல்வழிபாடு ,குலதெய்வம் வழிபாடு, இறந்தோர் வழிபாடு ,நாட்டுப்புற வழிபாடு,சிறுதெய்வ வழிபாடு, கிராம தேவதை வழிபாடு,லிங்க வழிபாடு என ஒரு அடையாள வழிபாட்டை சார்ந்து இருந்தது சிறு தெய்வ வழிபாடு என்பது நடுகற்கள் பரவலாக நடப்பட்டிருந்தமை பற்றியும் அவற்றின் மீது பெயரும் பீடும் பொறிக்கப் பட்டிருந்ததாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.(இத்தகைய நடுகல் வழிபாடுகள் பக்தி இலக்கிய காலத்தில் புறக்கணிக்கப்பட்டன.) இறந்தவர்களை எரிப்பது ஆரியமரபாக இருந்தது. தமிழர் மரபு இறந்தவர் களைப் புதைத்தது. புதைத்த இடத்தில் நடுகல் நடப்பட்டது.. 'வீர மரணம் அடைந்தோருக்கு நடுகல் நாட்டியதுடன் அதைப் பூக்களால் அலங்கரித்து படையல் வைத்து உயிர் பலி கொடுத்து வழிபடும் மரபுக்குரியவர்களாக இருந்தனர்..' நடுகல் தொடர்பான சடங்குகளைத் தொல்காப்பியர் ஆறு வகையாக வரிசைப்படுத்துவதாக பேரா.சிவ சுப்பிரமணியன் கூறுகிறார்.[7] நடப்பட்ட கல்லை அல்லது சிறு தெய்வத்துக்கான பீடத்தைச் சுற்றி மரக்கட்டைகள் அல்லது மண்ணால் ,செங்கல்லால் சுவர்கள் எழுப்பப்பட்டு கூரை இல்லாக் கோயிலாகவும் பின்னர் விட்டங்கள் வைத்தும்,கூரை வேய்ந்தும் கோயில்கள் உருவாக்கப்பட்டன.

கோயில் என்பதும் ஒரே நாளில் வந்து விடவில்லை. அந்தக் கோயில்களில் தொடக்கத்தில் ஓவியமாகக் கடவுள் உருவம் வரையப் பட்டு பலிப்பீடம் அமைக்கப்பட்டதாக அகநானூறு(167-9:20) கூறுகிறது.[8] காலப்போக்கில் முழுமையான கோயிலாகவும் வளர்ந்தது.அதுவே கோயிலுக் கான அடித்தளமாக அமைந்தது. அதற்கு ஆகமம் என்பதெல்லாம் கிடையாது. கடவுள் வழிபாடு என்பது மிகவும் எளிய வடிவில்

இருந்தது..வீர வணக்கம் என்பது பழந்தமிழர் வழிபாட்டு முறைகளில் ஒன்றாக இருந்தது.

கோயில் என்பது உருவாகாத காலத்திலும் பழந்தமிழர்கள் புனித யாத்திரை மேற் கொள்ளப்படும் சிறப்புப் பெற்ற தலங்களில் ஒரு அடையாளமாக குறிப்பிட்ட ஒரு மரம் வழிபாட்டுக்குரியதாக இருந்தது.மக்கள் மரங்களில் தெய்வம் குடியிருப்பதாக நம்பி வழிபட்டனர். சிதம்பரத்தில் **தில்லைமரம்** காஞ்சியில் **மா,** மதுரையில் **கடம்ப மரம்** நெல்லையில் **'மூங்கில்',** குற்றாலத்தில் 'பலா'மரம்,வழிபாட்டுக்குரியதாகக் கருதப் பட்டன. **'மன்ற மரா அத்த பேஎம் முதிர் கடவுள் கொடியோர்த் தெறூஉம் என்ப'** என்கிறது குறுந்தொகை. (மா மரத்திலுள்ள கடவுள் கொடியவர்களைக் கொன்று விடும் என்பது பொருள்)[9] மரம் முறிந்து போய் விழுந்து விட்டாலும் அந்த இடத்தில் மரத்தறியை வைத்து வணங்கியதாக சங்காலப்பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றது ,இன்றைக்கும் அரச மரத்தையும்,வேப்ப மரத்தையும், வில்வ மரத்தையும் சுற்றி வந்து வணங்குவது என்பது தொன்று தொட்டு தொடர்ந்து வரும் பழக்கத்தின் எச்சமாகும்...

சங்ககாலப் பாடல்களில் கோயில்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள் ஓவியங்களாக அதாவது அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளன .முருகன் கோட்டம்,தேவர் கோட்டம், காமன் கோட்டம்,வச்சிரக் கோட்டம், கற்பகத்தரு கோயில்,புத்தமத பீடிகை கோயில், என கோயில்கள் பற்றிய சில செய்திகள் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன என்றாலும் 'கட்டுமான கோயில்கள் பற்றிய குறிப்புகள் பழம் பாடல்களில் துல்லியமாக இல்லை. 'இருப்பினும் தமிழர்களின் வாழ்வியலோடும் பண்பாட்டோடும் கோயிலும் சிலை வழிபாடும் ஒன்றிப்போன அளவுக்கு ஆரிய மரபுகளில் காண இயலாது.கோயில் வழிபாடு என்பது அவர்களது வாழ்க்கையின் முக்கிய ஒன்றாக என்றைக்கும் இருந்ததில்லை.

## கோயில்களின் தோற்றம்

கோயில்கள் என்பது மிகவும் பிற்காலத்தில் உருவானது.அதற்கு முன் சுடுமண் பாவை யாகவோ,சிற்பமாகவோ,மரப்பவையாகவோ, ஓவியமாகவோ வடித்து வழிபட்டனர்.பவுத்த எழுச்சியின் போது குறிப்பாக அசோகரது காலத்தில் பவுத்த துறவிகள் தங்குவதற்காக உருவாக்கப்பட்ட. குடைவரைக் கோயில்களும், சமணர்களின் பள்ளிகளும் , குப்தர்கள், ராஷ்டிரகூடர்கள் காலத்தில் அஜந்தா,எல்லோரா கோயில்களும் கட்டிடக்கலை மற்றும் சிற்பக் கலை இரண்டிலும் கலைநயம் மிக்கதாகவும் ,கோயிலுக்கான வித்தாகவும் அமைந்தன .பவுத்தர்கள் புத்தரின் உருவச் சிலைகளை எழுப்பி கோயில்களை உருவாக்கினார்கள். அக்கோயில்கள் சைத்தியங்கள் எனப்பட்டன. புத்தர் சிலையும் அவரது உடல் எச்சங்களை வைத்து எழுப்பப்பட்ட புத்த விகாரங்களையும், ஸ்தூபிகளையும்.. தூண்களையும் நிறுவி வழிபடத் தொடங்கினர். ஸ்ரீலங்காவில் புத்தரின் பல் புனிதமாகக் கருதப்பட்டு புத்த விகாரத்தில் பாதுகாக்கப்பட்டு வழிபாடு செய்து வருவதைப் போல பவுத்தம் பரவிய நாடுகளில் அவரது எச்சங்கள் உருவ வழிபாட்டின் அடையாளமாக வைக்கப்பட்டன. இவைதான் பிற்காலத்தில் இந்தியாவில், தமிழகத்தில் கோயில்களுக்கான முன் மாதிரியை உருவாக்கியது.

தமிழ்நாட்டில் குடைவரைக் கோயில்களை உருவாக்கும் மரபு கி.பி 5 ஆம் நூற்றாண்டில்

பல்லவர்கள் காலத்தில் தான் வந்தது என்பதற்கு மகேந்திர பல்லவன் (கி.பி 610-630) தோற்றுவித்த மண்டகப்பட்டு குடைவரைக் கோயிலை சான்றாகக் காட்டினும், பிள்ளையார்பட்டி குடைவரை கோயில் காலத்தால் முற்பட்ட பழமையான குடை வரைக் கோயில் என்றும் **பாண்டியர்களே குடை வரைக் கோயில்களின் முன்னோடிகள் என்றும்** ஆய்வாளர் குடவாயில் பாலசுப்ரமணியனும் பிறரும் வரலாற்று சான்றுகளோடு நிறுவி உள்ளனர். இருப்பினும் .இன்று நாம் காணுகின்ற கோயில் போன்ற அமைப்பு களும் அது சார்ந்த நிகழ்வுகளும், பல்லவ மன்னன் பரமேஸ்வரன்(கி.பி 669-691) வட ஆற்காட்டு மாவட்டத்தில் 'கூரம்' எனும் இடத்தில் கட்டிய சிற்ப கோயில் (தமிழ் சமூக வாழ்க்கை ஆர். ஆலாலசுந்தரம் பக்-65) அவனது மகன் இரண்டாம் நரசிம்மவர்மன் (ராஜசிம்மன்) காலத்தில் உருவாக்கிய காஞ்சி கைலாசநாதர் கோவில் ,கடற்கரை குகைக் கோயில்களுடன் தொடங்குகிறது.அவர்கள் காலத்தில் செங்கல்லால் கட்டப்பட்ட கோயில்களும், கற்களால் கட்டப்பட்ட கோயில்களும் உருவாகின.அதற்கு முன்பு கோயில் போன்ற அமைப்புகள் சிறிய அளவில் தொடக்க நிலையில் மண் தளிகளாகவும் ,குடிசைகளாகவும் ,பீடங்களாகவும் இருந்தன. எனவே ஆகமத்துக்கு அங்கே வேலை இல்லை. 'தமிழகத்தில் 16 மாவட்டங் களில் 18 குடைவரைக் கோயில்கள் உள்ளன' என்பது பவுத்தம்,சமணத்தின் செல்வாக்கையுணர்த்தும் செய்திகள். .குடவரைக் கோயில்கள் என்பது குன்று அல்லது மலையின் சில பகுதிகளைக் குடைந்து கோயில்களை உருவாக்குவதாகும். தென்னிந்தியாவில் இருந்த பல கோயில்கள் சமண பவுத்தக் கோயில்களாகவே இருந்தன. 'கி.பி.640இல் காஞ்சியில் 100 புத்த விகாரங்களும்,, 80 கோயில்களும், மற்ற இடங்களில் நூற்றுக்கணக்கானக் கோயில்களும் இருந்ததாக சீனயாத்திரீகர் யுவான் சுவாங்' குறிப்பிடுகிறார்.

ஐம்பெரும் இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம்தான் வைதீகக் கடவுளுக்குரிய கோயில்களை முதன் முதலில் வரிசைப்படுத்தியது. **'வால்வளை மேனி வாலியோன் கோயில், நீலமேனி நெடியோன் கோயில்,** என பல கோயில்களையும், பவுத்தப்

பள்ளிகளையும், விகாரைகளையும், சிலப்பதிகாரம் பட்டியலிடுகிறத.'13 சிவனுக்கு கோயில் இருந்த செய்தியையும் சிலப்பதிகாரம் மூலமாகவே அறிய முடிகிறது. சிலப்பதி காரத்தின் காலம் கி.பி.5-6ஆம் நூற்றண்டு. கோயில்கள் கட்டுமானம் உருவான காலமும் அதையொட்டியே இருந்திருக்க வாய்ப்புண்டு.. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் மதுரை ,தொடர்ந்து காஞ்சி, வெங்கடம், ஸ்ரீரங்கம், கோயில்களும் புகழ் பெறத் தொடங்கின. பிள்ளையார்பட்டியிலுள்ள விநாயகர் கோயில் கருவறைச் சுவற்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் காலம் கி.பி.6 ஆம் நூற்றாண்டு ஆகும்.கி.பி.7-.8 ஆம் நூற்றாண்டிலிருந்து சேர,சோழ, பாண்டிய நாடுகளில் உள்ள ஏராளமான கோயில்கள் பாடல் பெற்றத் திருத்தலங்களாகப் புகழ் பெறத் தொடங்கின. 'சமயம்' அதோடு பூஜையின் பரிணாம வளர்ச்சியுடன் கோயில் பின்னிப் பிணைந்துள்ளது. சிலை வழிபாட்டின் ஒரு வடிவமாக இருந்த கோயில்கள் உருவாகிய பின் எழுதப்பட்ட ஆகமம் மற்றும் தந்திரங்களை அடிப்படையாகக் கொண்ட போதும் வேதங்களின் வழிபாட்டிலிருந்து வேறுபட்ட தாக இருந்தது.

மநுஸ்மிருதி போன்ற ஸ்மிருதிகள் கோயிலுக்குச் செல்லும் பார்ப்பனர்களை இழிநிலையில்

வைத்தது.மதுக்கடைக்குச் செல்வத்தையும், கோயிலுக்குச் செல்வத்தையும் சமமாகப் பார்த்தது.ஆலய வழிபாடு செய்யும் பார்ப்பனர்கள் தேர்வலர்கள் எனப்பட்டனர்.தென்னிந்தியக் குலங்களும் ,குடிகளும் நூல் (வைகறை-சாளரம்) குருக்கள் அனைவரும் போதாயன சூத்திரத்தைப் பின்பற்றுபவர்கள் **.கோயிலில் அர்ச்சகராக உள்ள இவர்களை மற்றப் பிராமணர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதி இவர்களோடு உடன் உண்பதும் இல்லை. இவர்கள் மற்ற பிராமணர் களோடு சேர்ந்து ஒரே குடியிருப்பில் சேர்ந்து வாழ்வதும் இல்லை என்கிறது .கோயிலுக்குச் சென்று வழிபடும் பிராமணர்கள் சாதியிலிருந்து விலக்கி வைக்கப் பட்டனர். கோயில் அர்ச்சகர்களை வைதீகப் பார்ப்பனர்கள் சூத்திரர்கள் என்றே குறிப்பிட்டதாக பிரிவியூ கவுன்சில் நீதிபதிகளும்,நீதிபதி சேஷகிரி அய்யர் அவர்களும் குறிப்பிட்டுள்ளனர்.**

பிற்காலத்தில் உருவான கோயில்கள் சைவ வைணவ ஆகம சட்டங்களுக்கேற்ப கட்டப்பட்டதாக கூறப்பட்டாலும் எல்லாக் கோயில்களும் ஆகம விதிக்கு உட்பட்டே அமைக்கப்பட்டது என்பது உண்மை இல்லை. இன்றைக்கு தமிழ் நாட்டில் 43000 கோயில் கள் இருப்பதாகவும், அவைகளில் 2000 கோயில்கள் மட்டுமே ஆகம விதிகளுக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன என்றும். சொல்லப்படுகிறது. அதிலும் கூட பல நூறு கோயில்கள் ஆகம விதிகளுக்குள்அடங்காதவைகளாக இருப்பதற்கு அதிக வாய்ப்புண்டு. இது சம்பந்தமாக தமிழ்நாடு அமைத்துள்ள குழு உண்மையை வெளிக் கொணரும் என்று நம்புவோமாக.

கோயில் என்பது அரசரின் கஜானாவை நிரப்பும் கருவிகளில் ஒன்றாக விளங்கியதால் சமூக ஏற்றத்தாழ்வுகள் நிலவிய நிலையிலும் ஆலயம் அனைவருக்கும் பொதுவானதாக இருப்பது நல்லது என்ற நிலையே கோயில் உருவான காலம் தொட்டு நிலவி வந்தது .அரசர்களால், சிலைகளும், பலிபீடங்களும்,கோயில்களும் வணிக நோக்கத்துடன் அமைக்கப்பட்டன. வருமானத்துக்கான வாய்க்காலாக கோயில்கள் இருந்ததால் அதை நோக்கி மக்களை ஈர்க்க பலவிதமான தந்திரங்களை, அரசர்கள் கையாண்டனர்.பல விதமான கதைகளை மக்கள் மத்தியில் உலவ விட்டனர்.

கி.பி 5 ஆம் நூற்றாண்டில் சிவனை வழிபடுபவர்கள் சைவர்களாகவும், விஷ்ணுவை வழிபடுபவர்கள் வைணவர்களாகவும் பிரிந்தனர். பக்தி இலக்கியத்தின் தொடக்கத்தில் கோயிலுக்குள் நுழைவதில் சாதி தடையாக இல்லை. ஆகமங்கள் நான்கு வருணப் பாகுபாட்டை ஏற்கவில்லை. 63 நாயன்மார்களில், தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்ட வேட்டுவர், மாடுமேய்ப்பவர் ,பாணர், பறையர், ஈழவர்,மீனவர்,வண்ணார் ,மருத்துவர், சாலியர்,குயவர் குலத்தவர்கள் என 10 பேர் இருந்தனர்.12 ஆழ்வார்களில் எல்லா சாதியினரும் உண்டு. திருக்காளகஸ்தி கோயிலில் சிவனை உமிழ் நீரால் அர்ச்சனை செய்து மாமிசம் படைத்த. வேடன் கண்ணப்பன்,8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாணர் இனத்தை சேர்ந்த திருப்பாணாழ்வார், திருவரங்கன் கோயிலுக்குள் கால்கள் தேய்ந்து போகும் அளவுக்கு வலம் வந்ததாகவும்,பெரியாழ்வார் **இழிகுலத்தவராயினும் எம்மடியாராகில் ,தொழுமின், கொடுமின், கொள்மின்** என்று பாடியிருப்பதும், 'தாழ்த்தப்பட்ட சாதியினரான திருநீலகண்டயாழ்பாணருடன் திருஞானசம்பந்தரும் ஒன்றாக உண்டு,ஒன்றாகப் பயணித்து,ஒன்றாக தங்கி சைவப் பணியாற்றி

யதும்' சமூகத்தில் வேர்விட தொடங்கிய சாதி படிநிலைகள் அன்றைய காலத்தில் கொஞ்சம் அடங்கிக் கிடந்தது என்பதன் வெளிப்பாடாகும்.

இந்தக் காலகட்டம் சிறுதெய்வ வழிபாடு மறைந்து பெருதெய்வ வழிபாடு முறைக்குள் சென்றது.நடுகல் வழிபாடு தேய்ந்தது..பக்தி இலக்கிய காலத்தின் கடைசி காலத்தில் சாதி தலை தூக்கியது. .இருப்பினும் அன்றைய சங்க கால இலக்கியங்களில் காணும் தமிழ்ச் சமூகம் தூய காதலையும்,வீரத்தையும் கொண்டாடி மகிழ்ந்த அளவுக்கு பக்தியில் மூழ்கிக் கிடக்க வில்லை என்பதும் முன்னோர் வழிபாடு மற்றும் நீத்தார் பெருமையில் நிறைவு கண்டு வாழ்ந்தனர் என்பதும் தெரிகிறது. ஆனால் தமிழ் சமூக நடைமுறைகளையும், அறங்களையும் ,வைதீகச் சார்புடையதாக மாற்றும் முயற்சியில் வெற்றி பெற்ற வைதீகப் பார்ப்பனர்கள் படிப்படியாகப் பண்டைய தமிழர் வழிபாட்டு முறையில் வைதீகத்தைப் புகுத்தி வர்ணத்தைக் கோயிலுக்குள் கொண்டு வந்த பின் 'பிராமணப் பிறப்பை விட உயர்ந்த பிறப்பு வேறெதுவும் இல்லை என்று நான்மணிக் கடிகை' கூறும் அளவுக்கு மாறியது.

கோயில்கள் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய ஆரியமயமாக்கப்பட்ட பல்லவர்கள் ஆந்திராவில் இருந்து பெருமளவிலான வடுகப் பார்ப்பனர்களை அழைத்து வந்து தொண்டை மண்டலம், சோழ மண்டலத்தில் குடியமர்த்தி வேதம் ஓதவும், யாகம் வளர்க்கவும்,சடங்கு சாத்திரங்களைப் போதிக்கவும் பிரமதேயக் கிராமங்களை உருவாக்கவும் பாதை அமைத்துக் கொடுத்தனர். அரசர்கள் வேத யாகங்களை நடத்தத் தொடங்கினர். பிற்கால சோழர்கள் காலத்தில் குகைக் கோயில்கள் ஒற்றைக் கோபுர கோயில்களாக பெருக்கெடுத்தது.. பெருமளவு கோயில்கள் கட்டுவதை சோழர்கள் ஊக்குவித்தனர்.பிற நாடுகளைப் போரில் கைப்பற்றிய இடங்களில் எல்லாம் தங்களது பராக்கிரமங்களைப் பறைசாற்றும் விதத்தில் கோயிலைக் கட்டுவதை ஒரு கடமையாகவே கருதினார்கள்..கோயில் இல்லாத ஊரோ ,நகரமோ இல்லாத நிலையை உருவாக்கினர்.

## ஆகமம் வேறு – வேதம் வேறு

ஆகமங்களின் காலங்களை சரியாகக் கணிக்க முடியவில்லை என்றாலும் தோராயமாக கி.பி.3-4 நூற்றாண்டாக இருக்கலாம் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆகமங்கள் என்பது கோயில் அமைப்பதற்கான இடம், கட்டுமான முறை,சிலை அமைப்பு, முறை,வழிபாட்டு முறை,தேர் செய்யும் முறை திருவிழாக்கள் நடத்தும் முறை , குடமுழுக்கு நடத்தும் முறை,கோயில் சார்ந்த நாட்டியம்,இசை,சிற்பம்,மற்றும் அர்ச்சகர்களின் ஒழுக்கம் ஆகியவை களை பற்றிய விதிகள் அடங்கிய இலக்கண தொகுப்பாக வந்தது. சுருக்கமாகக் கூறவேண்டுமென்றால் ஆகமம் என்பதற்கு பல பொருள்கள் உள்ளன. ஆகமம் என்ற சொல்லுக்குத் தொன்று தொட்டு ஊறி வரும் அறிவு அல்லது பழைமையானது,அல்லது வழிமுறை என்றே பல பொருள் கொள்ளப்படுகிறது. ஆகமம் என்பது தூய தமிழ்ச் சொல் என்றும் ,தமிழில் தமிழர்களுக்காக ஆகமம் எழுதப்பட்டது என்றும் 'எந்த ஒன்று உயிர்களுக்கு நிறைவான நிலைத்த இன்பத்தை கொடுக்கின்றதோ அதுவே ஆகம அறிவு' என்கிறார் முதுமுனைவர் மு.பெ. சத்திய வேல் முருகனார்[10]. **'மன்னு மாமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்'** என

மாணிக்கவாசகரும்.**செந்தமிழ் சிந்தை செய்து ஆகமம் செப்ப லுற்றேனே",நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே** என்று திருமூலர் பாடுவதும் அதைத் தெய்வத்தமிழில் தான் அருளினேன் என்பதற்கு **"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!"** என்று கூத்தாடுவதும் தமிழர்களின் சைவத்துக்கும் ஆகமத்துக்கும் உள்ள நெருக்கமான உறவை உறுதிப் படுத்தும் சான்றுகளாகும்.

எல்லாக் கோயில்களும் ஆகம கட்டுமான முறைக்குள்ளும், வழிபாட்டு முறைக்குள்ளும் வந்து விடவில்லை.பவுத்தம், சமணம் உட்பட எல்லா சமயங்களுக்கும் ஆகமம் இருந்திருக்கிறது என்றாலும் சிவன், விஷ்ணு, சக்தி ஆகியோரை வழிபடும் தந்திர நூல்களையே பொதுவாக "ஆகமம்" என்று குறிக்கிறது. சைவ ஆகம நெறி **மகேஸ்வரம், பாசுபதம்** எனப்பட்டன. வைணவ ஆகமங்கள் **பாகவதம்** (பக வானைப் பற்றி யவை), **சாத்தவாதம்** (சாத்தவாத அரச பரம்பரையினர் பற்றியது.), **பாஞ்சராத்திர** என அழைக்கப் பட்டன. (பாஞ்ச ராத்திர என்றால் விஷ்ணு வழிபாட் டின் சிறப்புச் சடங்கு என்றும் பொருள் உண்டு. சாக்தம் ஆகம நூல்கள் **தந்திரம்** என்றும் அழைக்கப் படுகின்றன. சைவத்தில் 28 ஆகமங்களும், வைணவத்தில் 108, (தற்போது இரண்டு.) சக்தி பற்றி 27 ஆகமங்களும் இருந்தன என்கிறார் ஆய்வாளர் மு.அருணாச்சலம்.அவைகளில் பல கரையான்களுக்கு இரையாகிப் போயின. எஞ்சியவைகளை வைதீகம் களவாடிச் சென்றது. பவுத்தம் சமணம் சமயங்களுக்கும் **மிருகேந்திர** ஆகமங்கள் இருக்கின்றன.ஆனால் இவற்றில் முக்கியானது என்ன வென்றால் இந்த ஆகமங்கள் அனைத்தும் **வேதங்களை அடிப்டையாகக் கொள்ளாதவை மட்டுமல்ல .அவை வேத ஆகமத்துக்கு எதிரானவைகளாக இருந்தன** என்கிறார் ஆய்வாளர் ,பேராசிரியர் பி.டி.சீனிவாச அய்யங்கார். மகாராஜன் குழு அறிக்கை **'வேதங்களில் யாகம் சொல்லப்பட்டதே தவிர ,ஆலய வழிபாடு சொல்லப் படவில்லை. ஆகமங்கள் கோயில்களையும் ,வழிபாடு முறைகளையும் விரித்துச் சொல்கின்ற மூல நூலாகும்' என்கிறது**.

தமிழர்கள் கட்டிய சில கோயில்களில் மட்டுமே ஆகமங்களை இன்றைக்கும் பெருமளவில் காண முடிகிறது.எனினும் பெரும்பான்மையான தமிழ்ச் சமூகம் ஆகம எல்லைகளுக்கு அப்பால் நின்று தங்களது பழமையான வழிபாட்டு முறைகளில் வழிபட்டு வந்தனர்.அவர்களது சடங்குகள்,

வாழ்நெறிகள், வழிபாட்டு முறைகள் நாட்டார் மரபுகள் என்று அழைக்கப்பட்டன.ஸ்மார்த்ததில் உருவ வழிபாடு இல்லை. எனவே கோயில்களும் இல்லை.ஆகவே ஆகமமும் கிடையாது .இருப்பினும் இன்றைக்கு வட மொழியில் இருக்கும் ஆகமங்கள் அனைத்தும் தமிழர்களிடமிருந்து களவாடப்பட்டுச் சிதைக்கப்பட்டவைகளே. தமிழர்களின் மொழியும், பண்பாடும் ,மரபுகளும் ஆரியர்களின் வருகைக்குப் பின் சிதைந்ததைப் போன்றே பிற்காலத்தில் வேத ஆரியர்கள் கோயில்களை கைப்பற்றிய பின் ஆகமம் தன் அடையாளம் இழந்தது. ஆரியத்துக்குள் இரண்டறக் கலந்து கரைந்தது. வேதத்தின் தலைமையைஅவை ஏற்றுக் கொண்டதால் சாதி அடுக்கு முறையும் கேட்பாரின்றி நுழைந்தது. ஆரியம் நுழையும் முன் பொதுவில் கோயில்கள் அனைவருக்கும் பொதுவானவைகளாக இருந்தன. **அனைத்து சாதியினருக்கும் அனைத்துக் கோயில்களின் கதவுகளையும் ஆகமம் திறந்தே வைத்திருந்தது**. **தீட்சை**

**பெற்ற யாரும் அர்ச்சகர் ஆகலாம்.** ஆகமங்கள் அனைத்து மக்களுக்கும் உரியவையாக இருந்தன.. இன்றைய நிலையில், இவற்றையெல்லாம் நம்புவதற்குக் கடினமாக இருந்தாலும் ஆரியர்கள் ஆலயங்களைக் கைப்பற்றும் முன் சமூக நிலைமைகள் இவ்வாறு தான் இருந்தது என்பதைத் தமிழ் இலக்கியங்களில் இருந்தும் வரலாற்றுச் செய்திகளிலிருந்தும் புரிந்து கொள்ள முடிகிறது.

தமிழகத்தின் கோயில்களைப் பார்ப்பனர்கள் கைப்பற்றுவதற்கு முன்பாக இருந்த ஆகம விதிகள் பற்றி அறிஞர் பி.சிதம்பரம் பிள்ளை தனது ஆலயப்பிரவேச நூலில் (அணிந்துரை -பெரியார்) ஆகமம் பற்றிய ஆய்வை மேற்கொண்ட வரலாற்று ஆசிரியர் பி.டி. ஸ்ரீனிவாச அய்யங்கார் கருத்துக்களிலிருந்து சிலவற்றை சுட்டிக் காட்டியுள்ளார்.[11]

*"ஆகமங்களின் அடிப்படையான கொள்கை.*

- ***ஆகமங்கள் வேத பிராமணர்களை கோயிலிலிருந்து தவிர்ப்பது மட்டுமின்றி அவர்களை ஆகம சமயத்துக்கு புறம்பானவர்களாகக் கருதுகின்றன.***
- ***ஒரு கோயிலில் அர்ச்சகராக அல்லது பூசாரியாக வருவதற்குள்ள ஒரே சோதனை தீட்சை மட்டுமேயன்றி சாதியோ வகுப்போ இல்லை.***
- ***தீட்சை பெறாத ஒரு பிராமணன் கோயில் சமையற்காரன் போன்ற கீழ்நிலை பணியாளனாக கூட இருக்க முடியாது.ஒரு இந்துக் கோயிலின் கருவறைக்குள் அவன் நுழைய முடியாது.அங்குள்ள கடவுள் சிலையை அவன் தொடவும் கூடாது.***
- ***பிராமணர்கள் போன்றும் இதர வகுப்பினரைப் போன்றும் ஒரு சண்டாளன் கூட தீட்சை பெற்றுக் கொள்ள முடியும்.***
- ***ஆகமங்களின் கொள்கைப்படி ,கோயிலில் நுழையவும் வழிபாடு செய்யவும் சாதி முக்கியமில்லை.***
- ***ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டும் சலுகை காட்டவோ ,வேறு வகுப்பினரை வெறுத்தொதுக்கவோ ஆகமங்களில் இடமில்லை.***

கோயிலில் நுழையவும்,தொழவும் சாதி முக்கியமில்லை என்ற போதும், தமிழகக் கோயில் வழிபாட்டு முறைக்கும்,பண்பாட்டுக்கும், தமிழர் சமயத்திற் கும் புறம்பானவர்களாக இருந்த **ஆரிய பார்ப்பனர்களைக் கோயில் கருவறைக்குள், அனுமதித்தால் நாட்டுக்கும் அரசனுக்கும் கேடு விளையும் என்கிற ஒரு விதமான நம்பிக்கை அன்றைய தமிழகத்தில் நிலவி வந்தது. எனவே தான்** தமிழ் ஆகம மரபு, பார்ப்பனர்களை நீண்ட காலமாக கோயிலுக்குள் அனுமதிக்கவில்லை.

அன்பும் சிவமும் இரெண்டென்பர் அறிவிலார் என்று பாடிய திருமூலரின் திருமந்திரமும் (519)

***பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்***
***போர்கொண்ட வேந்தருக்கு பொல்லா வியாதியாம்***
***பேர்கொண்ட நாட்டுக்கு பஞ்சமும்மாம் ன்றே***
***சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே - 519)***

அதாவது பார்ப்பனர்கள் அர்ச்சகராக இருக்கக் கூடாது. பார்ப்பனர்கள் கடவுளை அர்ச்சித்தால், போர்க் குணம் படைத்த நாடாளும் மன்னனுக்குக் கொடிய நோய் உண்டாகும் .அதோடு நாட்டிலும் பெரிய பஞ்சமும் ஏற்படும் என்று கூறுகிறது.4

"வேத சடங்குகளில் ஒவ்வொரு ஆகுதி பெய்யும் போதும் ஒரு மந்திரம் ஒலிக்கப்படும். ஆகம சடங்குகளில் வேத மந்திரங்கள் எதுவும் இடம் பெறுவதில்லை.

ஆகம வழிபாட்டில் இறைவனின் எண்ணற்ற பெயர்களைக் கூறி (வைதீகத்துடன் கலந்த பின் )நமஹ என முடிப்பர்(போற்றி/வணக்கம்). வைதீக சடங்கின் முடிவில் சுவாஹா என முடிப்பர்.

வைதீக வழிபாட்டில் அக்கினியில் அவியுணவு களைப் போடுவது அடிப்படையாகும். ஆகமத்தில்

இறைவனுக்கு படையல் படைத்து வழிபாடு செய்து அதை அனைவரும் உண்பது மரபாகும்.

**ஆகமத்தில் கடவுளுக்குப் பதிலியாக எதாவது ஒரு அடையாளத்தை வைத்து வழி படுவர்.அது வாளாகவோ,வேலாகவோ ,கல்லாகவோ,மரமாகவோ.ஓவியமாகவோ இருக்கலாம். வேத வழிபாடு என்பது உருவமற்ற வழிபாடு. ஆகம வழிபாடு உருவ வழிபாடு.எனவே இரண்டும் ஒன்றல்ல. என்கிறார் தமிழண்ணல்.[12]".**

## ஆரியமயமாகிய ஆலயம்.

கால ஓட்டத்தில் தமிழ் நாட்டில் பெரும் கோயில்களின் எண்ணிக்கைப் பெருகியது. பிற்காலச் சோழர்கள் காலத்தில் கருவறையுடன் கூடியக் கோயில்கள் உருவாகத் தொடங்கின. பவுத்தத்தின் எழுச்சி மாட்டுக்கறி பிரியர்களான வேதகால பார்ப்பனர்களைச் சைவர்களாக மாற்றியதைப் போலவே **மகாபாரதப் போருக்குப் பின்** வைதீக கோட்பாட்டு முறை சிறுது சிறிதாக மறையத் தொடங்கிய நிலையில். வேள்வி தீ வழிபாட்டுமுறைகளும், சடங்குகளும்,புகழ் மங்கி மதிப்பிழந்து வந்த நிலையில், வேள்வித் தொழிலை இழந்த வைதீக ஆரியர்கள் அப்போது பெரும்பான்மை மக்களின் சமயம் சார்ந்த நடை முறையான தீ வழிபாடற்ற ,கோயில் வழிபாட்டு முறை நோக்கி நகர்ந்தனர் .பக்தி வெள்ளம் பெருகிய அந்தச் சூழலும், வேள்விக் குண்டத்திலிருந்து கோயிலுக்கு உறுதியான மாற்றம் பெற்றதுமான அந்த நிலையில் ,கோயில்கள் அதிகாரப் பீடங்களாகவும் நிலவுடமை மையங்களாகவும்,சில நேரங்களில் இராணுவத் தளவாடங்களின் சேமிப்புக் கிடங்காகவும்,அரசர்களின் கஜானாவை நிரப்பும் வங்கியாகவும் இருந்தன. கோயில்களும், விக்ரகங்களும் நிறுவப் பட்டப் பிறகு கோயில் பராமரிப்புக்கென ஏராளமான அசையும் சொத்துக்களும் அசையா சொத்துக்களும் சேர்ந்தன.தமிழகத்தின் வளம் மிகுந்த நிலங்கள் எல்லாம் கடவுளின் பெயரால் உருவாக்கப்பட்டக் கோயிலுக்கு உரிமையாக இருந்தன.. .பக்தர்களால் அளிக்கப்பட்ட நன்கொடைகள் கோயில் கஜானாவை நிரப்பின.மக்களால் கோயிலுக்கு அளிக்கப்பட்டத் தானங்களோடு, அரசரால் பறிமுதல் செய்யப் பட்ட பல ஆயிரம் ஏக்கர் நிலங்களும், கோயில்களுக்குச் சொந்தமாக சேர்ந்தன..

கோயிலைக் கட்டவோ, சிலை வடிக்கவோ, பூஜை செய்யவோ பராமரிக்கவோ, சிலையை அலங்கரிக்கவோ முன் வராத உழைப்பு சோம்பேறிகளான வைதீகப் பார்ப்பனர்கள் கோயிலுக்குள் நுழைந்து பூஜை செய்ய மட்டும் தனியுரிமை கேட்டதற்கும் பின்னால் அவர்களது வர்ண மேலாண்மை இருந்தது. வேத கால ஆரியர்களின் வரலாற்றை ஆழமாக ஆய்வுக்கு உட்படுத்திய டாக்டர் அம்பேத்கர் .'கி.மு.200 லிருந்து கி.பி.400 வரையிலான காலத்தில் பிராமண சமயத்தைச் சேர்ந்த ஒரு கட்டிடமோ அல்லது சிறப்போ இங்கிருந்ததற்கான எந்த அடையாளமும் இல்லை என்கிறார். இதில் கோயிலும் அடக்கம். அதேபோல வரலாற்று ஆய்வாளர் பணிக்கர் 'கி.மு.300 முதல் கி.பி.100 வரையிலான 400 ஆண்டுகள் பார்ப்பனர்கள் இல்லை. பார்ப்பன கோயில் இல்லை .பார்ப்பனக் கடவுள் இல்லை. பார்ப்பன பழக்கங்கள் இல்லை. **பார்ப்பன மந்திரமும் இல்லை.மாயமும் இல்லை.**

அதாவது இவை பற்றிய குறிப்புகள், இக்கால சம்ஸ்கிருத இலக்கியங்களில் அதிகம் இல்லை.இந்திய நாடு நிம்மதியாக இருந்தது என்கிறார்.

கோயில் என்கிற அமைப்பை மையமாக்கி சமயங்கள் இயங்கத் தொடங்கிய காலத்தில் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறன் பெற்ற வைதீகர்கள் தங்களது மதத் தலைமையைக் கோயிலுக்குள் மெல்ல மெல்ல நிலை நிறுத்திக் கொண்டு ஆதிக்கம் செய்யும் அளவுக்கு முன்னேறினார்கள். ஒரு பரம்பர அர்ச்சகர் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு அசைக்க முடியாத சக்தியாக வளர்ந்தனர்.தாங்கள் வணங்கிய இந்திரன், சோமன்,வருணன்,வாயு ஆகியோரை நம்பிக் கொண்டிருந்தால் பிழைப்பு ஓடாது என்பதால் அந்தக் கடவுள்களைத் தூக்கிப் போட்டு விட்டு தமிழ்க் கடவுளுக்கு பூணூல் போட்டு ஆரியமாக்கித் தமக்கான கடவுளாக மாற்றத் தொடங்கியதின் தொடர்ச்சியாக ஆரியத்தின் பிடியில் தமிழரின் மரபும் சமயமும் சிக்கி ஆரியமயமாக மாற்றம் கண்டது. ஆகமத்தை சமஸ்கிருதத்துடனும், ஸ்மிருதிகளோடும் இணைத்துப் பார்க்கும் பழக்கம் நமக்குள் இன்றைக்கு நிலைத்து விட்டது. ஆகமம் என்பது வேதத்திலிருந்து வந்தது என்றும், ஆகமம் என்பது வடமொழிச் சொல் என்றும் ஆரியப் பார்ப்பனர்கள் அள்ளிவிடும் கதைக்குள் தமிழர்கள் சிக்கிக் கொள்கின்றனர்.

பல்லவர் காலத்தில் கோயில்களில் கரகுருக்களாக இருந்த வள்ளுவ மறையர்கள் இடத்தில் **(சிறிவள்ளுவம் பூவாணவன் உவச்சன் – அபிதான சிந்தாமணி.வள்ளுவப் பார்ப்பாரியம்–குணா.)** பார்ப்பனர்கள் நுழைந்தனர். நாயக்கர்கள் காலத்திலும் பெரும் கோயில்களில் பூசாரிகளாகவும் ,ஓதுவர்களாக இருந்த தமிழர்களை நாயக்கர் அரசு அகற்றிவிட்டு, இறக்குமதி செய்யப்பட்ட வடுகப் பார்ப்பனர்களைப் புரோகிதர்களாக நுழைத்தனர். பண்டாரங்களின் பழனி கோயில் பார்ப்பனர்களின் கைகளுக்குப் மாறியதைப் போன்று மராத்தியர் ஆட்சியில் இராமேஸ்வரம் கோயிலில் மராத்தியப் பார்ப்பனர்கள் கோயிலின் உள்ளே நுழைய, தேவாரமும்.ஆழ்வார்கள் பாசுரமும் வெளியேறியது. வைதீக மதத்தின் மூலமான வேத மந்திரங்களின் ஆதிக்கம் தமிழ் கோயில்களில் வலுத்தது. பெருங் கோயில்களை, குறிப்பாக வருமானம் அதிக உள்ளவை களைப் பார்ப்பனர்கள் இலக்கு வைத்துக் கைப்பற்றிக் கொண்டனர். பெருங் கோயில்களின் புரவலராக சொத்துடமை வர்க்கங்கள் இருந்ததால் அவைகள் வருமானம் மிகுந்த கோயில்களாக வளர்ச்சியடைந்திருந்தன. .மன்னர்கள் யுத்தம் செய்து, இரத்தம் சிந்தி நாடுகளை கைப்பற்ற, ஒரு துளி வேர்வை கூட சிந்தாமல் அந்நாடுகளிலுள்ள கோயில்களைக் பார்ப்பனர்கள் கைப்பற்றி மந்திரங்களால் மன்னர்களை காலில் விழ வைத்தனர். தமிழகத்தின் பிற்கால மன்னர்களில் பலரும் பார்ப்பன அடிமைகளாக மாறியதால் கோயில் மட்டுமல்ல அரசின் உயர் பதவிகள் அனைத்தையும் பார்ப்பனர்களின் காலடிகளில் வைத்து வணங்கி வந்தனர். பிற்காலச் சோழர்களின் காலத்தில் ராஜகுருவாகவும் தளபதிகளாகவும் இருந்தவர்கள் பார்ப்பனர்களே என்பது குறிப்பிடத்தக்கது.பார்ப்பனத் தலைமை அமைச்சர்களுக்கு பிரம்மஸ்ரீ ராஜா,பிரம்மாதி ராஜா என்ற பட்டங்களைச் சூட்டி மகிழ்ந்தனர். **இறைவனுக்கு அர்பணிக்கப்பட்டதை அரசர் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற**

**ஸ்மிருதிகளின் விதிகளைக்காட்டி வைதீகப் பார்ப்பனர்கள் தங்களை வளப்படுத்திக் கொண்டனர்**. பெருங்கோயில்களை கைப்பற்றியவர்கள். சிறு தெய்வ வழிபாட்டுக் கோயில்கள், கிராமக் கோயில்கள் பக்கம் சென்றதில்லை. காரணம் அந்தக் கோயில்களுக்கென நிலங்களோ நகைகளோ, வணிக வளாகங்களோ ,வீட்டு மனை நிலங்களோ வேறு வகையிலான வருமானமோ கிடையாது. ஏனெனில் அக்கோயில்கள் உழைக்கும் மக்களுக்கானவைகளாக இருந்தன. அது மட்டுமல்ல சூத்திரர்கள் பூசாரிகளாக இருக்கும் எந்தக் கோயிலுக்கும் சென்று வைதீகப் பார்ப்பனர்கள் சென்று வழிபட அவர்களது ஆச்சாரம் தடுத்தது.

புரோகிதத் தொழில் ஒன்று தான் தகுதியோ, திறமையோ, ஒழுக்கமோ,அறிவியல் அறிவோ தேவைப்படாததாகவும், பிறவித் தகுதியே முக்கியமானதாக இருந்ததால், சடங்கு நடத்தவும், கருவறைக்குள் நுழையவும், பூஜை நடத்தவும் பார்ப்பனர்கள் முழு உரிமை பெற்றவர்களாக மாறினர் அதுவரையிலும் பிறப்பின் அடிப்படையில் பூஜை செய்வதற்கு என்று ஒரு தனி சாதி கிடையாது.ஆகமம் அதை வலியுறுத்தவில்லை என்ற நிலையை மாற்றி, பிறப்பின் அடிப்படையில் பார்ப்பனப் பரம்பரையே அர்ச்சகராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மன்னர்களின் ஆசியோடு நிலைநிறுத்திக் கொண்டனர். 1971ல் கலைஞர் தலைமையிலான திமுக அரசு சட்டத்தின் 55(2) பிரிவை சேஷம்மாள் வழக்கின் மூலம் அர்ச்சகர் நியமனத்தில் வாரிசுரிமை கோர முடியாது என்ற திருத்தம் செய்திருந்த போதும், கூடுதலாக சில மாற்றங்களை கொண்டு வருவதற்காகவும் ,அனைத்து சாதியினரும் அர்ச்சகர் சட்டத்தை ஆராயவும் 1979இல் அமைக்கப்பட்ட 13 பேர் கொண்ட மகாராசன் குழு முன் கருத்துக் கூறிய பார்ப்பனர் அல்லாத ஆதினங்களும் ,மடாதிபதிகளும், ஜீயர்களும், ஆச்சாரியர்களும் அர்ச்சகர் ஆவதற்கு பிறவித் தகுதியே முக்கியமானது என்றுரைக்க குன்றக்குடி அடிகளார் மட்டுமே காலத்துக்குத் தேவையான மாற்றம் தேவை என்பதை பதிவு செய்தார்.முற்றும் துறந்த இந்த மகான்களின் மூளைக்குள்,நாற்றமெடுக்கும் இழிவான வர்ணாசிரமம் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து இருந்தது.

கோயில்களைக் கைப்பற்றியவுடன் தமிழர்களின் சமயம் சார்ந்த விசயங்களில் ஆரியமாயை மெல்ல மெல்ல நுழைக்கப்பட்டது. வேதகாலத்தில் சிவனைக் கொலைகாரனாகவும், தீயவனாகவும், தூய்மையற்றவனாகவும் தீட்டித் தீர்த்தப் பார்ப்பனர்கள் சிவனை ஆலிங்கனம் செய்து கொண்டனர். ஐவகை நிலங்களின் தெய்வங்களான முருகன் ,திருமால், கொற்றவை ஆகியோரை பல புனைவுகளின் மூலம் பார்ப்பனர்கள் சொந்தமாக்கிக் கொண்டனர். மாமன் மச்சான், அண்ணன் தம்பி என்று உறவுகளால் இணைத்தனர். அதற்கான கதைகளைப் புனைந்து உலவ விட்டனர். தமிழ்க் கடவுள் முருகனுக்கு ஆரியக் கடவுள் விஷ்ணு தாய்மாமன் ஆனான். விநாயகன் தமிழ் கடவுள் முருகனுக்கு அண்ணன் ஆனான்.தமிழ் பெயர்கள் எல்லாம் சமஸ்கிருதமய மாக்கப்பட்டன. மெய்யுணர்தல் என்பது சைவ சித்தாந்தம் ஆனது. சிவன் ருத்ரன் ஆனான். முல்லையின் மாயோன் ,விஷ்ணுவாகவும், குறிஞ்சியின் சேயோன், முருகன் சுப்ரமணியனாகவும், மருதத்தின் இந்திரன், தேவேந்திரனாகவும், நெய்தலின் வருணன், வருண பகவானாகவும்,

பாலையின் கொற்றவை, காளி, பார்வதியாக வும் மாற்றப்பட்டனர்.. **'அரச மரத்தடி அமர்ந்த புத்தனெல்லாம் உருமாறி ஆனை முகத்தான் ஆனான்'** தண்ணீர் தீர்த்தமானது. குடமுழுக்கு கும்பாபிஷேகம் ஆனது. கருவறை கர்ப்பக் கிரகம் ஆனது. திருமுழுக் காட்டல் அபிஷேகம் ஆனது. திருச்சுற்று பிரகாரமாகவும்,பூசனை பூஜாவாகவும், பூசாரி அர்ச்சகராகவும் ஆனார்கள்.

இமயமலையும் பொதிகையும் உறவு கொண்டன. .தமிழகத்தின் நதிகளும், மலைகளும் பல புராணக் கதைகளுக்குக் கருவானது. வட நாட்டு வைதீகக் கடவுள்கள் கோயில் கருவறையில் பெருந்தெய்வங்களாக பூணூல் அணிந்தபடி குடியமர, ஊருக்குள், கோயிலில் இருந்த குலதெய்வங்கள், ஐயனார், முனியாண்டி கருப்பசாமி, காளியம்மன், மாரியம்மன், பிடாரி, சுடலையாண்டி முதலிய உழைக்கும் மக்களின் தெய்வங்கள் ஊருக்குப் புறத்தே எல்லைச்சாமிகளாக வைக்கப்பட்டன. அவற்றை சிறு தெய்வங்கள் பட்டியலில் சேர்த்தனர்.புத்த,சமணக் கோயில்கள் ,பள்ளிகள் கைப்பற்றப்பட்டு ,திருமால் ,பிள்ளையார், முருகன் சிலைகள் வைக்கப்பட்டு ஆகம வழிபாட்டுத் தலங்களாக மாற்றப்பட்டன. சம்ஸ்கிருத ஆகமம் கோயிலுக்குள் வேர்விட்டு, சதுர்வர்ண நச்சு மரம் வளரத் தொடங்கியது.

பிற்காலத்தில் தமிழ்ச் சமூகம் ஆரியமயத்துக்குள் ஆட்பட்டவுடன் கோயில் நிறுவனமயமாகியது. அதுவரை அனைவரையும் சமமாகக் கருதியப் பல சமயங்களின் ஆகம விதிகளைப் பார்ப்பனியம் திரித்தும் புரட்டியும் போட்ட தோடு,அத்வைத பார்ப்பனர்கள் கோயில் கொடிமரத்துக்கு அப்பால் நுழையக் கூடாது என்று இருந்த நிலையில் வேத ஆகமத்தை, ஸ்மிருதியை கோயிலுக் குள்ளும் நிலைநாட்டத் துணிந்தனர். கி.பி.7-8 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் கோயில்களிருந்து தமிழ் நீக்கப்பட்டு சமஸ்கிருதம் கோலோச்சத் தொடங்கியது. வைதீகக் கருத்துக்களையும், மதிப்பீடுகளையும், பார்ப்பனிய வழிபாட்டு முறைகளையும் தமிழ் சமூகத்தின் உயர் சாதியினரின் மூளைக்குள் திணித்துப் பரவலாக்கியத்தின் விளைவால் ,பெருங் கோயில்கள் மட்டுமல்ல நிகழ்காலத்தில் கிராமக் கோயில்களும் பார்ப்பனமயமாகி ஒடுக்கப்பட்ட மக்களைக் கோயிலுக்கு அப்பால் நிறுத்தியது.(.கிபி.14-.17 காலகட்டங்களில் சிவாச்சாரியார்கள் ஆகம வழியினை விட்டு விலகி அத்வைத (ஸ்மார்த்த) தத்துவங்களில் மூழ்கத் தொடங்கினர்.)

ஆகமங்களில் இன்ன வருணத்தாருக்கு இந்த இடம் என்றோ,சூத்திரருக்குக் கோயிலுக்குள் இடமில்லை என்றோ குறிப்பிடப்படவில்லை என்றாலும் அவர்களை வர்ணாசிரமம் வழி மறித்தது.. வேத ஆரியர்களால் ஆகம விதிகளில் திணிக்கப்பட்ட இடைச்செருகல்களால் ஒடுக்கப்பட்டச் சமூகம் கோயில்களுக்குள் மட்டுமல்ல, கோயிலுக்குச் செல்லும் பாதையில் நுழைவதற்கும் தடைச்சுவர்கள் எழுப்பப் பட்டன. கோயிலுக்குள், வெளிப் பிரகாரம், கொடி மரம், பிரகாரம், உள்பிரகாரம், கருவறை என எல்லைகள் வகுக்கப்பட்டு **பார்ப்பனர்களில் பட்டர்களை கருவறை வரையும், இதர பார்ப்பனர்கள் அர்த்த மண்டபம், சூத்திரர்கள் மகா மண்டபம் ,சில சாதிகள் கொடிமரம் வரையும் அனுமதித்தது .பஞ்சமர்களுக்கு கோபுர தரிசனமே போதும் என்றது.** இந்துக்களான கம்மாளர்களும் ,செட்டியார்களும், சாலியர்களும் ,விஸ்வ கர்மாக்களும் ஆரம்ப

காலத்தில் கோயிலுக்குள் நுழைய முடியாமல் போனது. மீறி நுழைந்தால் கொடூரமான தண்டனைக்கு உள்ளாக்கப் பட்டனர்.கோயில் தீட்டுக் கழிக்கப்பட்டது.அனைத்தும் ஆகமத்தின் பெயரால் செய்யப்பட்டன. ஆகம விதிகளை இவர்கள் தங்களது அதிகாரத்தையும், மேலாண்மையையும், சாதித் தீண்டாமையையும் நிலை நிறுத்தி கொள்வதற்க்கு கையாளும் ஒரு விதமான தந்திரம் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை.தங்களது தேவைக்கேற்ப ஆகமவிதிகளை எப்படி வேண்டுமானாலும் புரட்டிப் போடுவதில் அவர்கள் வெட்கப்படுவதில்லை.

இன்றைக்குத் தமிழ் நாட்டில் ஆகமக் கோயில்கள் என்று அறியப்பட்ட 2000 கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களில் சிலரைத் தவிர ஆகமங்களை முறையாக கற்றுத் தேர்ந்தவர்கள் இல்லை.எடுத்துக்காட்டாக கபாலீஸ்வர் கோயிலிலுள்ள 41 அர்ச்சகர்களின் 4 பேருக்கு மட்டுமே அனைத்து பூஜை முறைகளும் தெரியும்.மதுரை மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள 116 பேரில் 28 பேர் மட்டுமே ஆகம பயின்று சாற்றுதல் பெற்றவர்கள்.14 மிகப்பெரிய கோயில்களான சென்னை கபாலீஸ்வர்,மதுரை மீனாட்சி,திருவண்ணாமலை அண்ணாமலை கோயில்,திருப்பரங்குன்றம் முருகன் கோயில், அழகர் கோயில்,உள்ள அர்ச்சகர்களின் மிகச் சிலரே ஆகம பூஜையைக் கற்றுத் தெரிந்துள்ளனர். இன்றைய நிலையில் எந்தக் கோயிலும் ஆகமத்தின் விதிகள்படிதான் வழிபாடுகள் நடக்கிறது என்று எவராலும் சொல்ல முடியாது.

பல சிவாலயங்களில் சிவாச்சாரியார் அல்லாத சுமார்த்தப் பார்ப்பனர்கள் பூசை செய்வதையும், பிள்ளையாருக்கு ஓத வேண்டிய சுக்லாம் பரதரம் மந்திரத்தை நடராஜனுக்கும் தட்சிணா மூர்த்திக்கும் ஓதுவதும்,தேவி மந்திரத்தை துர்க்கைக்கு, காளிக்கும் ,மாரிக்கும் ,வித்தியாசம் இல்லாமல் சொல்லிவருவதும்,,கடவுளுக்கு செய்யப்படும் அர்ச்சனையை தனி மனிதன் நலனுக்காக செய்வதும்,சிதம்பரத்தில் ஆகமப்படி மகுடாகாமப்படி பூசைக்குப்பதிலாக புதனஞ்சலிபத்ததிப் படி பூசை நடை பெறுவதும்,திருவரங்கம், போன்ற கோயில்களில் துலுக்க நாச்சியாரின் சிலை வழிபாட்டினைப் பெறுவதும், திருச்செந்தூர் கோயிலில் ஆதி சைவர்களுக்குப் பதில் குமார மந்திரம் தெரியாத மாத்வர்கள் அல்லது ஸ்மார்த்ததார்கள் நியமிக்கப் பட்டுள்ளதும்,. ஆங்கிலப் புத்தாண்டின் நள்ளிரவு பூசை நடப்பதும்,பூசைக்கு சம்பளம் வாங்குவதும்,சிவா-விஷ்ணு கோயில்கள்,அஷ்டலட்சுமி கோயில் என ஆகம விதிகளுக்குப் புறம்பாக கோயில் கட்டுவதும்,,ஒரு தெய்வத்துக்குரிய மந்திரத்தை, பிற தெய்வத்துக்கு சொல்வதும் நடக்கிறது. மனைவி இல்லாதவர்கள்,பிரம்மச்சாரிகள்,ஆகியோர் நைமித்திகம் முதலானோர் பூசை செய்யக் கூடாது.என்பது ஆகம விதி.ஆனால் இன்று பல கோயில்களில் இந்த விதி மீறப்படுகிறது.

,இவற்றையெல்லாம் கண்டும் காணாமல் மௌனித்து விடும் நீதி தேவன்கள் அர்ச்சகர் நியமனத்தில் வாரிசுரிமை ஒழிக்கப்பட்டு விட்டதாக கூறியபோதும் குறிப்பிட்ட சாதி,உட்பிரிவை சார்ந்தவர்கள் தான் அர்ச்சகராக வர வேண்டும் என்று புதிய தீர்ப்பு எழுதி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது.நீதிதேவன்கள் சமத்துவம், சமூக நீதி,என வரும் போது மட்டும் சதுர்வர்ணத்தையும், சனாதனத்தையும் தங்கள்

எழுதுகோலில் நிரப்பி கொண்டு தீர்ப்பு எழுதிய கடந்த கால வரலாறு இன்றும் தொடர்வது கொடுமை.

கருவறைக்குள் நுழைந்தால், சாமி சிலையைத்தொட்டு வணங்குவதால், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் . ஆவதால் கோயில் ஒன்றும் குடி மூழ்கி விடப் போவதில்லை. கடவுளும் கோயிலை விட்டு விட்டு பனிபடர்ந்த கைலாசம் போய் விடுவதில்லை. அது உரிமை சார்ந்ததோடு முடங்கி விடுவிடுவதுமில்லை.. அதையும் தாண்டியது. ஆகமத்தின் பெயரால் பார்ப்பனர் அல்லாத மக்களை, இழிமக்கள்,இழி பிறப்பாளர்கள் என்று தீட்டுக்குள் மூழ்கடிப்பதோடு,சாதி, தீண்டாமை தொடர்வதற்கு தொடர்புடையது ,சாத்திரம்,சடங்கு,சாதி, தீண்டாமை என சமூகத்தில் புரையோடிப் போயுள்ள நோய்களுக்கு ஆகமம் ஒரு மூடு திரையாக இருக்கிறது.

கடந்த 200 ஆண்டுகளில் பார்ப்பனர்களால் சொல்லப்படுகின்ற வேத ஆகமத்தின் பல வேர்களை, எடுத்துக்காட்டாக கோயில் நுழைவு,தேவதாசி ஒழிப்பு, குடமுழுக்கு ,தமிழ் அர்ச்சனை என பலவும் போராட்டங்கள் எனும் கோடாரி கொண்டு வெட்டி யெறிந்த வரலாறு நமக்கு உண்டு.சனாதனமும், ஆரியப்பண்பாடும் ,ஆதிக்கமும் வீழ்வது அல்லது வீழ்த்துவது சமூகப் பண்பாட்டுப் புரட்சியின் ஒரு பகுதி என்பதை புரிந்து கொண்டு சல்லிவேர்களையும் விட்டுவிடாமல் வெட்டியெறியக் கோடாரியை கூர்மைப் படுத்த வேண்டிய காலமிது.

## குறிப்புகள்

.............


1. கோயில்-நிலம்-சாதி.-பொ. வேலுச்சாமி. பக்-50
2. பெரியார் மரபும் திரிபும் -எஸ்.வி.ராஜதுரை. பக்-176.
3. இந்துமதம் எங்கே போகிறது.-அக்னி ஹோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் - பக்-36
4. ஆலய பிரவேச உரிமை-p.சிதம்பரம் பிள்ளை.பக் 6.)
5. ரிக் வேத சமூகம் ஒரு பார்வை.-சுந்தர சோழன்.
6. ஆலய பிரவேச உரிமை.P.சிதம்பரம் பிள்ளை.பக்-73
7. பண்டைத் தமிழ் சமூகத்தில் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்-ஆ.சிவசுப்பிரமணியன் .பக்.65
8. பண்டைத் தமிழ் சமூகத்தில் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும். - ஆ.சிவசுப்பிரமணியன்.-பக்82
9. தமிழர் சமயமும் சமஸ்கிருதமும்-தமிழண்ணல்-பக் 21
10. தமிழரின் வேதம் எது.ஆகமம் எது பக்-14. முதுமுனைவர் மு.பெ.சத்யவேல் முருகனார்.
11. ஆலய பிரவேச உரிமை - P.சிதம்பரம் பிள்ளை -பக் 75)
12. தமிழர் சமயமும் சமஸ்கிருதமும்-தமிழண்ணல்-பக் 49
13. முப்பது கட்டுரைகள் -குடவாயில் பாலசுப்ரமணியன்.பக்-47
14. அனைத்து சாதியினர் அர்ச்சகர் நியமனமும் உச்ச நீதி மன்றத் தீர்ப்பும் ஆகமங்களும்-கி.வீரமணி.)

இந்திய அரசின் தொலைத் தொடர்பு நிறுவனத்தில் (BSNL பாரத் சஞ்சார நிகாம் லிமிடெட்) அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தேசிய தொலைத்தொடர்பு ஊழியர்கள் சம்மேளனத்திலும், (NFTE-BSNL) அனைத்திந்திய தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்திலும் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். மனித உரிமை ஆர்வலர்.

இவரது முதல் படைப்பான" லண்டன் – ஒரு பழைய சாம்ராஜ்யத்தின் அழகிய தலை நகரம் "தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையால் 2013ஆம் ஆண்டின் சிறந்த பயண இலக்கிய நூலுக்கான விருதினைப் பெற்றது.

உலகமயம் இந்தியாவில் ஏற்படுத்தப்போகும் தாக்கம் பற்றிய "பன்னாட்டுச் சந்தையில் பாரத மாதா", சாதியைப் பற்றிய "சாதி என்னும் பெரும் தொற்று – தொடரும் விவாதங்கள்", காவிகளைப் பற்றிய "காவி என்பது நிறமல்ல" என்ற இவரது நூல்கள் பெரிதும் பேசப்பட்டவைகளாகும்.

இவரது சொந்த ஊர், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், துறையூர் என்ற கிராமம். வசிப்பது தமிழ் வளர்த்த மாமதுரையில்.

## *The Essence of Social Justice.*

- "If a larger country oppresses a smaller country, I'll stand with the smaller country.
- If the smaller country has a majoritarian religion that oppresses minority religions, I'll stand with minority religions.
- If the minority religion has caste and one caste oppresses another caste, I'll stand with the caste being oppressed.
- In the oppressed caste, if an employer oppresses his employee, I'll stand with the employee.
- If the employee goes home and oppresses his wife, I'll stand with that woman.

*Overall, oppression is my enemy!"*

---

*Periyar* **E.V.R**

# திராவிடப்பொழில் இதழ்
## (அக்டோபர் - டிசம்பர் 2022)
## ஆய்வுக் கூட்டம்

பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்கா சார்பாக திராவிடப்பொழில் இதழ்(அக்டோபர்-டிசம்பர் 2022) ஆய்வுக் கூட்டம் இணைய வழியாக சனவரி 21,2023 அமெரிக்க கிழக்கு நேரம் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.திராவிடப்பொழில் இதழ் ஆசிரியரும்,பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்காவின் தலைவருமான மருத்துவர் சோம.இளங்கோவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றும்,நிகழ்வு குறித்தும் தொடக்க உரை ஆற்றினார். அவர் தமது உரையில் "திராவிடப் பொழில் இதழ், தனிநாயக அடிகளார் தமிழரின் பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆரம்பித்த அந்தப் பத்திரிக்கையின் தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.நமது பெருமையை நாம் சொல்வதை விட மற்றவர்கள் அறிந்து சொல்வதுதான் நமக்கு உண்மையான பெருமையாக இருக்கும்.அந்த அளவிலே நாம் முடிந்த அளவிற்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் இந்த இதழை ஆராய்ச்சி இதழாக நடத்தி ஆதாரபூர்வமான கருத்துக்களை வெளியிட்டு மக்களுக்கு தெரிவிப்போம் என்ற அளவிலே இதைத் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையிலும் புதிதாக ஆசிரியர் குழுவில் இணைந்துள்ள பேரா.அய்யா நாகநாதன் அவர்களோடும் மற்ற ஆசிரியர் குழுவினருடன் சேர்ந்து நடத்துகின்றோம்.அண்மையில் நான் தமிழ்நாடு வந்திருந்தபோது தூய வளனார் கல்லூரி திருச்சியிலே தமிழ் உயராய்வுத் துறையில் பேச சந்தர்ப்பம் கிடைத்தது.அங்கே அவர்கள் இதை வரவேற்றார்கள்.அந்த மாதிரி நாம் படித்த கல்லூரிகளில் திராவிடப் பொழில் இதழை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு அனுப்பி ஆராய்ச்சி மாணவர்கள் கட்டாயம் படிக்கும் இதழாக இதனைக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.இந்த இதழில் இரண்டு கட்டுரைகளை ஆய்வாளர்கள் எடுத்துக் கொண்டு பேசுகிற நிகழ்ச்சியாக இந்த நிகழ்வு நடக்க இருக்கிறது.இந்த நிகழ்ச்சியை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மன்றம் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்ப் பள்ளி வளர்ச்சிக்கும் தமிழ்க் குழந்தைகள் வளர்ச்சிக்கும் அமெரிக்காவிலே அரும்பாடுபட்டு வரும் துரைககண்ணன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்துவார் " என்று குறிப்பிட்டு உரையாற்றினார்.

தொடர்ந்து நிகழ்வை ஒருங்கிணைத்த திரு.துரைக்கண்ணன் அவர்கள் ஆய்வுக் கட்டுரைகளை ஆய்வு நோக்கில் பேச வந்திருக்கும் ஆய்வாளர்களையும் இந்த ஆய்வுக் கட்டுரைகளை எழுதி இன்று ஏற்புரை ஆற்ற வந்துள்ள எழுத்தாளர்களையும்

ஆய்வுரை கேட்க வந்துள்ள சான்றோர்களையும் வரவேற்கிறேன் என்று குறிப்பிட்டு இந்த இதழில் 5 கட்டுரைகள் சிறப்பாக வந்துள்ளன.அதில் இரண்டு கட்டுரைகளை மட்டும் ஆய்வுரைக்கு எடுத்துக்கொண்டுள்ளோம் என்று குறிப்பிட்டார். எழுத்தாளர் ஓவியா அவர்கள் எழுதியுள்ள 'வரலாற்றுச்சுவடுகளில் நாத்திகத்தின் அறிவுத் திறனோக்கிய வளர்ச்சி ' என்னும் கட்டுரையைப் பேரா.மணிமேகலை சித்தார்த்தன் அவர்கள் முதலில் உரையாற்றுகின்றார் எனக் குறிப்பிட்டு அவரைப் பற்றிய அறிமுகத்தை நிகழ்த்தி பின் பேரா.மணிமேகலை சித்தார்த்தன் அவர்களைப் பேச அழைத்தார்..

பேரா.மணிமேகலை சித்தார்த்தன் அவர்கள் தம்து ஆய்வு உரையில் "எழுத்தாளர் ஓவியா அவர்கள் வரலாற்றுச்சுவடுகளுக்கும் நாத்திகத்திற்கும் உள்ள தொடர்பு ,ஆத்திகம் எப்படி மக்களை அடிமைப்படுத்தியது? அதுவும் எப்படி சமூகத்தில் இருந்த ஒரு குறிப்பிட்ட மக்களை அடிமைப்படுத்தி வைத்தது என்பதைப் பற்றியெல்லாம் மிக அழகாக எழுதியிருக்கிறார்.அவருடைய கட்டுரையின் நோக்கமே நமது ஈரோட்டுப்பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 'கடவுள் இல்லை,கடவுள் இல்லை,கடவுள் இல்லவே இல்லை கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்,கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்,கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி' என்ற தத்துவம்,ஏன் இப்படிச்சொன்னார்?அதற்கான காரணம் என்ன,கடவுள் மறுப்புக் காரணத்தை ஏன் பெரியார் சொல்லவேண்டும் என்ற எல்லா வினாக்களுக்குமான விடைகளை எல்லாம் இந்தக் கட்டுரையில் தோழர் ஓவியா அவர்கள் தொகுத்து வழங்கியிருக்கிறார்.அதற்கான சாட்சியங்களும் இவரின் கட்டுரையிலே பதிவிடப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலே வாழ்ந்த ஜேம்ஸ் வில்லியம் டிராப்பர் என்பவர் எழுதிய புத்தகம்தான் " The History of the Conflict between religion and science " அதாவது மதத்திற்கும் அறிவியலுக்கும் இடையிலான முரண்பாடுகளின் வரலாறு என்னும் ஆங்கிலப் புத்தகம்.அந்த ஆங்கிலப் புத்தகத்தை முழுவதுமாகப் படித்து நமக்கு இந்தக் கட்டுரையை ஓவியா அவர்கள் தந்திருக்கிறார்.

கட்டுரைகள் பலவிதம்.ஒரு தலைப்பைக் கொடுத்தால்,அதற்கு உண்டான பல செய்தி களைச்சேகரித்துக்கொண்டு,ஒருகட்டுரையை என்னைப்போன்ற பேராசிரியர்கள் கொடுப்போம். ஒருவரின் புத்தகத்தைப் படித்துக்கொண்டு வந்து,அதைப்பற்றிய செய்திகளைக் கொடுப்பது இரண்டாவது வகை கட்டுரை.இன்னொரு வகை,ஒன்றோடு ஒன்று ஒப்பிடுவது.உதாரணமாக , பாரதியோடு பாரதிதாசனை ஒப்பிடுவது போன்ற கட்டுரைகள்.வேறு ஒருவரின் புத்தகத்தை ஆராய்ந்து,அதில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்களை அழகுபடச்சொல்லி,அந்த அழகுபடச்சொன்ன கருத்துகளுக்குச் சான்றாக தன்னுடைய கருத்துக்களையும் அங்கு பதிவிடுவது என்பது இன்னொரு வகை கட்டுரை. இந்தக் கடைசியில் சொன்ன கட்டுரை வடிவம்தான் தோழர் ஓவியா அவர்கள் எழுதியிருக்கும் கட்டுரை.ஜேம்ஸ் வில்லியம் டிராப்பர் அவர்களின் கட்டுரையை அப்படியே மொழிமாற்றம் செய்வது என்பது இயலாது. ஓவியா என்ன செய்திருக்கிறார் என்றால் அந்த ஆங்கிலக் கட்டுரையை மொழியாக்கம்

செய்து,எங்கெல்லாம் சிறுசிறு விளக்கங்கள் தந்து செழுமைப்படுத்த முடியுமோ ,எங்கெல்லாம் அதற்குத் தொடர்பான செய்திகளைச்சொல்லி நம்மை உற்சாகப்படுத்தமுடியுமோ ,நம்மை எப்படி தன்வயப்படுத்த முடியுமோ அப்படி எல்லாம் இந்தக் கட்டுரையை அவர் எழுதியிருக்கிறார்.

அறிவியல் என்பது ஏதோ சில கண்டுபிடிப்புகளின் தொகுப்புகள் அல்ல,மூட நம்பிக்கைகள் என்பதைப் பொய்ப்பிப்பதற்கும் , அதைப் பொய்ப்பிப்பதற்காகப் போராடுவதும், மக்களுடைய மனதில் இருந்து அந்த மூடத்தனமான சிந்தனைகளை வெளியே கொண்டு வந்து மக்களுக்கு எது தேவையோ அந்தப் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் புகட்டுவதும் அறிவியல்தான் என்று சொல்லுகின்றார் இந்தக் கட்டுரை ஆசிரியர் ஓவியா அவர்கள். மனிதனின் நம்பிக்கையால் ஏற்படும் மன அழுத்தத்தைப் பற்றி சொல்வதுகூட அறிவியல்தான். பரிணாமக் கோட்பாடு என்பது என்ன என்று சொல்லும்போது,அதுஎந்த மதமாக இருந்தாலும் சரி ,கிறித்துவமாக இருந்தால் ஆண்டவன் உலகத்தைப் படைத்தார்,முதல் நாள் உலகம் ஒழுங்கற்றதாக இருந்தது,அப்புறம் மலைகள் உண்டாகட்டும் என்று சொன்னார்,வரிசையாக அது உண்டாகட்டும்,இது உண்டாகட்டும் என்று சொன்னார்.கடைசியாக மனிதனைப் படைத்தார் என்று கிறித்துவம் சொல்லும்.இது மாதிரிதான் மற்ற மதங்களும் சொல்லிச்செல்கின்றன.இறைவன்தான் படைத்தான் என்று சொல்கின்றன.நமது நாட்டைப் பொறுத்தவரையில் ,இது எப்படி சரியென்று எனக்குத் தெரியவில்லை.மனிதர்களைப் படைப்பவன் ஒரு இறைவன்,படைக்கப்பட்ட மனிதர்களைக் காக்கின்றவன் வேறொரு இறைவன்,படைக்கப்பட்ட மனிதர்களை அழிக்கின்றவன் ஒரு இறைவன். அதில் படைக்கின்ற இறைவன் தலையிலிருந்து ஒரு பிரிவைப் படைத்தானாம்,தோள்களிலிபருந்துஒரு பிரிவைப் படைத்தானாம்,தொடையிலிருந்து ஒருபிரிவைப் படைத்தானாம்,கால்களிலிருந்து ஒரு பிரிவைப் படைத்தானாம்.,இந்த நான்கு பிரிவுக்கும் கீழாக இன்னொரு பிரிவையும் படைத்தான்.இதுதான் சநாதன தர்மம் என்று சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இது நம் எல்லோருக்கும் தெரிந்த செய்தி தான். ஆக இப்படிப்பட்ட படைப்புத் தத்து வங்களை எதிர்ப்பதுதான் பரிணாமக்கோட்பாடு என்னும் அறிவியல். இன்றைக்குப் பலரும் பரிணாமக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டி ருக்கிறார்கள். எனவே பரிணாமக் கோட்பாடு என்பதே படைப்புக் கோட்பாட்டை எதிர்ப்பதுதான். நாம் அறிந்தவரையில் கலிலியோ,புரூனோ போன்ற அறிஞர்கள் எல்லாம் மதத்திற்கு எதிராக கருத்துக்களை வைத்து உயிர்த்தியாகம் செய்தவர்கள். புரூனோ போன்ற அறிவியல் அறிஞர்கள் மதவாதிகள் சொன்ன கருத்துகளை ஏற்றுக்கொள்ளாததால் அவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள்.வில்லியம் ஜேம்ஸ்,தன்னுடைய நூல் எதற்காகப் பயன்படும் என்று சொல்கிறபோது,யாரெல்லாம் உண்மையைக் கண்டு அடைகிறார்களோ அவர்களுக்கு எல்லாம் ஒரு வழிகாட்டியாக,வெளிச்சம் தரும் விளக்காகத் தன் புத்தகம் இருக்கும் என்று சொல்கிறார். ஒரு அறையில் நிறைய பொருட்கள். ஆனால் இருட்டாக இருக்கிறது.அந்த இருட்டு அறையில் ஒரு விளக்கைப் போடுகிறபோது,எப்படி அந்த ஒளியானது எல்லாப்பொருட்களையும் நமக்குக்

காட்டுகிறதோ,அதைப்போல தோழர் ஓவியா அவர்களின் கட்டுரை ஜேம்ஸ் வில்லியம்ஸ் அவர்களின் புத்தகத்தை அப்படியே நம் பார்வைக்கு கொண்டு வந்து தந்திருக்கிறது

உண்மையைத் தேடுபவர்கள் யார்? அந்த உண்மையைத் தேடுபவர்களுக்கு வழிமுறையாக இருப்பது எது என்று வருகின்றபோது முதலாவதாக மதவாதிகளின் புரட்டுகளுக்கு முதல் அடியைக் கொடுத்தவர்கள் பயணத்தை மேற்கொண்டவர்கள்தான்.நில வழி,நீர் வழியாகப் பயணம் செய்தவர்களே கடவுள் பற்றிய கோட்பாடு எல்லாம் உடைவதைற்குக் காரணமானவர்கள்..உலகம் தட்டை என்பதுதான் மதக் கோட்பாடு.உலகம் உருணடை என்று சொன்னவர் கலிலியோ.எக்ஸிகுளோஸ் என்னும் நாடகக் கலைஞன்தான் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்தவன்.'கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன் ' என்று ஏன் தந்தை பெரியார் சொன்னார்?கடவுளைப் பரப்ப,பரப்பத்தான் மக்களின் மனதில் பலவிதமான மூடத்தனமான சிந்தனைகள் நிரம்புகிறது.கிரேக்க,ரோம் நாட்டை ஆண்ட மன்னர் குலம் தத்துவங்களை வைத்துக்கொள்கிறது. ஏழை, எளிய, பாவப்பட்ட மக்களுக்கு மதத்தை வைக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக அலெக்சாண்டர் அவர்களைச்சொல்கின்றார்கள்.அலெக்ஸாண்டர் ,தான் சூபிடர் என்னும் பெண் தெய்வத்தின் மகன் என்று தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்கிறான்.33 வயது இளைஞன்.உலகின் மிகச்சிறந்த ஒரு வீரன்.உலக நாடுகள் பலவற்றையும் வீழ்த்திய மாமன்னன்.

தன் வீரத்தின் மீது அவனுக்கு நம்பிக்கை யில்லை, மாறாக மதத்தின் மீது தன் நம்பிக்கையைத் தூண்டுகிறான்.நான் யார் தெரியுமா? நான் பெண் தெய்வத்தின்மகன் என்று சொல்கின்றான்.கடவுளுக்கு என்னென்ன ஆற்றல்கள் உள்ளதோ ,அவையெல்லாம் தனக்கு உண்டு என்று சொல்கின்றான்.அது இன்றைக்கும் நம் நாட்டில் இருக்கிறது அல்லவா?.எத்தனை பேர் இன்றைக்கு நான்தான் கடவுள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.அப்படி நான் கடவுள் எனற சொன்ன அலெக்சாண்டரை மக்கள் இறைவன் என்று நினைக்க ஆரம்பிக்கிறார்கள். செயற்கையாக ஒரு நகரத்தை உண்டாக்கியவன் அலெக்சாண்டர்.அலெக்சாண்டிரியா என்னும் நகரத்தை கி.பி. 331-ல் உருவாக்குகிறான். மிகப்பெரிய பரப்பளவில் உண்டாகப்பட்ட அந்த நகரத்திற்கு எகிப்திலிருந்து யூதர்களைக் கொண்டு வருகின்றான்.இலட்சக்கணக்கான அடிமைகள் பல நாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகிறார்கள்.மக்களை ஒன்று படுத்துகிறான் அலெக்சாண்டர்.பூர்விக எகிப்தியர்கள்,யூதர்கள்,கிரேக்கர்கள் என்று எல்லோருமொன்றாக வாழும் நிலமாக அலெக்சாண்டிரியாவை அலெக்சாண்டர் உருவாக்குகிறான். ஆனால் போர்கள் மூடத்தனத்தை வளர்த்தது.மத நம்பிக்கைகளை வளர்த்தது.போரில் தோற்றுப்போனவனின் கடவுள் வலிமையற்ற கடவுள் என்று சொல்லப்படுகிறது.

இந்திய நாட்டைப் பொறுத்த அளவில் கூட இந்தியா முழுவதும் வாழ்ந்த நாகர்கள் என்னும் திராவிடர்கள் மற்றும் ஆரியர்களுக்கும் நடந்த போரில் இதுபோன்ற பல நிகழ்வுகள் நடந்திருக்கக் கூடும் அதனால் தான் அவன் உன்னுடைய கடவுளை விடவும் என்னுடைய கடவுள் உயர்ந்தவன் என்று சொல்லிவிட்டான். இதுவும்

கூட அப்படித்தான். தோல்வி அடைந்த மன்னனும் சரி மக்களும் சரி வெற்றியடைந்த மன்னனின் கடவுளை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள் இதுதான் கலாச்சாரப் பரிணாமம் இது அப்படியே பரவப் பரவ ஒரு புதிய சமுதாயம் உருவாகிறது அப்படித்தான் கலாச்சாரங்களும் மதங்களும் பரவ ஆரம்பித்திருக்கின்றன. இந்த நிலையில்தான் அலெக்சாண்டர் ஓர் அருங்காட்சியகத்தை அமைக்கிறான். அந்த அருங்காட்சியகம் ஒரு மிகச்சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கி இருக்கிறது உலகில் இதுவரை தோன்றிய அத்தனை தத்துவங்களையும் அறிவியலையும் நிலை நிறுத்துகிற ஒரு பல்கலைக்கழகமாக அதனை அலெக்சாண்டர் நிறுவியிருக்கிறான்.

உலகில் பல்வேறு இடங்களில் இருந்து கற்றறிந்த சான்றோர்களை அலெக்சாண்டர் நகரத்திற்கு அழைக்கிறார்கள் அவர்கள் எழுதிய புத்தகம் எல்லாம் நல்ல தொகை கொடுத்து விலைக்கு வாங்கப்படுகின்றன எழுதியவர்களின் நூல்கள் படிகள் எடுத்து அங்குள்ள நூலகங்கள் வைக்கப்படுகின்றன. அறிஞர் குழுக்களை ஏற்படுத்துகிறார்கள். வானவியல், கணிதவியல், மருத்துவவியல் போன்ற பல்வேறு பிரிவுகளில் பேராசிரியப் பெருமக்களை அமர்த்துகிறார்கள். அவர்கள் மூலமாக பல மாணவர்கள் உலகெங்கும் பல்வேறு நாடுகளில் இருந்து வந்து அந்த அருங்காட்சியகத்தில் கல்வி பயில்கிறார்கள். ஆக இப்படிப்பட்ட காலத்தில் தான் உலகம் உருண்டை என்பது மிக அழுத்தமாக வலியுறுத்தப்படுகிறது அதுவரை இருந்த கடவுள் உலகத்தைத் தட்டையாகதான் படைத்தார் என்ற கோட்பாடு உடைக்கப்படுகிறது. மதக் கோட்பாடு இறைக் கோட்பாடு முழுவதுமாக தகர்க்கப்பட்டு உலகம் என்பது ஓர் உருண்டை வடிவமானது என்ற எரோனியஸ் என்ற அறிவியல் அறிஞர் அங்கு பிரகடனப்படுத்துகிறார் அதற்குப் பிறகு ஓவியா அவர்கள் நிறைய செய்திகளை சொல்லி இருக்கிறார்கள்.... எப்படி இந்த மதங்களில் இருந்து மனிதன் மீண்டு மனிதனாக வாழ முடியும் என்பது தான் ஜேம்ஸ் வில்லியம்ஸ் டிராப்பர் அவர்கள் சொல்லக்கூடிய இறுதியான ஒரு செய்தி.

மதம் என்னும் பெரிய நோய் பிடியாது இருக்க வேண்டும் என்பது வள்ளலார் அவர்களின் கோட்பாடு. மதம் என்பது ஒரு நோய் அந்தப் பிணி மனிதனைப் பிடிக்க கூடாது அப்படி பிடிக்கின்ற பொழுது அந்த இடத்திலே கொலை, மனித உயிர்கள் பழி வாங்கப்படுதல், ஆதிக்க வெறி வளரும் ஆகவே தான் நமது தந்தை பெரியார் அவர்கள் கடவுள் இல்லை, கடவுள் இல்லை கடவுள் இல்லவே இல்லை கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன் என்று சொல்கின்றார் இப்பொழுது தெரிகிறதா ஒரு கடவுளை வைத்து மக்களை எப்படி சிந்திக்க விடாமல் முற்போக்கு சிந்தனைகளை வளர விடாமல் அது தடுத்து இருந்தது என்பது, நமக்கு இந்த ஓவியா அவர்களுடைய அருமையான கட்டுரை மூலம் புலனாகிறது. ஒரு கட்டுரை அல்லது படைப்பு என்பது எப்பொழுது அது பெருமைக்கு உரியதாக இருக்கும் என்றால் எழுதுகின்றவர் படைக்கின்றவர் எந்த உணர்வோடு எழுதுகின்றாரோ படைக்கின்றாரோ அந்த உணர்வை வாசிப்பவர்களும் பெற வேண்டும் அதை பெற வைக்க வேண்டும் அதுதான்

இந்த எழுத்து வெற்றி அப்படிப்பட்ட ஒரு மகத்தான வெற்றியை தோழர் ஓவியா அவர்கள் பெற்றிருக்கிறார். அறிவியல் கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்காதவர் பெரியார் ஆனால் அவர் ஒரு சமூக விஞ்ஞானி என்று போற்றப்படுவதற்கான காரணங்களை எந்த விதமான ஐயமும் இல்லாமல் இந்தக் கட்டுரை மூலம் நாம் உணர்கிறோம் என்று கூறி முடித்தார்..

தொடர்ந்து எழுத்தாளர் ஓவியா அவர்களைப் பற்றி அவைக்கு அறிமுகம் செய்து ஏற்புரை ஆற்ற எழுத்தாளர் ஓவியா அவர்களை அழைத்தார் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் துரைக்கண்ணன் அவர்கள் .

**எழுத்தாளர் ஓவியா அவர்களின் ஏற்புரை :**

"அனைவருக்கும் என் பணிவன்பான வணக்கங்கள். இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்திக் கொண்டிருக்க கூடிய பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்காவினுடைய தலைவர் அய்யா சோம. இளங்கோவன் அவர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் என் வணக்கம். என்னுடைய கட்டுரையை ஆய்வு செய்து ஒரு உற்சாகமிக்க உரையை பேரா. மணிமேகலை அவர்கள் மிக மகிழ்ச்சியுடனும் உணர்வுடனும் அந்த உரையை ஆற்றி இருக்கிறார். உற்சாகமான உரையை நல்ல தமிழில் வழங்கி இருக்கிறார்.பெரியார் பன்னாட்டு அமைப்பு அமெரிக்காவினுடைய இந்த முயற்சிக்கு அதாவது திராவிடப் பொழில் இதழில் வந்திருக்கக்கூடிய என்னுடைய கட்டுரையை இன்றைய தினம் ஆய்வுக்காக எடுத்துக் கொண்டதற்கு நான் மிகுந்த மகிழ்ச்சியோடு நன்றி தெரிவிக்கின்றேன். திராவிடப் பொழில் இதழுக்கு கட்டுரையை தோழர் நேரு என்னிடம் கேட்ட பொழுது இந்தப் பணியில் நான் இருந்த காரணத்தினால் நான் கேட்டேன். இந்தப் பணியை ஒட்டியே ஒரு கட்டுரையை நான் தரட்டுமா என்று. அதாவது நேரடி வெறும் மொழிபெயர்ப்பாக இல்லாமல் ஆனால் பெரும்பான்மையாக அந்த நூலின் மொழிபெயர்ப்பை ஆதாரமாக வைத்து இந்தக் கட்டுரையை நான் தரட்டுமா என்று கேட்டவுடன் அவர் உடனே இசைவு தந்தார்.

சிறுவயதிலிருந்தே எங்களுடைய அடிப்படை நாத்திகத்தின் மீது, மத எதிர்ப்பின் மீது கட்டமைக்கப்பட்டது. திராவிட இயக்க குடும்பத்தில் வளர்ந்த எவருக்கும் இந்த உணர்வு இருக்கும். அதாவது நாத்திகத்தை ரொம்ப வசதியாக ஒதுக்கி விட்டுப் போவதை எளிதாக பெரியாரியவாதிகளால் எடுத்துக் கொள்ள முடியாது. ஏன் என்று கேட்டால் பெரியார் இயலாளர்கள் பேசுகின்ற நாத்திகம் என்பது அவர்களுடைய அறிவை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக அல்ல. மாறாக , இந்தச் சமூக மாற்றத்திற்கு நாத்திகம்தான் அடிப்படையான ஒரு கருவியாக இருக்கும்,நாத்திக உணர்வு உள்ளவர்கள்தான் சரியாக செயல்பட முடியும் என்ற தெளிவார்ந்த ஒரு புரிதலின் அடிப்படைதான்.. எனவேதான் நாத்திகத்தை விட்டுக் கொடுக்கும் பொழுது நாம் ஒரு மாற்று குறைவாகத்தான் நாம் அந்த விஷயத்தை பார்க்கின்ற ஒரு பார்வை நமக்கு எப்போதும் உண்டு அந்த அடிப்படையில் தான் பெரியார் சொன்ன இந்த வார்த்தைகள் " கடவுள் இல்லை கடவுள் இல்லை கடவுள் இல்லவே இல்லை கடவுளை தப்பித்தவன் முட்டாள் கடவுளை பரப்பியவன் அயோக்கியன் கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி" இதனை

மேடை தோறும் முழங்கி இருக்கிறோம் அந்த அனுபவம் இருக்கிறது

இன்றைக்கு வரைக்கும் மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் பெரியார் ஏதோ கடவுளைத் திட்டி விட்டார் , இல்லையென்றால் சாமி கும்பிடுகிற மக்களை திட்டிவிட்டார்.. அப்படித்தான் ஒரு புரிதல் இருக்கிறது. அதனால்தான் இந்தக் கட்டுரையினுடைய முதல் துவக்கமே, நான் சொல்ல விரும்பியது இந்த வாசகங்கள் வசைச் சொற்கள் அல்ல மாறாக ஆய்வுச் சொற்கள் என்பது.. அது வசை போல் ஒலிக்கிறதே ஒழிய அது வசை மொழி அல்ல அதுதான் உண்மையின் மொழி அதை வசை மொழியாக இவர்கள் திணிக்கிறார்கள் எனவே அதை வைத்துத் துவங்கி இன்று அந்த மொழிபெயர்ப்பு நூல் வெளிவந்திருக்கிறது. இது 150 வருஷத்திற்கு முந்தைய நூல். இதைத் தாண்டி இந்த உலகம் எவ்வளவோ வளர்ந்திருக்கிறது தத்துவம்,சிந்தனை என்று பார்த்தால் அதுவும் தாண்டி வளர்ந்து போய் இருக்கிறது ஆனால் எனக்குள் ஒரு ஐயப்பாடு தமிழில் மொழி பெயர்த்தல் என்ற விஷயம் அறிவு சம்பந்தப்பட்ட நூல்களைத் தவிர்த்து விட்டு திடீரென்று ஒரு பாய்ச்சலாக நவீன மொழிபெயர்ப்புகள் பாய்ந்து வந்து விட்டது என்ற ஒரு பார்வை எனக்கு இருக்கிறது. எனவே 150 வருடங்களுக்கு முன்னால் பதிவு செய்யப்பட்ட இந்த வரலாறு என்பது மிக முக்கியமானது இன்றைக்கும் கூட. போப்பாண்டவர் மன்னிப்பு கேட்டு விட்டார் ஆனாலும் அது அவ்வளவு சாதாரணமான விஷயம் அல்ல கலிலியோவுக்கு செய்த கொடுமைக்கு போப்பாண்டவர் 1992 இல் மன்னிப்பு கேட்கிறார் ஆனால் கலியோவைத் தண்டித்தது மட்டுமா தவறு? இந்தச் சமுதாயத்தை 1500 ஆண்டுகள் வளர்ச்சி இல்லாமல் தேக்கமுற வைத்தது.,வைத்த குற்றத்தைச் செய்தது அந்த மதம். அதுதான் இந்த நூலின் முக்கியமான கருத்து.அந்த நூலில் இருக்கும் உரையாடல் மொழியை மிக முக்கியமானதாக நான் பார்க்கிறேன் அதற்காகவே இந்தக் கட்டுரையை நான் எழுதினேன் பேராசிரியர் மணிமேகலை அவர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இடத்தில் திராவிடப் பொழில் இதழைப் பற்றியும் நான் சொல்ல வேண்டும் இது ஒரு நல்ல முயற்சி இன்று எவ்வளவோ வரலாறு என்ற பெயரில் பதிவு செய்யப்படுகிறது. வரலாறு என்ற பெயரில் உண்மையைச் சொல்வதுதான் நமது நோக்கம் ஆனால் பொய்களை வரலாறாகப் பதிவு செய்வதற்கு நமது எதிரிகள் தயாராக இருக்கிறார்கள் இந்த நேரத்தில் திராவிடப் பொழில் இதழின் நோக்கம் எப்படி அலெக்சாண்டரியா அருங்காட்சியகத்தின் நோக்கம் இருந்ததோ அதைப் போல அறிவை நிலை பெறச் செய்வது, அறிவைப் பரப்புவது என்பதாக இருக்கிறது. .அறிவின் பக்கம் நிற்போம் அதுதான் அலெக்சாண்டிரியா அருங்காட்சியகத்தின் குரல் அதுபோல இன்றுவரை தொடர்கின்ற ராயல் சொசைட்டி மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்டது அதனுடைய நிபந்தனையே என்னவென்று பார்த்தால் அறிவியலுக்குப் புறம்பான எதையும் நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பது. அந்த மன நிலையில் இருப்பவர்கள் தான் அறிவியல் கழகத்தில் உறுப்பினராக முடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள் அதேபோல வரலாறு என்பது உண்மையைத்

தேடுவதாக இருக்க வேண்டும் வரலாறு என்பது உண்மையை வெளிக்கொணர்வதாக இருக்க வேண்டும் ஆனால் ஆட்சியாளர்கள் ஆட்சியில் இருக்கும் பொழுது அவர்களுக்குத் தேவையான வரலாற்றை அவர்களே படைத்துக் கொள்கிறார்கள்.

எப்படி அலெக்சாண்டர் தன்னைக் கடவுளின் மகனாக மாற்றிக்கொண்டாரோ அதேபோல வரலாறு என்பது ஆட்சியாளர்களின் சார்பாக அவ்வப்போது மாற்றப்பட்டு விடுகிறது. அந்த அபாய நிலையில் இருந்து வரலாறு காப்பாற்றப்பட வேண்டுமானால், உண்மையைத் தேடுபவர்கள் வரலாற்றை எழுத வேண்டும். வரலாற்றை நேசிப்பவர்கள், இந்த மனித சமூக வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு வரலாற்றைப் படிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் வரலாற்றை எழுத வேண்டும்.. அந்த அடிப்படையில் தான் இந்தத் திராவிடப்பொழில் ஆய்வு இதழ் ஒரு வரலாற்று இதழாகவும் வெளி வருகின்றது அதேபோல சமூகத்தை ஆய்வு செய்து விடைகள் தரும் இதழாகவும் திராவிடப்பொழில் வந்து கொண்டிருக்கிறது திராவிடப்பொழில் இதழின் மிகச் சிறப்பான ஒரு முடிவு இது ஒரு பைலிங்குவல் என்று ஆக்கியது ஏனென்று கேட்டால் இன்று நமது பிள்ளைகள் எல்லாருமே இரண்டு மொழிகளில் தான்,தமிழ்,ஆங்கிலத்தில்தான் படிக்கிறார்கள் இரண்டு மொழிகளில் சிந்திக்கிற இயல்பு என்பது வந்துவிட்டது. இரண்டு மொழியையும் சேர்த்துத்தான் நமது வாழ்க்கை இருக்கிறது இது சரியா தவறா என்பது வேறு விஷயம் இன்றைய எதார்த்தத்தில் இரு மொழி என்பது தேவையாக இருக்கிறது அப்படி இருக்கும் பொழுது ஓர் ஆராய்ச்சி இதழ், இருமொழி இதழ் என்கின்ற அளவில் அதுவும் உலக அளவில் கொண்டு வருவது என்பது மிகச் சிறப்பான முடிவு இதனுடைய ஆசிரியர் குழுவிற்கும் என்னுடைய பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற நிகழ்வுகளில் நானும் உங்களில் ஒருவராக பயணிக்க நான் அணியமாக இருக்கிறேன்." என்று உரையாற்றினார்.

தொடர்ந்து பேரா.வீ.அரசு அவர்கள் எழுதிய "History Of Social Justice in Tamil Society " என்னும் ஆங்கிலக் கட்டுரையை ஆய்வு செய்த கவிஞர் இராஜன் பாபு அவர்களை அரங்கிற்கு அறிமுகம் செய்து அவரை ஆய்வுரை செய்வதற்கு வருமாறு ஒருங்கிணைப்பாளர் துரைக்கண்ணன் அவர்கள் அழைத்தார்.

கவிஞர் இராஜன் பாபு அவர்கள் தனது ஆய்வுரையில் " பேராசிரியர் வீ.அரசு அவர்கள் மிக ஆற்றலான ஆராய்ச்சியாளர் ஸ்ரீலங்காவில் இருந்து ஆரம்பித்துப் பல இடங்களில் தமிழ் குறித்தும் கலாச்சாரம் குறித்தும் மொழி குறித்தும் மிகப்பெரிய ஆய்வுகளை மேற்கொண்ட மாமனிதர். அவருடைய கட்டுரையில் என்னுடைய பார்வை எப்படி இருக்கிறது என்பதை மாத்திரம் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன் இவருடைய கட்டுரை ஏழு பக்கக் கட்டுரை இதில் பேராசிரியர் எழுதியிருப்பது மனிதன் தோன்றியது 60 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் என்று சொன்னால் தமிழன் தோன்றிய காலத்திற்குப் பின் தோன்றிய பண்டைய இலக்கியங்களின் மூலமாக இந்தச் சமூக நீதி என்பது அப்போதே இருந்திருக்கிறது என்று சொல்கின்றார். வள்ளுவன் மிக அழகாகச் சொன்னான் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று,' பகுத்துண்டு பல்லுயிர்

ஓம்புதல்' என்று பேசி இருக்கிறார். பாரதி அழகாக 'காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாடினான். இருந்திருக்கிறது ஆனால் இடையில் ஏற்பட்ட சில தடங்கல்கள் சில தவறுகள் காரணமாக சமூக நீதி காணாமல் போய்விட்டது அதனையும் பேராசிரியர் குறிப்பிடுகிறார்

எப்பொழுது சமூக நீதி காணாமல் போனது, எந்த நூற்றாண்டில் அது காணாமல் போனது, காணாமல் போவதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர்கள் யார் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். நான் எந்த மதத்தையோ சமூகத்தையோ குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை ஆனால் அவர் குறிப்பிட்டு இருப்பதைப் போல மதத்தின் அடிப்படையில், இனத்தின் அடிப்படையில் தான் கொஞ்சம் கொஞ்சமாக சமூகநீதி அரிக்கப்பட்டு விட்டது,அழிக்கப்பட்டது என்று பார்த்தால் எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன.இதற்குக் காரணம் பிராமணிய சமுதாயம் என்பதையும் சமஸ்கிருதம் உள்ளே வந்ததால்தான் சமூக நீதி அழிந்தது என்பதையும் மிக நேர்த்தியாக பேராசிரியர் குறிப்பிடுகிறார். ஒரு சிறு கூட்டம் வந்து ஆளுகின்ற போது இவையெல்லாம் மாறிப் போகுமா ? என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. தமிழர்கள் இந்தியா என்ற ஒரு நாடு இல்லாத காலத்தில் கூட தமிழர்கள் சமூக நீதியைக் கடைப்பிடித்தவர்கள், இன்றைய வட மாநிலங்கள் என்று சொல்கிறோமே அந்த பகுதியில் எல்லாம் சத்திரியர்களாக இருந்தால் மட்டுமே மன்னர்களாக வர முடியும் ஆனால் தமிழ்நாட்டில் அப்படி இல்லை எவன் வீரனோ அவன் மன்னனாக வர முடியும்.வந்திருக்கிறார்கள்.

இப்படி ஒரு சமூக நீதியோடு ,வசதியான வாழ்க்கையை வாழ்ந்த தமிழர்களுக்குள் எப்போது இந்தப் பிணக்கு வந்திருக்கக்கூடும்?. பேராசிரியர் அவர்கள் தமது கட்டுரையில் 19ஆம் நூற்றாண்டில் எப்பொழுது ஆங்கிலேயர்கள் வந்தார்களோ, அப்போது ஆங்கிலேயர்கள் கொஞ்சம் சமூக நீதியை பேச ஆரம்பித்தார்கள் என்று குறிப்பிடுகிறார். அதில் பெரும்பாலானவற்றில் எனக்கு உடன்பாடு உண்டு. ஆனால் ஆங்கிலேயர்களும் சமூக நீதி பேசுவதற்காக வரவில்லை ஆள வேண்டும் என்று வந்தார்கள் தங்கள் மதத்தைப் பரப்ப நினைத்தார்கள். ஆனால் அவர்கள் மதம் பரப்பியபோது ஒரு சில நன்மைகள் கிடைத்தது எங்கெல்லாம் பழங்குடியினர் இருக்கிறார்களோ எங்கெல்லாம் பட்டியல் இனத்தவர்கள் என்று இருக்கிறார்களோ அந்த இடங்களுக்கு எல்லாம் சென்றார்கள் சேவை என்ற ஒரு வார்த்தையை அதற்கு முன்னால் தமிழன் எவ்வளவு நேர்த்தியாக கடைப்பிடித்துக் கொண்டு இருந்தார்களோ அதைப்போல இவர்கள் செய்ய ஆரம்பித்தார்கள்; அந்த நேரத்தில் பல அமைப்புகள் சமூக நீதிக்காக தோன்ற ஆரம்பித்தன என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்

சமூக நீதி என்பது வெறும் இட ஒதுக்கீட்டோடு முடிந்து விடப் போகிறதா? இட ஒதுக்கீடு என்பது சமூக நீதியில் ஒரு கூறு அது ஒரு கருவி. சமூக நீதி என்பது ஒரு மிகப்பெரியது; அளப்பரியது. சமூக நீதி என்பது முதன் முதலில் பெண்களுக்கு இல்லாமல் போனது; பழங்குடியினருக்கு இல்லாமல் போனது ;மாற்றுத் திறனாளிகளுக்கு இல்லாமல் போனது; எந்த நீதி அவர்களுக்கு எல்லாம் மறுக்கப்பட்டதோ எங்கே அரசியல் நீதி கிடைக்காமல் போனதோ எங்கே பொருளாதார நீதி கிடைக்காமல் போனதோ அதையெல்லாம் கொடுப்பது சமூக நீதி. என்று பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுகிறார். சமூக நீதி

என்பது இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தான் விரும்பியதை அடைவது ஆனால் இங்கே அது மறுக்கப்பட்டது என்பதையும் பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுகின்றார். பாலின சமத்துவதற்கான அடிக்கல் இங்குதான் நாட்டப்பட்டது. பெரியார் வருகின்ற பொழுதும் அதற்கு கொஞ்ச காலத்திற்கு முன்பு தொடங்கப்பட்டது என்றும் சொல்கிறார்.

திருநெல்வேலியில் இருக்கும் இரண்டு கல்லூரிகளில் ஒரு கல்லூரியில் பட்டியல் இன மாணவர்கள் நிறையப் பேர் படிக்க வாய்ப்பு கிடைத்தது.இன்னொரு கல்லூரியில் கிடைக்கவில்லை ஏன்?. பெண்கள் அடிமைத்தனத்தை ஆங்கிலேயர்கள்தான் முதலில் கொண்டு வந்தார்கள். இன்று வரை போப்பாண்டவராக ஒரு பெண் ஆக முடியாது. இன்று இங்கு பெண்கள் பல பொறுப்புகளில் இருக்கிறார்கள். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்தவர் பெரியார் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை ஆனால் ஆங்கிலேயர்கள்தான் இந்தச் சமூக நீதியைக் கொண்டு வருவதற்கு அடிக்கோலிட்டார்கள் என்று சொல்கின்ற பொழுதுதான் என்னுடைய பார்வை என்பது மாறுபடுகிறது. அவர்களை விட சமூக நீதியில் நாம் நிறைய வந்திருக்கிறோம் மற்ற நாடுகளில் வர்க்க முரண்பாடு இருக்கிறது நம் நாட்டில் ஜாதி முரண்பாடு இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஜாதி குறித்த பார்வையும் இடம் குறித்த பார்வையும் இன்றைக்கு மாறி இருக்கிறது.ஊர்,சேரி என்பதைப் பற்றி மாற்றுப் பார்வை வந்திருக்கிறது.

பீகார் அமைச்சர் சந்திரசேகர் இரண்டு வாரங்களுக்கு முன்னால் இராமாயணம் குறித்து ஒரு கருத்து தெரிவித்தார் இராமாயணத்தில் சமூக நீதி இல்லை மாற்றுத் திறனாளிகளை விலங்குகளோடு ஒப்பிட்டு இருக்கிறது பெண்களை விலங்குகளோடு ஒப்பிட்டு இருக்கிறது இது எப்படி அனைவருக்குமான புத்தகமாக இருக்க முடியும் என்று அவர் கேள்வி கேட்டார் இது பெரிய சர்ச்சையாகிறது வட இந்திய ஊடகங்களில் எல்லாம் இது பேசப்படுகிறது நாம் இதுவரைக்கும் இவற்றைப் பேசிக் கொண்டிருந்தோம் இராமாயணம் புனையப்பட்டது ,மகாபாரதம் புனையப்பட்டது என்று. இப்பொழுது வடநாட்டவரும் பேச ஆரம்பித்து விட்டார்கள். இனம்,மொழி என்பதெல்லாம் மாறி இன்றைக்கு பெரும்பான்மையினர் என்ற போர்வையில் ஆபத்து வந்து கொண்டிருக்கிறது சமூக நீதி என்பது விளிம்பு நிலையில் இருக்கும் எந்த மனிதனுக்கும் சமமான இடம் கிடைக்க செய்வது, சமமான வளர்ச்சி கிடைக்க செய்வது, சமூகநீதி என்பது ஒட்டுமொத்தமான வளர்ச்சி .ஒட்டுமொத்தமான வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி .ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக வளர்கின்ற வளர்ச்சி. இன்னும் பெண்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் அரசியலும் வருவதற்கு நிறையச் செய்ய வேண்டி இருக்கிறது

வடகிழக்கு மாநிலங்களில் திருமணம் முடிந்தவுடன் ஆண்கள் மாமியார் வீட்டுக்கு சென்றுவிடுகிறார்கள்.அங்கேயே தங்கி விடுகிறார்கள். சமூக நீதி தத்துவத்தில் நம்மை விட அதிகமாக இருக்கிறார்கள் அதற்கு ஒரு காரணம் அங்கே கிறிஸ்தவம் பரவியது என்பதை நான் மறுக்கவில்லை ஆனால் அது மட்டுமே காரணம் அல்ல அதையும் தாண்டி நிறையச் செய்திகள் இருக்கின்றன சமூக நீதியின் ஆணிவேர்களாக முதன்முதலாக

இருந்தவர்கள் தமிழர்கள். பேராசிரியர் ஒன்றைக் குறிப்பிடுகிறார், மலேசியாவிற்கும் இலங்கைக்கும் இங்கிருந்தவர்களைக் கூலிகளாக அழைத்துச் சென்றார்கள். அப்படி அவர்கள் சென்ற பொழுது, சமூக நீதியில் அவர்கள் கொஞ்சம் மேலே வந்தது போல இருந்தது என்று குறிப்பிடுகிறார். அழைத்துச் செல்லப்பட்டவர்கள், கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்டவர்கள். எப்படி அவர்களுக்கு சமூக நீதி கிடைத்திருக்க கூடும்? கூலிகளாகப் போனார்கள் ; துன்பப்பட்டார்கள்;அந்த நாட்டின் குடிமக்களானார்கள்; இப்பொழுது வசதியாக வாழ்கிறார்கள்

இன்னொரு பக்கம் இரண்டு ஜாதிகள் அதிகமாக கிறித்துவத்திற்கு மாறினார்கள் கிறித்துவத்திற்கு மாறியதன் காரணமாகவே அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட ஆரம்பித்தது அதனால் அவர்களுக்கு எளிதாக சமூக நீதி கிடைத்தது என்று சொல்கிறீர்கள் ஆனால் அதே இரண்டு ஜாதிகள் தான் இன்றைக்கு கிறித்துவத்தில் இருக்கும் ஜாதி பிரச்சனைகளுக்கு காரணமாக இருக்கிறார்கள். அப்படியானால் அவர்களுக்கு எப்படி ஒரு சரியான சமூக நீதி கிடைத்திருக்க கூடும்? இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன.

உத்தரப்பிரதேசத்தில் பெண்கள் தைரியமாக சைக்கிளில் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள் யோகி செய்தது அல்ல இது.வட மாநிலங்களிலும் மாற்றம் நடந்து கொண்டு இருக்கிறது. நான் 2012 ஜம்மு காஷ்மீர் சென்ற பொழுது அங்கே இருக்கும் வங்கிகள் பெண்களுக்கு கடன் கொடுக்காது 2012ல் இது. அப்படி பெண்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்றால் இரண்டு ஆண் கெஜட் ஆபிசர்கள் கேரண்டி கொடுக்க வேண்டும். ஒரு மாத காலம் அங்கு உட்கார்ந்து அந்தப் பெண்களுக்கு கடன் கொடுப்பதற்காகப் போராடினேன்.நாம் இங்கே சிறுபான்மை மக்கள் என்று சொல்கிறோம் அங்கே அவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் பொழுது பெண்களுக்கு சமூக நீதி மறுக்கப்படுகிறது இந்த நாட்டில்தான் பண்டிட் என்று சொல்லி கற்றவர்கள் என்று சொல்லி ஒரு ஜாதிக்கு பெயர் வைப்பதும் இந்த நாட்டில் தான். நான் அதையும் இல்லை என்று மறுக்கவில்லை.

சமூகநீதி என்பதில் நாம் இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகமாக இருக்கிறது இதை நிறைய இடங்களில் பேராசிரியர் அரசு அவர்கள் அழகாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார் அதையும் நான் மறுக்கவில்லை இந்தக் கட்டுரையில் எனக்கு சில முரண்களும் இருக்கின்றன தமிழன் என்றைக்கும் சமூக நீதியில் சளைத்தவனாக இருந்ததில்லை ஏனென்றால் இவன்தான் சமூக நீதி குறித்த முதல் குரலை இந்தியாவில் எழுப்பியவன். பல கவிதைகள், இலக்கியங்கள் இதற்கான சான்றுகளைச் சொல்கின்றன. பேரா.அரசு அவர்களின் அற்புதமான இந்தக் கட்டுரைக்கு வாழ்த்துகள்." என்று உரையாற்றினார்.

தொடர்ந்து கட்டுரை ஆசிரியர் பேரா.வீ.அரசு அவர்களைப் பற்றிய குறிப்புகளை அவையில் எடுத்துவைத்து ,ஏற்புரை நிகழ்த்த பேரா.வீ.அரசு அவர்களை ஒருங்கிணைப்பாளர் துரைக்கண்ணன் அவர்கள் அழைத்தார்.

பேரா.வீ.அரசு அவர்கள் தனது ஏற்புரையில்

ராஜன் பாபு அவர்கள் என்னுடைய அந்தக் கட்டுரையை பற்றி மூன்று மிக முக்கியமான புள்ளிகளை விமர்சனத்திற்கு உட்படுத்தி இருக்கிறார் அந்த மூன்று புள்ளிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களை மாத்திரம் நான் உரையாடுகிறேன்.

அந்தக் கட்டுரை என்பது மிகப் பெரிய புத்தகமாக எழுத வேண்டிய மிகப் பரந்த விரிந்த பரிமாணங்களைக் கொண்ட கட்டுரை . அதில் அங்கங்கே புள்ளி புள்ளி மாதிரி எவை மிக முக்கியமான மடை மாற்றங்களாக சமூகத்தில் நடந்தனவோ அவற்றைக் கோடிட்டுக் காட்டி அந்தக் கட்டுரை மிக வேகமாகப் போகிறது ஒவ்வொன்று குறித்தும் ஒரு புத்தகம் எழுத வேண்டிய அளவிற்கான பின்புலம் உடைய கருத்துக்கள். ராஜன் பாபு அவர்கள் அதை வாசித்து தனது கருத்துகளைச் சொன்னதற்கு நன்றி.

முதலில் இந்த தமிழ்ச் சமூக வரலாற்றில் வரலாற்றுக்கு முந்தைய காலம் தொடங்கி நம்முடைய சிலப்பதிகாரம் திருக்குறள் இவைகள் எல்லாம் உருவாகிய வரலாற்று காலம்,அதாவது கி.பி ஆறு ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய தமிழ் சமூக வரலாறு என்பது வேறு .அது நமக்கு சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் ,அண்மையில் நமக்குக் கிடைத்திருக்கிற ஏராளமான தொல்பொருள் ஆய்வுகள் இவை எல்லாம் காட்டுகின்றன. அந்தச் சமூகம் குடிகளால் ஆனது. அப்போது பெரிய அரசு என்ற ஸ்டேட் என்ற பாமினேஷன் உருவாகவில்லை அப்போது இருந்த சமூகம்,அதன் முரண்பாடுகள் பற்றிய தன்மை என்பது வேறு.

ஆனால் இந்த வரலாற்றுக்குப் பிந்தைய ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் ஒரு மிகப்பெரிய மடை மாற்றம் நிகழ்ந்தது என்று நான் அதில் எழுதி இருக்கிறேன் அந்த மாற்றத்தில் பார்ப்பனியம், சமஸ்கிருதம் ஆகியவற்றுக்கு மிகப்பெரிய பங்களிப்பு உள்ளது என்பது என்னுடைய வாதம் .அதை ஒரு சிறு கூட்டம் மட்டும் வந்து சமூகத்தில் அவ்வளவு பெரிய மாற்றத்தை செய்து விட முடியுமா என்பது போன்ற ஒரு கேள்வியை, சந்தேகத்தை நண்பர் ராஜன்பாபு அவர்கள் கிளப்பி இருக்கிறார்கள்.சரி, என்ன விஷயம் என்று சொன்னால் அன்றைக்கு ஆட்சி புரிந்த பல்லவ மன்னர்களாக இருக்கட்டும் பிற்காலச் சோழர்களாக இருக்கட்டும் வெவ்வேறு பகுதிகளில் இருந்த அரசர்களைத் தங்களுடைய நேரடிப் பண்பாட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவர்கள் பார்ப்பனர்கள். சமஸ்கிருதத்தை அதற்கு வழியாக ஆக்கிக் கொண்டார்கள். சமஸ்கிருதம் நல்ல சான்று. ஏன் வழிபாட்டு மொழியாக கோயில்களில் சமஸ்கிருதம் இருக்கிறது? ஏழு எட்டாம் நூற்றாண்டு தொடங்கி பதினெட்டாம் நூற்றாண்டு வரை உங்களுடைய தமிழ் என்னவாக இருந்தது? மணிப் பிரவாளத் தமிழ் .இப்படி நிறைய நிறைய சமஸ்கிருதச்சொற்கள் தமிழ் மொழியில் சேர்ந்து தமிழே அழிந்து விடுமோ என்ற பயம் ஒரு பக்கம் இருந்தது ஆனால் இப்படி சமஸ்கிருதம் சேர்ந்ததன் விளைவாக தெலுங்கு வந்தது, கன்னடம் வந்தது, மலையாளம் வந்தது ,ஆனால் தமிழ் தன்னைக் காத்துக் கொண்டது. அதற்கு மிக முக்கியமான காரணம் தமிழ் இரட்டை வழக்கு மொழி.

நாம் பேசுவதைப் போல் எழுத மாட்டோம். எழுதுவது வேறு பேசுவது வேறு. ஆகையினாலே பதிவு செய்யப்பட்ட மொழி நமக்குத் தொடர்ச்சியாக மாற்றம் இல்லாமல் இருந்து வந்ததன் காரணமாக நமது மொழி தப்பித்தது .இல்லையென்றால் சமஸ்கிருதம் கலந்த தெலுங்கு கன்னட மலையாள மொழியைப் போல் இன்னொரு மொழியாக தமிழ் உருமாறி இருக்கும் இதை யார் செய்தார்கள்? இதற்கு யார் காரணாமாக இருந்தார்கள்?. கோயில்களையும் அது சார்ந்த

பண்பாட்டுகளையும் அது சார்ந்த வரலாற்று பொருளாதாரம் பின்புலங்களையும் நீங்கள் பார்க்க வேண்டும் உங்கள் இசை மாற்றப்பட்டது, உங்கள் கலை ,வரலாறு மாற்றப்பட்டது. உங்களுடைய வழிபாட்டு முறை மாற்றப்பட்டது. அது சார்ந்த அனைத்து வரலாறுகளும் ஒரு சாதி சார்ந்த சமஸ்கிருதம் சார்ந்த வரலாறாக கட்டமைக்கப்பட்டது என்பது வரலாறு. இது ஒரு சிறிய கூட்டத்தால், ஸ்மார்த்த பிராமணர்கள் என்று சொல்லக்கூடிய சங்கராச்சாரி கட்டமைத்த கூட்டம். அவர்களுக்கும் அரசுக்கும் இருந்த உறவுகள். அரசர்கள் அவர்களைக் கொண்டாடினார்கள் அவர்களுக்கு இலவசமாக நிலம் கொடுத்தார்கள் அவர்களுக்கு என்னென்ன வசதி செய்ய முடியுமோ அவ்வளவு செய்தார்கள்.

அரசர்கள் சமஸ்கிருதப் பள்ளிக்கூடங்களை நடத்தினார்கள். தமிழ்ப் பள்ளிக்கூடங்களை நடத்தியதாக வரலாறு இல்லை. சமண பௌத்த மதங்களை ஒழித்தார்கள் ஆசிவக மதத்தை ஒழித்தார்கள் தமிழ்ச் சமூக வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் பொது உடமை பேசிய, தமிழ் மரபை பேசிய மனிதர்கள், மனிதனை மையப்படுத்திய மரபினர். இந்த மரபுகள் எல்லாம் தூக்கி எறியப்பட்டு மனிதனை மய்யப்படுத்தாத புராண பரப்பிலான ராமாயணம் மகாபாரத வேதம் மரபுகள் என்பது நம் மதமாகின்றது நம் பக்தி இலக்கியமாகியது நம்முடைய கோயிலாகியது இந்த வரலாறு தான் நான் அங்கே சுட்டி காட்டியது ஆகையினாலே இது ஒரு சிறிய கூட்டம் இதனால் இது செய்ய முடியுமா என்ற உங்கள் ஐயத்திற்கு நான் இதை பதிலாக சொல்ல விரும்புகிறேன்

கிறித்துவ வரலாறு சார்ந்து நடந்த சமூக மாற்றங்கள் பற்றி நான் குறிப்பிட்டது. மேலோட்டமாக நான் சொல்லி இருக்கிறேன் அதையும் நீங்கள் விமர்சனத்திற்கு உட்படுத்தி இருக்கிறீர்கள் ஒருவேளை நீங்கள் திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்ட வரலாறோடு சேர்ந்து தமிழ்நாட்டு கிறித்துவ மத வரலாற்றை பேசுவது போல் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அந்த மாவட்டங்களில் இருந்த கிருத்துவ மத வரலாறு என்பது வேறு. ஆனால் காலனி ஆட்சி வந்த பொழுது காலனி ஆட்சிக்குள் இரண்டு விஷயங்கள் இருந்தது அதை நாம் மறந்து விடக்கூடாது. ஒன்று பாதிரியார்கள் இன்னொரு பக்கம் காலனி ஆட்சியாளர்களாக வந்த கவர்னர் போன்ற பெரிய அதிகாரிகள். எடுத்துக்காட்டாக எல்லீஸ் போன்றவர்கள். இது மாதிரி வந்த கால்டுவெல் போன்றவர்கள் தமிழ்ச் சமூகத்திற்கு என்ன செய்தார்கள் என்று கேட்டால் தமிழ் ஒடுக்கப்பட்ட குழந்தைகள், பெண்கள் இவர்கள் எல்லோரையும் நம்முடைய புராண சமூகம், சனாதன சமூகம், பார்ப்பனிய சமூகம் படிக்கக் கூடாது நுழையக்கூடாது என்று உருவாக்கி வைத்திருந்த கட்டமைப்பை முதன் முதலில் உடைத்து தூக்கிப் போட்டவர்கள் இந்த கிறித்துவ அதிகாரிகள்தான். இதற்கு நிறையச் சான்றுகள் உண்டு அதிலிருந்துதான் அந்த ஒடுக்கப்பட்டவர்கள் படிக்கிறார்கள். பெண்கள் படிக்கிறார்கள். இஸ்லாமியர்கள் படிக்கிறார்கள் .

இந்தப் படிப்பு என்பது வந்ததன் மூலமாக, வாசிப்பு என்பது வந்ததன் மூலமாக, இதழியல் என்பது வந்ததன் மூலமாக, புத்தகப்பதிப்பு என்று வந்ததன் மூலமாக நமக்கு கிடைத்த மிகப் பிரமாண்டமான வளர்ச்சி,அடிப்படையான வளர்ச்சி அந்தக் கற்றல்(லிட்டரசி). அதனை உருவாக்கிய தன்மை என்பது பெரிய புரட்சி .அதை யார் செய்தார்கள்? ஆங்கிலேயர்தான்

செய்தார்கள். அப்படி அவர்கள் செய்ததன் மூலமாகத்தான் நமது ஆட்கள் சங்க இலக்கியங்களைக் கண்டுபிடித்தார்கள் தொல்காப்பியத்தைக் கண்டுபிடித்தார்கள் திருக்குறளைக் கண்டுபிடித்தார்கள். உங்களிடம் ஒரு சின்ன கேள்வி.. சுவடியிலிருந்த இந்த பிரதிகளை எல்லாம் 16 17 ஆம் நூற்றாண்டில் பௌத்தம் சமணம் ஆசிகம் சார்ந்த பதிவுகளை எல்லாம் நிறைய எரித்து விட்டார்கள். அவைகள் எல்லாம் இப்போது இல்லை. கொஞ்சம் இந்த பவுத்தம் சார்ந்த தொல்காப்பியம், சமணம் சார்ந்த சீவக சிந்தாமணி,சமணம் என்று சொல்லக்கூடிய திருக்குறளையும் இந்த சைவத்தைச் சார்ந்தவர்கள் வைத்துக் கொளுத்தி இருந்தால், உங்கள் புறநானூற்று தமிழன் அகம் புறம் என்று சொல்லும் சங்க இலக்கியங்கள் தமிழ் என்று என்னென்னவெல்லாம் பேசுகிறோமே அவற்றை எல்லாம் எங்கிருந்து நாம் பேசி இருப்போம். இவை அச்சுக்கருவி கண்டுபிடித்து அதனை அச்சிட்டு நமக்கு கொடுத்த அந்த மரபில் அந்த வெள்ளைக்காரன் செய்த மரபில் வந்ததுதான். அதனைத் தாமோதரன் பிள்ளை அவர்களோ,உ. வே.சாமிநாதய்யர் அவர்களோ,வையாபுரி பிள்ளை போன்றவர்களோ முயற்சி செய்திருக்கலாம். ஆனால் அந்தக் கட்டமைப்பில்,கல்வி மறுமலர்ச்சியில்,அச்சிட்டு மறுமலர்ச்சி செய்ததில் கிறித்துவத்திற்கு மிகப்பெரிய தொடர்பு உண்டு.

ஒரு பாதிரியாராக போப்பாண்டவராக ஒரு பெண் வர முடியுமா என்று நீங்கள் கேட்டீர்கள் நியாயமான கேள்விதான். நம்மூரில் மட்டும், நமது ஊரில் கோயில் பூசாரிகளாக நமது பெண்கள் வந்துவிட முடியுமா ?எங்கேயாவது இருக்கிறார்களா ? பெரிய பெரிய கோயில்களில் பெண்களை நீங்கள் அனுமதிக்கிறீர்களா? இது உலகம் தழுவியது. ஆண்கள் என்ற வெறியின் ஊடாக ஆண் அதிகாரம் என்ற வெறியின் ஊடாக பெண்களை ஒதுக்குதல் என்பது ஒரு சமூக வரலாறு. அதற்குள் நிறைய விஷயங்கள் இருக்கின்றன அந்த வரலாற்றின் ஊடாக பெண் அடிமை என்பது உலகம் தழுவிய விசயமாக இருக்கிறது அது கிறித்துவத்துக்குள்ளும் இருக்கிறது ஆனால் இதற்கு மாறாக சனாதனத்துக்குள் இந்துமதக் கொள்கைக்குள் கிறித்துவத்தை விட கொடுமைப்படுத்த கூடிய பெண் அடிமைத்தனம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

14ஆம் நூற்றாண்டில் இருந்து 21ம் நூற்றாண்டு வரை ஏகப்பட்ட கண்டுபிடிப்புகள் வெள்ளைக்காரர்கள் கண்டுபிடித்தார்கள். உங்களுக்குத் தெரியும் புவியீர்ப்பு விசை சார்ந்து, மின்சாரம் சார்ந்து, அணு உட்கரு சார்ந்து, அணு உடைத்தல் சார்ந்து நூற்றுக்கணக்கான புதிய புதிய கண்டுபிடிப்புகள் நமது வாழ்க்கையை அப்படியே சுற்றி தலைகீழாக மாற்றியது .ஊடகம் புதிதாக உருவாகியது,இது எல்லாம் 19 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்தது. இதை நமக்குக் கொடுக்கிறார்கள். காலனியர்கள் நமது நன்மைக்காகக் கொடுத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. கொள்ளையடிப்பதற்காகத்தான் கொடுத்தார்கள்.ஆனாலும் அதன்மூலம் நமக்கு ரோடு கிடைத்தது நமக்கு ட்ரெயின் கிடைத்தது நமக்குப் பள்ளிக்கூடம் கிடைத்தது இதை எல்லாம், கிடைத்த இந்த நன்மையை நாம் எப்படி பார்ப்பது?, இந்த வளர்ச்சியை எப்படிப் பார்ப்பது, இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த இந்துத்துவாவாதிகள் அந்தப் பிரித்தானியர்களைப் பார்க்கிற பார்வையில் நாம் பார்க்க முடியுமா

என்பது தான் என்னுடைய கேள்வி. அந்தப் பின்புலத்தில்தான் நான் இந்தக் கேள்வியை எதிர்கொள்கிறேன்

இலங்கை மலேசியா சென்றவர்களுக்கு சமூக நீதி கிடைத்தது என்று எழுதியிருப்பது பற்றிச்சொன்னீர்கள். இது ரொம்ப விவரித்து எழுத வேண்டிய விஷயம். நான் ஒரு கேள்வி கேட்கிறேன் இவர்களெல்லாம் வெள்ளைக்காரன் கூப்பிட்டவுடன் எதற்காக கிளம்பிப் போனார்கள் இந்த ஊரில் அவர்களுக்கு குடியிருக்கும் மனை கிடையாது. இந்த ஊரில் அவர்கள் தீண்டப்படாதவர்கள். ஊரில் செருப்பு போட்டு வர முடியாது. வண்டியில் வர முடியாது .துண்டு போட முடியாது. இதெல்லாம் 1970 வரை நானே நேரில் கண்டது இன்றைக்கு மட்டும் என்ன மாறிவிட்டது? இன்னும் இரட்டைக்குவளை இருக்கிறது குடிக்கும் தண்ணீரில் மலம் அள்ளி போடுவது இருக்கிறது. இந்த ஒதுக்கப்பட்ட மக்கள் ஆப்பிரிக்கக் காடுகளுக்கும் சிலோன் காடுகளுக்கும் மலேசிய பர்மா காடுகளுக்கும் போனதன் மூலமாக இந்த அடிமைத்தனத்திலிருந்து ஒடுக்குமுறையிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைத்தது ஆனால் அங்கே போய் அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்தார்களா என்பது வேறு கேள்வி. ஆனால் இந்த அடிமைத்தனத்திலிருந்து ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை ஆனார்கள் அவர்களுக்கு உடை கிடைத்தது சாப்பாடு கிடைத்தது இங்கு சாப்பாடு கூட கிடையாது நாம் அப்படித்தான் அந்த சமூக வரலாற்றை பார்க்க வேண்டி இருக்கிறது சமூக நிகழ்வுகளில் என்ன மாதிரியான பாசிட்டிவ் விஷயங்கள் வந்தன அதற்குள் என்ன நெகட்டிவான விஷயங்கள் இருந்தன என்ற ஒட்டுமொத்த பார்வையோடு நாம் அந்த சமூக வரலாற்று போக்கை ,இயக்கங்களை மதிப்பீடு செய்ய வேண்டும்

சின்ன சின்ன எடுத்துக்காட்டுகளை எடுத்துக் கொண்டு நாம் பார்க்கக்கூடாது.தமிழில் ஒரு நல்ல பழமொழி உண்டு. எடுத்துக்காட்டுகள் எல்லாம் சொத்தையானவை என்று. . அதேபோல இரண்டு கல்வி நிறுவனங்களை எடுத்துக்கொண்டு சில சில நிகழ்வுகளையும் நாம் ஒரு எடுகோலாகக் கொண்டு அதை ஒரு சமூக வரலாற்று நிகழ்வு என்ற கண்ணோட்டத்தில் நாம் வாசிப்பது, பேசுவது என்பது எல்லாம் அந்த வரலாற்று பார்வையாக அமைய முடியுமா என்பது எனது கேள்வி. 3500 ஆண்டுகள் கால தமிழ் சமூக வரலாற்றில் முதல் ஆயிரம் ஆண்டுகள் என்பது தனி. அடுத்த ஆயிரம் ஆண்டுகள் இன்னொன்று ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் இருந்து நமக்கு ஏற்பட்டது ஒரு மிகப்பெரிய மாற்றம் .எழுச்சி அது. 20 ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது இந்த தொடர்ச்சிக்குள் என்ன விஷயங்கள் என்பது முக்கியம். இந்த மண்ணில் ஒரு தாடிக் கிழவர் புதிய புதிய வார்த்தைகளை கண்டுபிடித்தார் அதுதான் சுயமரியாதை. அந்தக் காலத்தில் வேறு யாரும் அதைப் பற்றி பேசியதாக எனக்கு தெரியவில்லை.

அந்த சுயமரியாதை வேண்டுமென்றால் நீ ஜாதி தளையிலிருந்து வெளியில் வா .சுயமரியாதை வேண்டுமென்றால் பெண்களே உங்கள் கருவறை கதவைச் சாத்துங்கள் நீங்க என்ன சமைச்சு போடுவதற்காகவா, அவனுக்காகவா நீங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறீர்கள்.இல்லை. நீ அதை எல்லாம் தூக்கி போட்டு வந்து படி. சுதந்திரமாக வாழ கல்யாணம் கத்திரிக்காய் எல்லாம் முக்கியமில்லை, உன்னுடைய

சுயமரியாதைதான் முக்கியம் என்று சொன்ன இந்தக் கிழவருடைய சுயமரியாதை தமிழ் சமூக நீதியில் மிக முக்கியமானது சோசியல் எத்திக்ஸ் இன் தமிழ் என்று எடுத்துக்கொண்டால் அது ஒரு பெரிய விஷயம் .அதற்கு சாதகமாக இருந்த பெரியவர்கள் தமிழில் திரு.வி.க, வ உ சி, என்று தமிழ் சமூக நீதிக்கு ஒரு பெரிய வரலாறு இருக்கிறது 19ம் நூற்றாண்டில் உலகம் தழுவி உருவான மார்க்சியம் என்று சொல்லக்கூடிய உழைப்பு சம்பந்தப்பட்ட கோட்பாடு வளர்ச்சி அடைந்து தனி மனிதனுடைய சுயமரியாதை சார்ந்த பண்பில் உருவாகக்கூடிய இந்த சோசியல் ஜஸ்டிஸ் என்று சொல்லக்கூடிய சமூக நீதி உருவாக்கத்தில் தமிழ் சமூகத்திற்கு பெரிய பங்களிப்பு உண்டு அதன் விளைவாக பெரிய மாற்றங்களை நாம் கண்டிருக்கிறோம் அதில் ஒரு சிறிய பகுதி தான் இந்த இட ஒதுக்கீடு.

இந்தத் தன்மைகள் எல்லாவற்றையும் கடவுள் மறுப்பு, ராமாயண எதிர்ப்பு, மூடநம்பிக்கை அழிப்பு இவை எல்லாம் இந்த சமூக நீதிக்குள் இருந்து உருவாகக்கூடிய ஒரு விஷயம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்." என்று குறிப்பிட்டு ஏற்புரையாற்றினார்.

நிறைவாக ஒருங்கிணைப்பாளர் துரைக்கண்ணன் அவர்கள் " இந்த ஆய்வுக் கூட்டமே ஒரு உரையாடலை முன்னெடுத்துச் சென்றுள்ளது. ஆய்வாளருக்கும் எழுத்தாளருக்கும் இடையே நடந்த இந்த உரையாடல் மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. நாம் வேண்டுவது இந்த உரையாடலைத்தான். "என்று குறிப்பிட்டு கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்தார்.

கலந்துரையாடலில் மருத்துவர் சோம. இளங்கோவன் அவர்கள் "இன்று ஒரு அருமையான நிகழ்ச்சி. கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும் என்ற அளவிலே முக்கியமான கருத்துக்கள். தந்தை பெரியாரின் கடவுள் மறுப்பு என்பதும் சமூகநீதி என்பதும் மனித நேயத்தின் அடிப்படையில்தான். அதைச் சொல்லி இருக்கிறார்கள். அடுத்த சமூக நீதி எவ்வளவு முக்கியம், அதன் வரலாறு என்ன? என்பதை எல்லாம் சிறப்பாக ஆராய்ச்சி செய்வதற்கு மிக்க நன்றி.அய்யா ராஜன் பாபு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள் ஒரு சின்ன குழு வந்து ஒரு பெரிய குழுவிடம் எப்படி மாற்றத்தை உண்டாக்க முடியும் என்ற கேள்வி மிக முக்கியமான கேள்வி. அதைப் புரிந்து கொண்டாலே நமக்கு சமூக நீதி விளங்கி விடும். பெரிய தமிழ் அறிஞர்கள் இருந்த இடத்திலே தமிழில் மூன்று எழுத்துக்கள் தவிர மீதியெல்லாம் சமஸ்கிருதத்தில் இருந்துதான் வந்தது என்று வெளிப்படையாக ஒருவர் சொல்லி அதை தமிழ் அறிஞர்கள் மறுக்க முடியாத நிலையில் இருந்தார்கள் என்பது தான் வரலாறு. கால்டுவெல்லும் தேவநேயப்பாவாணரும் இல்லாமல் இருந்திருந்தால் அப்படியே ஆக்கி இருப்பார்கள்.உங்களுடைய தாத்தா, உங்களுடைய பெற்றோருடைய திருமணப் பத்திரிக்கையை நீங்கள் பார்த்தீர்கள் என்றால் தமிழ் எங்கே சென்றது என்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ளலாம் ஆகவே நமக்கு மந்திரமும் புரியாத மந்திரம். எப்படி அலெக்சாண்டர் வந்து சூபிடர் என்னும் கடவுளிடமிருந்து எனக்கு பவர் வருகிறது என்று சொன்னாரோ அது மாதிரி மந்திரத்தால், மந்திரத்திற்குக் கடவுளே கட்டுப்பட்டவர் என்ற கொள்கையை மன்னர்களிடம் செலுத்தி மக்களை முட்டாள்கள் ஆக்கியது தான் ஆரிய பண்பாடு அதை நாம் ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும். பெரியார் சொல்வதெல்லாம் 'நான் சொன்னேன் என்பதற்காக ஏற்றுக் கொள்ளாதீர்கள். நீங்கள்

சிந்தித்து உங்களுக்கு சரியெனப் பட்டால் ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று தான் சொன்னார். பேரா.அரசு அய்யா அவர்கள் மிகச் சிறப்பாக சொல்லிவிட்டார்கள் நீங்கள் இன்று வந்து கலந்து கொண்டது எங்களுக்கு மிகவும் அருமை உங்களுடைய கருத்துக்களை வரவேற்கிறோம் அதே நேரத்தில் மக்கள் சிந்தித்து அவரவர் முடிவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக நடத்திய துரைக்கண்ணன் அவர்களுக்கும் இளமாறன் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி என்று குறிப்பிட்டு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து முனைவர் வா.நேரு,மருத்துவர் சரோஜா இளங்கோவன் ஆகியோர் கருத்து தெரிவித்தனர். மருத்துவர் சரோஜா இளங்கோவன் அவர்கள் தனது கருத்துரையில் "நிகழ்வு மிகச்சிறப்பாக இருந்தது நான் பெண்கள் நோக்கில் பார்க்கிறேன் வெள்ளைக்காரர்கள்தான் நிறைய மருத்துவமனைகளை ஆரம்பித்தார்கள் நாங்கள் பிறந்தது எல்லாம் அந்த மருத்துவமனையில்தான். அந்தக் காலத்தில் பிள்ளை பிறப்பு என்பது செத்துப்பிழைப்பது. இந்த மருத்துவமனைகள் எல்லாம் இல்லாமல் போயிருந்தால் நாங்கள் எல்லாம் கூட இருந்திருக்க மாட்டோம் அதை நினைத்து நான் மிக நன்றியாக இருக்கிறேன்.மருத்துவம் மட்டுமல்ல, கல்வி, போக்குவரத்தையும் அவர்கள் கொடுத்தார்கள். அது தவிர இந்த மார்புச் சேலைப்போராட்டம். பெண்கள் மார்பை மூடக்கூடாது என்று வந்த பொழுது அந்தப் பெண்களுக்கு வேறு யாரேனும் உதவி செய்தார்களா? ஒருத்தரும் இல்லை. ஒரு ஆங்கிலேயருடைய மனைவி, சட்டை எல்லாம் தைத்துக் கொடுத்து இதைப் போட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி அதற்குப் பெரிய எதிர்ப்பு எல்லாம் வந்தாலும் அந்தப் பெண்களுக்கு உதவி செய்தார்கள். இதற்கு மேலே ஒரு பெண் தன்னுடைய மார்பகத்தை அறுத்துக் கொண்டு இந்தக் கொடுமை நீங்குவதற்காகப் போராடினார் இவர்கள் எல்லாம் வரவில்லை என்றால் அந்த மாதிரி செயல்கள் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கும்.

ஜாதியைப் பற்றி இந்த ஆட்கள் வெள்ளையர்களிடம் என்னதான் காதைக் கடித்தாலும் அவர்கள் நம்பாமல் எல்லா மக்களும் சமம் என்றுதான் அடித்துச் சொன்னார்கள் அதில் கொஞ்சமாவது மக்கள் அப்போது மாறினார்கள். அப்புறம் பெரியார் அய்யா வந்தார். இதையெல்லாம் நினைத்து பார்த்து நான் மிக்க நன்றியோடு தான் இருக்கிறேன் .அவர்கள் மட்டும் வராமல் இருந்திருந்தால் இந்தியா எப்படி இருந்திருக்கும் ?சேர,சோழ மன்னர்கள் போல இருந்திருந்தால் பார்ப்பனர்கள் சொல்லைக் கேட்டுக் கொண்டு நடந்திருப்பார்கள் நாம் எல்லாம் அழிந்து போய் இருப்போம் நாம் நன்றியாக இருக்க வேண்டும்." என்று குறிப்பிட்டார்.

மிகச்சிறப்பாக நிகழ்வை ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆய்வுரைக்கு,ஏற்புரைக்கு முன்னும் பின்னும்,உரையாளர்களை அறிமுகப்படுத்தி,அவர்களின் உரைகளுக்குப்பின் அவர்களின் உரைகளிலிருந்து மிக முக்கியமான கருத்துக்களை குறிப்பிட்டு மிகச்சிறப்பாக இந்தத் திராவிடப்பொழில் இதழ் ஆய்வரங்கை ஒருங்கிணைத்த துரைக்கண்ணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**Notes :**

**Notes :**

**Notes :**